உ

கடவுள் துணை.

ஆண்பெண் அவயவங்களின்

# இரேகைசாஸ்திரம்.

புருஷசாமுத்திரிகம் ஸ்ரீசாமுத்திரிகம்
இவைமூன்றும் அடங்கியிருக்கின்றன.

இவை
சிலசோதிடவல்லவ ரனுக்கிரகத்தின்படி
செஞ்சிமானகரம்
**ஏகாம்பரமுதலியா ரவர்களால்**
எழுதப்பட்டு.

3-வது, பதிப்பு. காப்பி-1000.

இதன் விலை அணா-8.

பூவிருந்தவல்லி
சுந்தரமுதலியார் குமாரர்
**பூ. சு. குப்புசாமி முதலியாரது**
ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

**1920**
சென்னை - புரசை.

Registered Copy Right.

உ

தேவிசகாயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்? ஆண் பெண் அவயவங்களின் இரேகைசாஸ்திரமும், புருஷசாமுத்திரிகம், ஸ்ரீசாமுத்திரிகம், இவை மூன்றும் அடங்கிய இந்நூலை செஞ்சி-ஏகாம்பரமுதலியாரவர்களால், எழுதி முடிவுபெற்றதை சென்னை புரசை வல்லம்பங்காருசெட்டிவீதி 4-வது, நெம்பர் வீட்டிலிருக்கும் பூ. சு. குப்புசாமிமுதலியார் ஷை யாருக்குப் பொருளுதவிபுரிந்து சகலசுதந்தரமும் பெற்றுக்கொண்டமையால் இது ஷை பூ. சு. குப்புசாமிமுதலியார் அனுமதி யின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம் கனம்பொருந்திய கெவர்மெண்ட் சட்டப்படி (ரிஜிஸ்தர்காபிரயிட்) (Registered Copy Right) செய்யப்பட் டிருக்கிறது.

---

## புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| பஞ்சபூதரகசியமென்னும் பஞ்சபக்ஷிரத்தினம். | 0 | 12 | 0 |
| கன்ருவிநாடகம் இதுமிகவும் அருமையானகதை. | 0 | 8 | 0 |
| சத்தியவசனிசரித்திரம். | 0 | 8 | 0 |
| கலியுகவினோதகதை 21-கதைகளடங்கியது. | 0 | 8 | 0 |
| அலிபாதுஷாகதை. | 0 | 3 | 0 |
| அரியபன்சண்டைஅம்மானை. | 0 | 3 | 0 |
| மருமக்கள்துயரஅம்மானை. | 0 | 3 | 0 |
| மூலிகைஜாலரத்தினம். | 0 | 4 | 0 |
| ஷை இரண்டாம்பாகம். | 0 | 4 | 0 |
| ஊர்வசி இரசவாத சிட்கா. | 0 | 4 | 0 |
| சர்வவிஷமுறிப்பு. | 0 | 1 | 0 |
| பாச்சிகைசாஸ்திரம். | 0 | 1 | 0 |
| மலையாளகுறிசாஸ்திரம். | 0 | 1 | 0 |

இப்படிக்கு,

**பூ. சு. குப்புசாமி முதலியார்**

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம்.

வேப்பேரி போஸ்ட் மதராஸ்.

உ

கடவுள் துணை.

## ஆண் பெண் அவயவங்களின்

# இரேகை சாஸ்திரத்தின் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
|---|---|
| புருஷலக்ஷண ரேகையறிய பாதங்களின் பலன் | 9 |
| கால்நிகங்களின்பலன் | 10 |
| கால்விரல்களின்பலன் | 0 |
| புரங்காலின்பலன் | 11 |
| கணுக்காலின்பலன் | 0 |
| கண்டக்காலின்பலன் | 0 |
| கால்ரோமத்தின்பலன் | 0 |
| முழங்காலின்பலன் | 12 |
| தொடைகளின்பலன் | 0 |
| இலிங்கபலாபலன் | 0 |
| விருஷணபலன் | 13 |
| மூத்திரபலன் | 0 |
| வீரியபலன் | 0 |
| கால்நீளபலன் | 14 |
| அரையின்பலன் | 0 |
| சூத்தாம்பட்டையின்பலன் | 0 |
| அடிவயற்றின்பலன் | 0 |
| வயற்றின்பலன் | 0 |
| நாபியின்பலன் | 0 |
| வயர்மடிப்புகளின்பலன் | 15 |
| விலாபக்கங்களின்பலன் | 0 |
| ஸ்தன்னியபலன் | 16 |
| மார்பின்பலன் | 0 |
| தோள்பட்டையின்பலன் | 0 |
| கஷ்கங்களின்பலன் | 17 |
| முதுகின்பலன் | 0 |
| கைகளின்பலன் | 0 |
| முழங்கைகளின்பலன் | 18 |
| மணிக்கட்டின்பலன் | 0 |
| உள்ளங்கைரேகையின்பலன் | 0 |
| புருஷாளுக்கும் ஸ்ரீகளும் பார்க்க கைகாணும்விபர | 21 |
| கைவிரலின்பலாபலன் | 0 |
| கைநகங்களின்பலன் | 0 |
| கட்டைவிரலின்பலன் | 0 |
| சுட்டுவிரலின்பலன் | 22 |
| கழுத்தின்பலன் | 0 |
| மோவாய்கட்டையின்பலன் | 0 |
| மீசையின்பலன் | 23 |
| வாயின்பலன் | 0 |
| உதடின்பலன் | 0 |
| பற்களின்பலன் | 0 |
| நாக்கின்பலன் | 24 |
| மூக்கின்பலன் | 0 |
| கண்களின்பலன் | 0 |
| புருவங்களின்பலன் | 0 |
| முகக்குறியின்பலன் | 25 |
| காதின்பலன் | 0 |
| கன்னங்களின்பலன் | 0 |
| தாடையின்பலன் | 26 |
| சிரசின்பலன் | 0 |
| தலைமயிரின்பலன் | 0 |
| சரீரபலன் | 0 |

| பெயர். | பக்கம். |
| --- | --- |
| தேகசாயலின்பலன் | 27 |
| புருஷரேகைபொதுபலன் | 0 |
| ஆண்பால்அவயவரேகை சாஸ்திரம்-முற்றிற்று. | |
| ஸ்ரீஉள்ளங்காலின்பலன் | 33 |
| ஸ்ரீகால்விரல்களின்பலன் | 0 |
| ஸ்ரீகால்நகங்களின்பலன் | 34 |
| ஸ்ரீபாதங்களின்பலன் | 0 |
| ஸ்ரீகணுக்காலின்பலன் | 0 |
| ஸ்ரீகுதிக்காலின்பலன் | 0 |
| ஸ்ரீநடைசாயலின்பலன் | 0 |
| ஸ்ரீகண்டைகால்சதைபலன் | 35 |
| ஸ்ரீதொடைகளின்பலன் | 0 |
| ஸ்ரீபுட்டத்தின்பலன் | 36 |
| ஸ்ரீயிடுப்பின்பலன் | 0 |
| ஸ்ரீவயற்றின்பலன் | 0 |
| ஸ்ரீநாபியின்பலன் | 37 |
| ஸ்ரீமார்பின்பலன் | 0 |
| ஸ்ரீகவ்ஷகங்களின்பலன் | 0 |
| ஸ்ரீபுஜங்களின்பலன் | 0 |
| ஸ்ரீதோள்களின்பலன் | 38 |
| ஸ்ரீமுதுகின்பலன் | 0 |
| ஸ்ரீகைகளின்பலன் | 0 |
| ஸ்ரீஉள்ளங்கையின்பலன் | 0 |
| ஸ்ரீவிரல்களின்பலன் | 39 |
| ஸ்ரீகழுத்தின்பலன் | 0 |
| ஸ்ரீமோவாய்கட்டைபலன் | 40 |
| ஸ்ரீஉதடுகளின்பலன் | 0 |
| ஸ்ரீவாயின்பலன் | 0 |
| ஸ்ரீபற்களின்பலன் | 0 |
| ஸ்ரீநாக்கின்பலன் | 41 |
| ஸ்ரீகண்டதொனியின்பலன் | 0 |
| ஸ்ரீகாக்கைதொனியின்பலன் | 0 |
| ஸ்ரீமூக்கின்பலன் | 0 |
| ஸ்ரீகன்னங்களின்பலன் | 42 |
| ஸ்ரீகண்புருவத்தின்பலன் | 43 |
| ஸ்ரீமுகக்குறியின்பலன் | 0 |
| ஸ்ரீநெற்றியின்பலன் | 0 |
| ஸ்ரீதாடையின்பலன் | 44 |
| ஸ்ரீகாதுகளின்பலன் | 0 |
| ஸ்ரீகன்னங்களின்பலன் | 0 |
| ஸ்ரீதலையின்பலன் | 0 |
| ஸ்ரீதலைமயிர்களின்பலன் | 45 |
| ஸ்ரீதேகவர்னபலன் | 0 |
| ஸ்ரீரேகையின்பொதுபலன் | 46 |
| ஸ்ரீஅவயவரேகைசாஸ்திரம் முற்றிற்று. | |
| ஆண்பெண் அஸ்தரேகையின் விபரங்கள் | 49 |
| சங்குசக்கரரேகையின்பலன் | 0 |
| மச்சரேகையின்பலன் | 0 |
| ய[illegible]தானியரேகையின்பலன் | 0 |
| குடரேகையின்பலன் | 0 |
| கும்பரேகையின்பலன் | 0 |
| சூரியசந்திரரேகைபலன் | 50 |
| தாமரைப்பூரேகையின்பலன் | 0 |
| மாதளம்பூரேகையின்பலன் | 0 |
| வேல்ரேகையின்பலன் | 0 |
| சிங்கரேகையின்பலன் | 0 |
| ரிஷபரேகையின்பலன் | 0 |
| யவரேகையின்பலன் | 51 |
| ரேகைகளின்பொதுப்பலன் | 0 |
| வலதுகைபெருவிரலின்பல | 52 |
| ஆள்காட்டிவிரலின்பலன் | 53 |
| நடுவிரலின்ரேகையின்பலன் | 0 |
| பவுத்திரரேகையின்பலன் | 54 |
| சிருவிரலின்ரேகையின்பலன் | 0 |
| யவமாலைரேகையின்பலன் | 55 |
| ஸ்ரீகளின் உள்ளங்கையின் ரேகைபலாபலன் | 0 |
| பெருவிரலின்ரேகைபலன் | 57 |
| சுண்டுவிரலின்ரேகைபலன் | 0 |
| நடுவிரலின்ரேகைபலன் | 58 |
| பவுத்திரவிரலின்ரேகைபல | 0 |

| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| சிருவிரலின்ரேகையின்பல | 59 | அரசர்களோடு மற்றவாகளின் லக்ஷணமறிய | 0 |
| புருஷசாமுத்திரிகம். | | மீசையின்பலன் | 71 |
| இராஜனுவதறிய | 60 | காதின்லட்சணமறிய | 0 |
| வேறுபலன் | 0 | கன்னம் மூக்குஇவைகளின்லட்சணமறிய | 0 |
| புணரத்தகாதவர்களைபுணர் | 0 | தும்பலின்பலன் | 72 |
| உரோமசங்கையறிய | 61 | கண்களின்லட்சணமறிய | 0 |
| பரதேசமரணமறிய | 0 | புருஷலட்சணமறிய | 73 |
| ஆண்குறியின்பலாபலன் | 0 | நெற்றியின்லட்சணமறிய | 0 |
| பீஜக்குறியின்பலன் | 62 | நெற்றியிலுள்ளரேகைபலன் | 0 |
| மூத்திரக்குறியின்பலன் | 0 | அழுகையின்பலன் | 74 |
| சுக்கிலபரிமளபலன் | 63 | சிரிப்பின்பலன் | 0 |
| சுக்கிலமச்சபலன் | 0 | நெற்றியின்ரேகைபலன் | 0 |
| பிருஷ்டபலன் | 0 | சென்னியின்பலன் | 75 |
| பாரிசபலன் | 64 | புருஷலட்சணபொதுபலன் | 0 |
| உயர்ந்தவயற்றின்பலன் | 0 | ஸ்ரீசாமுத்திரிகம் | 77 |
| உருண்டவடிவின்பலன் | 0 | பாதலக்ஷணம்கணுக்கால் முழங்கால்பலன் | 0 |
| வயற்றின்மடிப்பின்பலன் | 0 | | |
| நாபிபலன் | 65 | | |
| வயர்மடிப்பின்பலன் | 0 | தொடைலட்சணமும் இடையொடுநாபிபலனறி | 0 |
| புணரத்தகாதமாதரை சேருதலறிய | 0 | இடைமார்பு கழுத்து இவைகள் லக்ஷணமறிய | 78 |
| மார்பின்பலன் | 0 | | |
| தோள்கழுத்துபலன் | 66 | உதடுபற்களின் லக்ஷணபல | 0 |
| கஷ்கங்களின்பலன் | 0 | ஸம்பாஷணைபலன் | 0 |
| கையின்லட்சணம் | 67 | புருவமுதலியலட்சணம் | 0 |
| நகத்தின்லட்சணம் | 68 | செவிசென்னிபலன் | 70 |
| யவதான்னியரேகைபலன் | 0 | இராஜபத்தினியாவதறிய | 0 |
| மகாராஜனுவதற்குரேகைப | 0 | சுமங்கலியாக பிள்ளைகளைபெற்றுவாழ்வளெனவறி | 0 |
| தனவந்தனுக்கும்ரேகையரிய | 0 | | |
| திரிகோணரேகைபலன் | 69 | கணவனரசனுவானென்பத | 0 |
| நாமுயுசும்தரித்திரனுமாவ | 0 | ஆயுசுரேகையறிய | 80 |
| மோவாய்கட்டைலக்ஷணம் | 0 | அற்பாயுசு தீற்காயுசுபிள்ளைகளில்லையுண்டெனவரி | 0 |
| உதட்டின்லக்ஷணம் | 71 | | |
| யோகியாவதுதநிகனுவது தரித்திரனுவதுமறிய | 0 | லட்சணமறியும்விபரம் | 0 |
| | | பாபியும்விபசாரியுமறிய | 0 |


அட்டவணை முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# அநுபோகவயித்திய

## பிரம்மரகசியம்.

8 - காண்டம் சேர்ந்தது.

இந்த அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயிசுவாமிகளால் நெடு வருடங்களாக காசிமுதலான திவ்வியக்ஷேத்திர யாத்திரை வாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும் ஒவ்வொருவரும் வயித்தியரைவேண்டாமல் தாங்களே செய்துக்கொள்ளத்தகுந்த முன்னூறு முறைகளடங்கிய (அநுபோகவயித்தியபிரம்மரகசியமென்னும்) புத்தகம் **1-2-3-4-5-6-7-8,** காண்டங்களாகப் பிரித்து அச்சிட்டு முடிந்திருக்கிறது. முதற்காண்டத்தில் மாத்திரம் சுமார் **(300)** முறைகளுக்குக் குறையாமலும் அடங்கியிருப்பதன்னியில் ஒவ்வொருமருந்துகளின் பாகமும் இடைக்குறிப்பும், புடதிட்டமும், அறைப்புகணக்கும், அளவின்நிதானமும், செய்பாகமும், உண்பாகமும், பத்தியவிதியும், பரிகாரநெறியும், இவைகள்யாவும் உயர்ந்ததாளில் அச்சிட்டு புல்கலிகோ பயிண்டுசெய்து விக்கிறயஞ்செய்துவருகிறது. அவரவர்கள் இஷ்டம்போல ஒவ்வொரு காண்டங்கள் தனித்தனியாகவும், எட்டுகாண்டங்களும் ஒரேகட்டடமாகவும், முன்பணம் அநுப்பாதவர்கட்கு வால்யூபேபில் போஸ்டாகவும் அநுப்பப்படும்.

| | | | |
|---|---|---|---|
| காண்டம் 1-க்கு விலை அணா | 0 | 8 | 0 |
| ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம். | 4 | 0 | 0 |

இப்படிக்கு,

**பூ. சு. குப்புசாமிமுதலியார்**

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடம்.

வேப்பேரி போஸ்ட் மதராஸ்.



உ

கடவுள் துணை.

ஆண்பெண் அவயவங்களின்

# இரேகை சாஸ்திரம்.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

சீராரு மிப்புவியோர் சித்தியுடன் கண்டுணர
ஏராருஞ் செந்தமிழா லெழிலாக—நேராரும்
விந்தையுள ரேகைசாஸ்திரம் விரித்துரைக்க வாசகமாய்
தந்திமுகத் தைங்கரந்தாட் காப்பு.

## நூன்முகம் வாசகம்.

### புருஷலக்ஷண ரேகையறிய.

பாதங்களின் பலன்.

1-வது. பார்க்கப் பாதங்களானது பூமியின்மீது பரவாமல் இருக்குமாகின் - அப்புருஷன் சகலவேதநூற்களையும் அபேட்சையோடுகற்றுணர்வன், பாதங்களானது பேதமில்லாமல் சிதராமல் இருக்குமாகின்-நீதியானது தப்பி நிந்தனையாகிய சொல்லுக்கு ஆளாகுவான்.

2-வது. பாதங்களின் அடியில் வில்லின் பிடியைப்போல ஒரு ரேகையுண்டாகி விரல்களில் பொருந்தாமல் அடிவிரலின் கூட்டாக விருக்குமாகின்-நன்மையான வாழ்வு வாழ்குவன் அன்றியும் அரசனுக்குச் சமானமென்றும் சொல்லலாம்.

3 - வது. பாதத்தின் பெருவிரலின் அடியில் மேல்கூறிய ரேகை கூடி ஒன்றுக்கொன்று இடையற்றுப்போகாமல் இருக்கு

மாகின்-அப்புருஷன் அரசனைப்போற் றிருவானது படைத்து வாழ்ந்து பின்பு சிறுமையுண்டாகி பிச்சைக்காரனுகுவான்; அன்றியும் பாதத்தின் பெருவிரலின் அடியிற் சங்கிலி ரேகையானது உருக்கள்யாவும் ஒன்றுபோலாக இருக்குமாகின் -அரசர்கள் உதவியானது பெற்றுவாழ்வான்.

4-வது. உள்ளங்கால் சிவப்பாயிருந்தாலும் -வேர்வை விடாமலிருந்தாலும் - அப்புருஷன் தனவந்தனுவான், மிருதுவாயிருந்தால் சாசுவதமானபுண்ணியகாரியங்களை செய்கிறவனுயும் தைரியசாலியாயும் ஜாக்கிரதையுள்ளவனுயும் தனவந்தனுயும் ஆவான், வேர்வைவிடாமல் மிருதுவாய் தாமரைவர்ணமுடையதாயிருந்தால் - ராஜாவாவான், மொரத்தைப்போல விசாலமாய் இருந்தால் - தரித்திரனுவான், நீளமாயிருந்தால் - தேசசஞ்சாரியாவான்.

## கால்நிகங்களின் பலன்.

5-வது. கால்நிகங்கள் மாமிசத்தைப்போல் சிவப்பாயிருந்தால்-ராஜாவாவான், தாம்பிரத்தைப்போல் சிவப்பாயாவது தாமரையைப்போல் வெண்மையாயாவது யிருந்தால் - தனவானுவான், கொஞ்சம் சிவப்பாயிருந்தால் - பூஸ்திதிகள் உண்டாகும், கொஞ்சம் வெண்மையாயிருந்தால் - சாமானியஸ்திதி உண்டாகும், கருப்பாயிருந்தால்-ரோகியாவான், பச்சையாயிருந்தால்-துராசாரனுயும் பாபியாயும் இருப்பான், விசாலமா யிருந்தால்-தனவந்தனுவான், முனைகள் வக்கிரமாயிருந்தாலும் - திரிசூலத்தைப்போல் கூராயிருந்தாலும்-தரித்திரனுவான்,புழுத்துப்போயிருந்தால்-துக்கியாவான்.

## கால் விரல்களின் பலன்.

6 - வது. கால்விரல்கள் சிவப்பாயிருந்து மத்தியில் சந்தில்லாமல் ஒன்றேடொன்றுசேர்ந்து சூடோடு அழகாயிருந்தால்-ராஜனுவான், ஒன்றேடொன்றுசேராமலிருந்தால் - சாமான்னியஸ்திதி உண்டாயிருக்கும், கிழிந்தமாதிரியாக சன்னமாயிருந்தால் - தரித்திரனுவான், அடிவைக்கும்போது விரல்கள் சந்தில்லாமலிருந்தால் - தரித்திரனுவான், கட்டைவிரலைக் காட்டிலும்

அடுத்தவிரல் நீளமாயிருந்தால்-அனேகஸ்திரீகளோடு போகமனுபவிப்பான், சுண்டுவிரல் மிருதுவாயிருந்தால் - நல்லபிரசித்தனுவான், நீளமாயிருந்தால் - தனிகனுவான், கோணலாயாவது மேல்திரும்பியாவது உலர்ந்தாவதுயிருந்தால்-துக்கியாவான்.

## புறங்காலின் பலன்.

7-வது. புறங்கால் ஆமையோட்டைப்போல் இருந்து கொஞ்சம் சூடாயிருந்தால்-ராஜ்யபரிபாலனமாவது லோகபூஜிதை யாவது வெகுசாதுர்யமாவது கிடைக்கும்.

## கணுக்காலின் பலன்.

8-வது. கணுக்கால் எலும்புகள் தெம்படாம லிருந்தால்-பூபதியாவான், அவைகள்சமமாயிருந்தால் தனவந்தனுவான்.

9-வது. குதிக்கால் பூச்செண்டைப்போல் மிருதுவாயும்குண்டாயுமிருந்தால்-ராஜ்பபரிபால்னமாவது விசேஷசம்பத்தாவது கிடைக்கும்.

## கண்டைகாலின் பலன்.

10-வது. கண்டைக்கா லிரண்டும் சிறுத்து தேய்ந்து தேகம் நேர்ததியாக சிவந்துதோன்றில்-அப்புருஷன்வயதுபனிரண்டில் சந்ததியில்லாதவற்கு ஸ்திரீகாரமாகப்போய் சேர்வான்.

11 - வது. கண்டைக்கால் சிறுத்தும் குண்டாயும் இருந்து மயிர் மூடிக்கொண்டிருந்தால்-ராஜனுவான், யானை தொண்டலத்தைப்போல்யிருந்தால்-தனவானுவான், நாயிக்குயிருப்பதைப் போலாவது நரிக்கு யிருப்பதுபோலாவது யிருந்தால்-தரித்திரனுவான், குட்டையாயிருப்பது-சுபம்.

## கால்ரோமத்தின் பலன்.

12-வது, கால்களில்உள்ள ரோமங்கள்யாவும் கருத்தும் மோதிரம்போல் சுருண்டுயிருக்க-அப்புருஷன் சாம்பிராஜிய யோகவானுவான், உரோமமானது நெருங்கப்பற்றியு மிருக்கில் -விஷ்

ணுவின்கிருபையும் திருமாதுகடாட்சமும் உண்டாகி பூமிமுழு தும் ஆளும் வல்லவனுவான்.

## முழங்காலின் பலன்.

13-வது. முழங்கால்பெரிதாய் இரண்டும் சமமாயிருந்து மாமிசம் மூடிக்கொண்டிருந்தால் - அப்புருஷன் பூபாலகன் ஆவான், பெரியவைகளாய் மாமிசமில்லாமலிருந்தால்-தீர்க்காயுசுள்ளவனுயிருப்பான், சின்னவைகளா யிருந்தால் - லோகபூஜியதை உண்டாகும், விசாலமாயிருந்தால் - தரித்திரனுயிருப்பான், குழிகள் விழுந்திருந்தால் - ஸ்திரீகளின் வலைக்குள் அகப்பட்டுக் கொள்வான்.

## தொடைகளின்பலன்.

14-வது. தொடைகள் இரண்டும் யானைத்தொண்டலத்தைப் போல்இருந்தால்-அப்புருஷன் பூபாலனுவான், பெரியனவாயும் உயரமாயும் குண்டாயிருந்து மயிர்களில்லாமல்இருந்தால்-தனவானுயிருப்பான், மயிர்களிருந்து சன்னமாயிருந்தால் - தரித்திரனுவான்.

## இலிங்கபலாபலன்.

15-வது. இலிங்கம்பார்க்கச் சின்னதாயிருந்தால்-அப்புருஷன் தனவந்தனுயிருப்பான், பெரிதாயிருந்தால் - பிள்ளைகள் இல்லாமல்போகும், சன்னமாயிருந்து குட்டையா இருந்தால் ராஜனுவான், அகலமாயும் நீளமாயுமிருந்தால் - தரித்திரனும் துஷ்டனுமாவான், இடப்பக்கம் சாய்ப்பாயிருந்தால் - துராத்மாயாவது தரித்திரனுவது ஆவான், அதிக நீளமா யிருந்தால்-துக்கியும் தரித்திரனும் ஆவான், நேராயிருந்தால் - சந்தானமுடையவனுவான், கீழ்க்கு சாய்ந்திருந்தால்-ஏழையாவான், மிருதுவாயிருந்தால்-மூத்திரவியாதியினுல் துன்பமடைவான், கண்டம் நரம்புகள் மூடியிருந்தால் - அல்பசந்தானம், கொணையில் கீற்றுயிருந்தால்-தனவான்களுடைய ஸ்திரீகளோடு சம்போகம் கிடைக்கும், லிங்கம்சிவப்பா யிருந்தால்-தனவந்தனுவான், வெண்மையாயிருந்தால்-தரித்திரனுவான்.

## விருஷணபலன்.

16 - வது. விருஷணங்கள் இரண்டும் யெல்லாவிஷயத்திலும் சமமாயிருந்தால்-அவன் ராஜனுவான், இரண்டும் ஓரேவிதமா யில்லாதவன்-ஜாரனுவான், அவை மேலுக்கு ஒட்டிக்கொண்டிருந்தால்-அல்பாயுசு, கீழுக்குநழுவியிருந்தால்-தீர்க்காயுசு, ஒன்றுமேலேயிருந்து இரண்டாவது நழுவி யிருந்தால்-பிரமேகத்திற்கு பாத்திரனுவான், புட்டையாவது உண்டாகும், கோணையாயிருந்தால்-சேவகனுவான், தோல்மாத்திரம் உள்ளவைகளாயிருந்தால்-நபும்ஸகனுவான், ஒருவிருஷணமாத்திரம் இருக்கின்றவனுக்கு நீர்கண்டம்.

## மூத்திரபலன்.

17-வது. சாதாரணமாக மூத்திரம்இரங்கும்போது இரண்டு மூன்று தாரையாய் மிகவும் தாட்டியாய் இடதுபக்கத்தி லிருந்து வலதுபக்கமாய்விழுந்தால்-அப்புருஷன்ராஜனுவான், சொட்டு சொட்டாய் நீர்தெளித்தமாதிரியாய் துளிதுளியாகவிழுந்தால்-தரித்திரனுவான், ஒரேதாரையாய் சன்னமாய்விழுந்தால்-புத்திமானும் ரூபவானுமான புத்திரருடையவனு யிருப்பான், பெரியதாரையாய் வெகுதாட்டியாக வந்தால் - தனவந்தனுவான், அதிக இரைச்சலோடுவந்தால்-சவுக்கியம் உண்டாகும், இரைச்சலில்லாமல்வந்தால்-தரித்திரம் உண்டாகும், துவாரம்உலர்ந்திருந்தால்-ஏழையும் குரூபியும் ஆவான்.

## வீரியபலன்.

18-வது. வீரியம் புஷ்பத்தைப்போல் வாசனை யுடைத்தானதாயும் ஸ்படிகத்தைப்போல் வெண்மையாயுமிருந்தால் - அப்புருஷன் ராஜனுவான், தேன்வாசனையை யுடைத்தானதா யிருந்தால்-தனவந்தனும் ஸ்திரீலோலனுமாவான், மீன்நாற்றம்அடித்தால்-ஜாரனும் புத்திரவானுமாயிருப்பான், துர்க்கந்தமா யிருந்தாலும் கருப்பாயிருந்தாலும்-தரித்திரனுவான், மாமிசவாசனையடித்தால்-மகாபோகியாவான், கள்வாசனையடித்தால் - புத்திரவானுயும் கர்மநிஷ்டனுயும் இருப்பான், உப்புவாசனையானல்-தரித்திரவான், நீராயிருந்தால்-பெண்சந்தானமுடையவனுவான்

சீக்கிரத்தில்விழுந்தால்-பூரணாயுசு உடையவனாவான், வெகுபொருத்துவிழுந்தால்-அல்பஆயுசுஉடையவனாவான்.

## கால் நீளபலன்.

19-வது. கால்கள் நீளமாயிருந்தால்-அப்புருஷன் சீக்கிரமாய் நடக்கிறவனாய் ராஜசம்மானத்தையடைவான், குட்டையாயிருந்தால்-தரித்திரனாவான், முழங்காலுக்குமேல்உயரமாயும் கீழே குட்டையாயும் இருப்பது-நல்லது, மிருதுவாயிருந்தால் - வாகனபதவி, சக்கிரமிருந்தால்-தேசசஞ்சாரி.

## அரையின்பலன்.

20-வது. அரைபெரிதாயிருந்தால் - தரித்திரனாவான், மாமிசபுஷ்டியாயிருந்தால்-சுகஜீவனம்செய்வான், இருக்கவேண்டியதற்கும் பாதியேயிருந்தால்-ரோகியாவான், தளை யிடுப்பைப்போலிருந்தால்-பூபரிபாலனஞ்செய்வான்.

## சூத்தாம்பட்டையின்பலன்.

21-வது. சூத்தாம்பட்டை சிம்பத்தினுடையதுபோலிருந்தால் - ராஜனாவான், குரங்குப் பட்டையைப்போலாவது ஒட்டைப் பட்டையைப்போலாவது இருந்தால்-தரித்திரம் சம்பவிக்கும்.

## அடிவயற்றின்பலன்.

22-வது. அடிவயறு சமானமா யிருந்தால் - போகியாவான், யானையைப்போலிருந்தால்-தரித்திரனாவான்.

## வயற்றின்பலன்.

23-வது. வயறுஎடுப்பாயிருந்தால் - அப்புருஷன் ராஜனாவான், ஏத்தக்குறைச்சலாயிருந்தால் - கபடியாவான், சமமாயிருந்தால்-சுகஜீவனம்செய்வான், உள்ளுக்குப்போயிருந்தால் - தரித்திரனும் அதிகமாக போஜனம் உண்ணுபவனு மாவான், விசாலமாயிருந்தால்-புத்திரவந்தனாவான், சக்கிரமிருந்தால்-மிருஷ்டான்னம் சாப்பிடுவான்.

## நாபியின்பலன்.

24 - வது. நாபியென்னும்தொப்புள் விசாலமாய் சுத்துபுரம் எடுப்பாயிருந்தால் - அப்புருஷன் போகியாவான், சின்னதாய்

குழிகாணப்படாமலிருந்தால் - துக்கியாவான், ஒருமுடிம்பு நடுவிலிருந்தாலும் யெடுப்பாயிருந்தாலும் - தரித்திரனுய் வயற்றுவலியால் அவஸ்தைப்படுவான், வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்கு சுழிதிரும்பியிருந்தால்- மோசக்காரனுவான், இடதுபக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கு சுழிதிரும்பி யிருந்தால்- நல்லவிஷயத்தில் பிரவர்த்தி யுள்ளவனுயும் கியாபகசக்தி யுடையவனுயும் இருப்பான், இரண்டுபக்கத்திலும் குருக்கே வியாபித்திருந்தால்-தீர்க்காயுசுள்ளவனுவான், உயரமாய் மேலுக்கு வியாபித்திருந்தால் - தனவானுவான், உயரமாய் கீழ்பக்கத்தில் இரங்கியிருந்தால் - பசுவிருத்தி யுண்டாகும், மயிர் இருந்தால்- இராஜனுவான்.

## வயற்றிலுள்ள மடிப்புகளின்பலன்.

25-வது. வயற்றில் மடிப்புகள் ஒன்றுமில்லாமல் இருந்தால்- ராஜனுவான், ஒன்றிருந்தால் - ஸ்திரீலோலன், மூன்றிருந்தால்- பாண்டித்தியமும் படிப்பு சொல்லுவதானுல் சுகஜீவனம், நான்கிருந்தால் புத்திரவானுய் தனிகனுயும்பண்டிதனுயு மிருப்பான், மடிப்புகள் கோணமாணலா யிருந்தால்-துஷ்டனுயும் குலஸ்திரீயை கெடுக்கின்றவனுயும் இருப்பான், கோணல் இல்லாமலிருந்தால்-மரியாதையாய் சுகஜீவனம்செய்வான், முனைகள் கோணலாயிருந்தால்-சந்தோஷியாவான், பக்கங்களுக்கு திரும்பியிருந்தால் தரித்திரனுவான்.

## விலாபக்கங்களின் பலன்.

26 - வது. வயற்றின்மேல் இடதுபக்கம் ரேகையொன்றுண்டாகி கயற்றைப்போல் கீழ்நோக்கி யிருக்கில்-அப்புருஷன் பூமியின்மீது களவானது செய்தலைகுவன், வலதுபக்கமாய்த்தோன்றில் அரசனுகுவன்.

27-வது. பக்கங்கள் கொழுத்து மிருதுவாய் இடதுபக்கத்தில் இருந்து வலதுபக்கத்திற்கு சுழியுள்ளமயிர்கள் இருந்தால் ராஜனுவான், சுழியில்லாமல் கொழுத்திருந்தால் - தனவந்தனுவான், சதையில்லாமலிருந்தால்- தரித்திரனுவான், சக்கரங்களிருந்தால்-நிலத்திலே விழுந்திருக்கும்படியான தரித்திரனுவான்.

## ஸ்தன்னியபலன்.

28-வது. ஸ்தனங்கள் இரண்டும் கோணலாய் ஒன்றோடொன்று நெருங்கியிருந்தால்-அல்பாயுசுள்ளவனுவான், மத்தியபாகம் விசாலமாயிருந்தால் - தனவந்தனுவான், விம்மி மேலுக்குத் தோற்றப்பட்டால்-புத்திரஹீனனுவான்.

## இதுவுமது.

29 - வது. ஸ்தனங்களுடைய காம்பானது எடுப்பாயிராமல் இருந்தால் - அப்புருஷன் ஜனசம்மானத்தைஅடைவான், இரண்டும் சமானமாயிராமல் இருந்தால்-தரித்திரனுவான், பெரியதாயிருந்து உப்பியிருந்தாலும் - மகாதனிகனுவது ராஜனுவது ஆய் புத்திரசோகத்தை யடைவான், சமானமா யிருந்தாலும் சுழிவிசாலமா யிருந்தாலும்-சேவகனுவான்.

## மார்பின்பலன்.

30-வது. புருஷாளுக்குமார்பு எடுப்பாயும் விசாலமாயும் கெட்டியாயும் புஷ்டியாயும் இருந்தால்-ராஜனுவான், உள்ளடங்சிசன்னமாயும் மிருதுவாயும் துர்ப்பலமாயும் இருந்து முரட்டு மயிரோடு கூடியிருந்தால் - பரமதுர்மார்க்கனுவான், தட்டையாயிருந்தால்-தனவந்தனுவான், விசாலமாயிருந்தால்- பிரசித்தனுவான், நெருங்கியிருந்தால் - தரித்திரனுவான், மயிர் ஒன்றும் இல்லாமலிருந்தால் - கபடியாகவாவது சமர்த்தனுவது இருப்பான், மேடுபள்ளமாய் இருந்தால் - தரித்திரனுவான், வெலும்புகள் காணப்பட்டு மேடும்பள்ளமாயிருந்தால் - துக்கியாவான், சிகப்பாயிருந்தால்-போகியாவான், கருப்பாயிருந்தால்-தரித்திரனுவான்.

## தோள்பட்டையின் பலன்.

31 - வது. புருஷாளுக்கு தோள்பட்டை சமானமாயில்லாமலிருந்தால்-துர்மார்க்கனுவான், எடுப்பாயிருந்தால் - கீர்த்திவானுவான், உப்பியிருந்தால் - தரித்திரனுவான், பெரியதாய் இருந்தால்-தனவானுவான்.

32 - வது, தோள்கள் விசாலமாய் சதைபிடித்து ஒன்றைப் போலிருந்தால் - தனவந்தனும் சுகபோகியும் ஆவான், சதை

யில்லாமல் சின்னதாய் மயிர்முளைத்திருந்தால்-தரித்திரனாவான், யானைகும்பஸ்தனங்களைப்போல் உயர்ந்து சதையில்லாமல் வலதுபக்கத்திலிருந்து இடதுபக்கத்திற்கு மடிப்புகளும் மயிரும் இருந்தால்-பூமியை பரிபாலனம்செய்வான், பள்ளம் விழுந்து மயிர்கள் விசேஷமாய் இராமலிருந்தால்-தரித்திரனாய் துக்கத்திற்கு பாத்திரனாவான், சுழிகள் விழுந்திருந்து இடது பக்கத்தில் இருந்து வலதுபக்கத்திற்கு சுழிகள்யிருந்தால்-காவடியை தூக்கி சீவனம்செய்வான்.

## கஷ்கங்களின் பலன்.

33-வது. புருஷாளுடைய கஷ்கங்களில் வேர்வை விடாமல் விசாலமாய் உயர்ந்து சுகந்தமாயும் விசேஷமயிர்கள் உள்ளனவாயும் இருந்து இரண்டும் சமானமாயிருந்தால்- ராஜாவாயாவது மகாதனம் சம்பத்துள்ளவனுயாவது ஆவான், இரண்டும் சமானமாயிருந்தால் - சுகியாவான், ஏத்தக்குறைச்சலா யிருந்தால் - துக்கியும் தரித்திரனுமாவான், விசாலமாய் இருந்தால்-தனவானாவான், நெருக்கமாய் குழிவிழுந்திருந்தால் தரித்திரனாவான்.

## முதுகின் பலன்.

34-வது. புருஷாளுடைய முதுகுகொழுத்து எலும்புகள்காணப்படாமல் மயிர்களிருந்தால்-தனவந்தனும் போகியுமாவான், மாமிசமில்லாமல் எலும்புகள் காணப்பட்டால்-தரித்திரனும் துக்கியுமாவான், குட்டையாயிருந்தால்-தனிகனாவான், சக்கிரமிருந்தால்-மூட்டையெடுத்து சீவனம்செய்வான்.

## கைகளின் பலன்.

35-வது. புருஷாளுக்கு கைகள்குண்டாயிருந்து யானைதொண்டலத்தைப்போல் வரவரசிருத்து நீளமாய் முழங்கால் வரையிலும்பட்டு இரண்டும் சமானமாயிருந்தால்-இராஜனாவான், இதில் சில லக்ஷணங்கள்குரைந்திருந்தால் - தனவானாவான், குட்டையாயிருந்து மயிர்கள் நிரைந்திருந்தால் தரித்திரனும் கஷ்டஜீவன முள்ளவனுமாவான், ஏத்தக்குறைச்சலா யிருந்தால்-பாவியாவான், கெட்டியாயிருந்தால்-தனவானாவான், குரங்கு கை

களைப்போலிருந்தால்-தனவானுயும், புலிகைகளைப்போல் இருந்தால்-குரூரனுயும் இருப்பான்.

## முழங்கைகளின் பலன்.

36-வது. புருஷனுக்கு முழங்கைபெரிதாய் இரண்டும் சமமாயிருந்து மாமிசம்மூடிக்கொண்டிருந்தால் - பூபாலகனுவான், பெரியவைகளாய் மாமிசமில்லாமலிருந்தால் - தீர்க்காயுசுள்ளவனுயிருப்பான், சின்னவைகளாயிருந்தால்-லோகபூஜியதை உண்டாகும், விசாலமாயிருந்தால் - தரித்திரனுயிருப்பான், குழிகள் விழுந்திருந்தால் - ஸ்திரீகளின் வலைக்குள் அகப்பட்டுக்கொள்வான்.

## மணிக்கட்டின் பலன்.

37-வது. புருஷனுடைய மணிக்கட்டுக்குள் சதைக்குள் மறைந்து கெட்டியாயும் இரண்டும் ஒரேமாதிரியாயும்இருந்தால் ராஜனுவான், முடிகள் காணப்பட்டாலும் தவனிகேழ்க்கப்பட்டாலும் - தரித்திரனுவான், தொளத்தலாய் ஆடிக்கொண்டிருந்தால் - ஆயுதங்களினுல் கண்டம், மணிக்கட்டுகளில் இரண்டு ரேகைகளிருந்தால் - ராஜபோகியாவான், மூன்று ரேகைகளிருந்தால் - ஸ்திரீலோலன் ஆவான், நாலுரேகைகள் இருந்தால்-பிரபுத்துவங்கிடைக்கும், இவைகளுக்கு கங்கணரேகைகளென்று பெயர்.

## உள்ளங்கையிலுள்ள ரேகைகளின்பலன்.

38-வது. புருஷனுடைய உள்ளங்கை விசாலமாய் காந்தியோடு விசேஷரேகைகள் இல்லாமலிருந்தால்- தீர்க்காயுசுள்ளவனுயும் போகியுமாவான், சிவப்பாயிருந்தால்-தனவானுவான்,பச்சையா யிருந்தால்-ஸ்ரீலோலனுவான், கலியாணமுருக்கம் பூவைப்போல் சிவப்பாயிருந்து நான்குமூலையும் சமானமான உயரத்தோடு தட்டையாயிருந்தால்-பூபாலகனுவான், மத்தியில் பள்ளமாயிருந்தால்-தரித்திரனுவான், பள்ளமாயும் குண்டாயும் இருந்தால்-தனவானுவான், கெட்டியாயிருந்தால்-ஸ்ரீலோலனுவான், மெதுவாயிருந்தால்-தரித்திரனுவான், இரண்டும் ஒரேமாதிரியா

யிருந்தால்-பாவியும் தரித்திரனுமாவான், உப்பியிருந்தால் - தர்மிஷ்டி ஆவான், உலர்ந்திருந்தால்-தரித்திரனுவான்.

39-வது. புருஷாளுடைய சுண்டுவிரலுக்கு கொஞ்சம் தூரத்திலிருக்கும் பெரியரேகைக்கு ஆயுசுரேகைஎன்றும்பெயர் அது சுண்டுவிரல் வரையிலும் வியாபித்திருந்தால்-அந்தபுருஷனுக்கு வயசு நூறுவருஷம், அதுஎந்தவிரலின்கீழ் முடிகிறதோ அத்தனை இருபத்தைந்து வருஷங்களென்று ஆயுசை கணக்கிடவேண்டியது, ஆயுசுரேகை புளந்தாவது சிதரியாவது யிருந்தாலும் குருக்கே அனேக கீருகளிருந்தாலும் அனேக கண்டங்களுண்டாகும்.

40-வது. ஆயுசுரேகையின் கீழ் இருக்கும் பெரிய ரேகைக்கு ஸ்திரீரேகை யென்றுபெயர், கட்டைவிரலின்கீழ் மணிக்கட்டு சமீபத்தில் உண்டாயின் - மேலுக்குபோகும், ரேகைக்குபுருஷரேகை யென்றுபெயர், இந்த இரண்டு ரேகைகளும் பெருவிரலுக்கும் சுண்டுவிரலுக்கும் மத்தியில் கலந்திருக்கும், அப்படி சேர்ந்திருந்தால் தம்பதிகளுக்கு பரஸ்பரம்பிரியம்உண்டாயிருக்கும், சேராமல் இருந்தால் - வியோகமுண்டாகும், புருஷரேகை அதிகமாய் நீண்டிருந்தால்-புருஷசந்ததியும், ஸ்திரீரேகை அதிமாய்போயிருந்தால்-ஸ்ரீசந்ததியும் அதிகமாகும், இந்தரேகைகள் சேராமலிருந்தால்-விவாகமே யாகமாட்டாது ஆனுலும் உபயோகமில்லை அவைஇரண்டும் சேர்ந்து எதுவும்மேலே போகாமல் இருந்தால் - சந்தானம் உண்டாகமாட்டாது உண்டானுலும் நிற்காது.

41-வது. ஆயுசுரேகையும் ஸ்திரீ புருஷரேகைகளும் இந்த மூன்றுமாத்திரமே உள்ளங்கையிலிருந்தால்-சம்பத்து உண்டாகும், கோணமாணலாய் அனேகரேகைகள் இருந்தால்-துரதிருஷ்டனும் துக்கியுமாவான், முழுக்கரேகைகளே யில்லாமல் இருந்தால்-தரித்திரனுவான்.

42-வது. மணிக்கட்டினுடைய மத்தியபாகத்தில் உண்டாய் ஸ்திரீபுருஷ ரேகைகளுக்கு மத்தியில் இருந்து நீளமாய்போய் ஸ்திரீ ஆயுசு ரேகைகளின் பேரில் குருக்கேபோகும் ரேகைக்கு தனரேகை யென்று பெயர், அதின்மேல் சொன்னபிரகாரம்

தெளிவாயிருந்தால்-ஜெனனமுதல் சீமானுய் ஏராளமாய் தனம் சம்பாதிப்பான், அதுமுதலில்வளைந்து புருஷரேகையோடு கலந்திருந்தால்-தனமெல்லாம் ஸ்வயார்ஜிதமென்று தெரிந்துகொள்ளவேண்டியது, தனரேகைமத்தியில் கத்திரிரேகைகள் என்றல் குருக்கோடும் ரேகைகள் இருந்தால்-தனம்அப்போதுக்கப்போது திருடர்களுடைய பங்காகும் அல்லதுசிலவாய்விடும்,மூன்று கத்திரிரேகைகள் இருந்தால் - தரித்திரனுவான், தனரேகை துண்டுதுண்டாயிருந்தால்-அப்போதுக்கப்போது தனம் சம்பாதித்துக்கொண் டிருப்பான், தனரேகையே யில்லாமல்இருந்தால்-ஜீவனம்நடப்பது அசாத்தியம், உபாயமாயிருந்தால் - சாமான்னியமான வரும்படியோடு ஜீவனம்செய்வான்.

43-வது. ஆயுசுரேகைக்குமேல் தனரேகைக்கு வலது பக்கத்தில் நீளமாயிருக்கும் ரேகை வித்தியாரேகையென்று சொல்லப்படும், இதுஎவ்வளவு பிரபலமாயிருக்குமோ-அவ்வளவு வித்தியாவந்தனுவான்.

44-வது. உள்ளங்கையின் ஓரத்தில் சுண்டுவிரலின் கீழ்பாகத்திற்கும் ஆயுசுரேகைக்கு மத்தியிலிருக்கும் குருக்குரேகைகளுக்கு பத்தினிரேகைகளென்றுபெயர், இவைகள் ஒன்றுக்கதிகமாயிருந்தால்-அத்தனை சம்சாரங்களாவது ஒருசம்சாரமும் மற்றவர்கள் வேசியர்களாவது யிருப்பார்கள்.

45-வது. யானை குதிரை பல்லக்கு கொடை கிரீடம் சங்கம் தாமரை கொடி இந்த ரேகைகள் உள்ளங்கையில் இருந்தால்-பிரபுஆவான், சூரிய ரேகையாவது சந்திரரேகையாவது இருந்தபட்சத்தில் - தெய்வபக்தி உண்டாய் லோகபூஜியத னுவான், மீன்ரேகையுள்ளவன்-மகா தனவானுய் அனேகர்களுக்கு அன்னதானம் செய்து புண்ணியவானும் புத்திரவந்தனுயும் இருப்பான், திராசு ரேகையுள்ளவன் - பாக்கியவந்தனுவான், விரல்களின் நுனியில் சக்கிரங்களிருந்தால் -போகியாவான், இரண்டு சக்கிரங்களிருந்தால்-ராஜபூஜிய தனவான், மூன்று சக்கிரங்களிருந்தால்-லோகசஞ்சாரியாவான், நான்கிருந்தால் - பண்டிதனுவான்.

## புருஷாளுக்கும் ஸ்திரீகளுக்கும் பார்க்கும் கைகாணும்விபரம்.

46-வது. புருஷனுக்கு வலதுகையை பரிட்சை செய்து அதிலிருக்கும் பலாபலன்களை நிர்னயஞ் செய்யவேண்டியது இடதுகையிலிருக்கும் ரேகைகளைப்பார்த்து அகப்படும் சுபாசுபங்கள் அவனுடையசம்சாரத்திற்கு சம்பந்தப்பட்டிருக்கும்.

## கைவிரலின் பலாபலன்.

47-வது. கைவிரல்கள் நீளமாயிருந்தால்-போகியாவான், தோல்மடிப்புகளில்லாமலிருந்தால்-ஜனரஞ்சகன் ஆவான், சின்னதாயிருந்தால்-புத்திசாலியாவான், அகலமாயிருந்தால் - இதராளுக்கு ஊழியஞ்செய்வான், கனமாயிருந்தால் - தரித்திரனுவான், மேனுக்குவளைந்திருந்தால்-ஆயுதங்களால் மரணம்அடைவான், அல்லது தரித்திரனுவான், அடியில்கொழுத்து விரித்தபோது விரல்களின்மத்தியில் சந்துகள் யில்லாமலிருந்தால் - தனவானுவன், சந்துகளிருந்தால்-தனம்செலவாய்விடும்.

## கைநகங்களின்பலன்.

48-வது. புருஷாளுடைய கைநகங்கள் மிருதுவாய் சிவப்பாயிருந்தால்-சம்பத்துண்டாயிருக்கும், வெண்மையா யிருந்தால் தரித்திரனுவான்.

## கட்டைவிரலின்பலன்.

49 - வது. புருஷாளுடைய உள்ளங்கையில் - கட்டைவிரல் கணுவண்டை அரிசிமணியைப்போல் அல்லதுகோதுமை மணியைப்போல் இரண்டுகோடுகள் கூடினரேகைக்கு யவரேகையென்றுபெயர், அந்தரேகை நன்ருய் காணப்பட்டால்-அவன் ஆடுமாடுகளையும் தனதான்னிய சம்பத்துகளையும் உடையவனுய் மகாபோகங்களை அனுபவிப்பான், கட்டைவிரல் நுனியானது சுட்டுவிரலின் மத்தியகணுவுவரைக்கும் இருந்தால்-சிற்பசாஸ்திரத்திலாவது இரண வயித்தியத்திலாவது அல்லது நன்ருய் யெழுதுவதிலாவது பெயர்பெற்றவனுய் இருப்பான், கட்டைவிரலின் வெளிஓரத்தில் அதனுடைய இரண்டு கணுவுகளுக்கு

டத்தியில் இருக்கும் கோடுகள் சந்தானத்தைக் காட்டும் அந்த கோடுகள் இளேயோடு இருந்தால் - பெண்ணென்றும், பின்னல் போல்யிருந்தால்-ஆணென்றும் தெரிந்துக்கொள்ள வேண்டியது, நீண்டுயிருந்தால் - தீர்க்காயுசுயென்றும், குறுகியிருந்தால்-அற்பாயசுயென்றும் அறியவேண்டியது, ரேகைகள் இல்லாமல் இருந்தால்-சந்தானங்கிடையாது.

## சுட்டுவிரலின்பலன்.

50-வது. புருஷாளுடைய சுட்டுவிரலின்கீழ் குருக்காய் இரண்டு சின்னகோடுகள் யிருந்தால் - காரியசித்தியாகும், நடுவிரலின்கீழ் அப்பேர்க்கொத்த ரேகைகள் இருக்குமாயின் - தனமும் ஸ்ரீசுகமும் சந்தானமும் போகமும்உண்டாகும், மோதிர விரல் அல்லது நாலாவதுவிரலின்கீழ் அப்பேர்க்கொத்த ரேகைகள்யிருக்குமாயின் - பண்டிதனுயிருப்பான், சுண்டுவிரலின்கீழ் இருந்தால்-பால்யத்தில் விளேயாடி சுகித்திருப்பான்.

## கழுத்தின்பலன்.

51-வது. கழுத்து சங்கம்போல் இருந்தால் - கீர்த்தியாவது அல்லது பிரபுத்வமாவது அடைவான், மேலே ஊர்த்துவரேகைகள் யிருக்குமாயின்-தர்மிஷ்டனுவான், ஆரம்போல் கழுத்தை ரேகைகள் சுத்தியிருந்தால்-தனவானுய் அனேக குடும்பங்களே காப்பாத்துவான், கழுத்து உயர்ந்து வளேந்துயிருந்தால் பேருண்டிதின்பான், குறுகியிருந்தாலும் பின்புறம் மயிர் இல்லாமல் போனுலும்-திரவியவானுகி யிருப்பான், கழுத்துபெருத்து இருக்குமாகின் - சாமான்னியனுயிருப்பான், குறுங்கழுத்தன் கோணேக்கழுத்தன்-இவர்கள் தரித்திரர்கள், கொக்கைபோல் நீண்டகழுத்துடைவன்-திருடர்களால் பிராணஹானி அடைவான், செம்பறி ஆட்டுக்கடாபோல் கழுத்துடையவன் ஆயுதத்தினுல் மரணமாவான்.

## மோவாய்கட்டையின் பலன்.

52-வது, புருஷாளுக்கு மோவாய்க்கட்டை நீண்டு சிருத்திருந்தால்-தரித்திரனுயிருப்பான், நன்ருய்சதைபிடித்திருந்தால்-தனவானுய் இருப்பான், மீசைக்கு முன்னமே தாடிமுளேத்து

வந்தால்-தீர்க்காயுசு, அந்ததாடி சிவப்பாய் ஓரிடத்தில் நெருங்கியும் மற்றொரு இடத்தில் கொஞ்சமாயும் இருந்தால் - கஷ்டஜீவனம்பண்ணுவான், மெத்தகருத்திருந்தால்- பாக்கியசாலியாயும் சௌபாக்கியமும் உடையவனாயிருப்பான்.

## மீசையின்பலன்.

53-வது. மீசை தாடிமுளைப்பதற்கு முன்னமே முளைத்துவந்தால்-அல்பாயுசு, நெருங்கியும் தடித்துமிருந்தால்- துன்மார்க்கன், சிகப்புநிரமாயிருந்தால் - பராக்கிரமசாலியாவான், நீண்டும் கருத்தும் இருந்தால்-இராஜனாவான்.

## வாயின்பலன்.

54-வது. புருஷாள் வாய் சிரியதானால் - சுகியும் தனிகனுமாவான், வாய் அகலமானால்-பேருண்டியுண்பவனும் தெத்துவாயனுமாய் தூஷித்துக்கொண்டு யிருப்பான், சிவந்திருந்தால்- சுகியாவான், வெளுத்தாவது கறுத்தாவது உலர்ந்தாவது யிருக்குமாயின்-தரித்திரன்.

## உதடின்பலன்.

55-வது. உதடுகள் மிகசிருத்தவையாயின்-ஏழை, வெடித்தாவது வளைந்தாவது ஏற்றக்குறைச்சலாயாவது உலர்ந்தாவது கருத்தாவது விகாரமான நிறமாயாவது இருந்தால் - அதிகதரித்திரன், கீழ் உதடு சிவந்து கோணல் இல்லாமல் யிருந்தால்-இராஜனாவான், அதிகபெருத்திருந்தால் - பயங்காளியாயும் சலசித்தமுடையவனாயு மிருப்பான்.

## பற்களின்பலன்.

56-வது. புருஷாளுக்கு பற்கள்பிரகாசமாயும் தடித்தும்நுனி கூர்மையாயும் நேர் ஒழுங்காயும் வரிசை தவராமலுமிருந்தால்-தனவானாய் சுகஜீவனம்பண்ணுவான், மிகவும்யெடுப்பாயாவது பள்ளமாயாவது சந்துவிட்டாவது சிறியது பெறியதாயாவது யிருந்தால்-தரித்திரன் அல்லதுபாபி, தந்தவரிசைதவறினால்-தரித்திரன், ஒன்றின்மேல் ஒன்றுமுளைத்திருந்தால் - துக்கத்தையனுபவிப்பான்.

## நாக்கின் பலன்.

57-வது. புருஷாளுக்கு நாக்கு சிவந்தும் குறுகியும்மிருதுவாயுமிருந்தால் - தனத்தையும் போகத்தையும் அனுபவிப்பான், கருத்தாவது வெளுத்தாவதிருந்து உலர்ந்தும் இருக்குமாயின்-தரித்திரன்.

## மூக்கின் பலன்.

58-வது. புருஷாளுக்கு கிளியின் மூக்குபோல் இருக்குமாயின்-போகத்தை அனுபவிப்பான், உலர்ந்திருந்தால்-பூரணாயுசு, கத்திவெட்டுபோல் கோடுகளிருந்தால் குலஸ்திரீகளைகெடுப்பான், நீண்டிருந்தால்-தனவந்தன், வளைந்திருந்தால்-திருடன், தட்டையானால்-ஸ்திரீயினால்கொல்லப்படுவான், கெருடன் மூக்குப்போல் நுனி கூராயிருந்தால் - தனவந்தன், அந்த நுனி வலது பக்கம் வளந்திருந்தால்-கொரோனாயும் பேருண்டி யுண்பவனாயுமிருப்பான்.

## கண்களின் பலன்.

59-வது. கண்கள் தாமரை இதழைப்போலிருந்தால்-தனவானாவான், அல்லிபோலிருந்தால்-பண்டிதனா யிருப்பான், விசாலமாயின் - இராஜமந்திரியாவான், தேன்வரணம்போ லிருந்தால்-மிகுந்த தனவந்தனாவான், பூனைக்கண்ணன்-பாபி, கலைமான்உடம்பு டேகை யிவைகளின் கண்போலிருந்தால்-திருடன், யானைக்கண்போலிருந்தால்-ராஜன், வளைந்தபார்வையுடையவன் - திருடன், தைரியதிருஷ்டியுள்ளவன்-தனவான், குழிக்கண்சிவந்திருந்தால்-சம்பத்தும் அபிவிருத்தியு முடையவனாவான், கண்முட்டைகள் கச்சக்காய்போல் யிருந்தால்-தரித்திரன், ரெப்பைகளில் மயிர் இல்லையானால்-தரித்திரன்.

## புருவங்களின் பலன்.

60-வது. புருஷாளுக்கு புருவங்களில் மயிரில்லாமல் இருந்தால்-தரித்திரனாவான், அதுகள் யெடுப்பாயிருந்தும் அகலமாயில்லாவிட்டால் - அல்பாயுசு, எடுப்பாயும் விசாலமாயும் இருந்தால்-தீர்க்காயுசோடு சுகமாய் யிருப்பான், இரண்டு புருவங்களும் ஒரேவிதமாயிராவிட்டால் - தரித்திரன், பிரையைப்போல் வளைந்து யிருப்பவன் - அதிக சம்பத்துடையவன், நீண்டு ஒன்

ரூடொன்று சேராமலிருந்தால் - தனவானுவான், அங்கங்கே மயிர்களில்லாமலிருந்தால் - தரித்திரனுய் துக்கத்தையனுபவிப்பான், நடுவில்வளைந்திருந்தால்-குலஸ்திரீகளைகெடுப்பான்.

## முகக்குறியின்பலன்.

61-வது. புருஷாளுக்குமுகம்அழகாயும் சிறுவாயுள்ளதாயும் மிருதுவாயும் இருந்தால்-இராஜனுவான், விசாலமாயிருந்தால்-ஞானியாயும் சுகியாயும் இருப்பான், ஸ்ரீமுகம்போல் யிருக்குமாயின் - புத்திரவந்தனுவான், குண்டானுல்-மோசக்காரன், உயர்ந்திருந்தால்-ஏழை, விசாலமாயும் நான்குபுரம் சமமாயுமிருந்தால் - மோசக்காரன், சொட்டையாயும் பள்ளமாயும் இருந்தால்-சந்ததியில்லாதவன், பூரணமாயும் சொகுசாயும் இருந்தால்-சுகி, நெத்திசமனுனல்-தரித்திரன், முத்துசிப்பிபோலவிசாலமாயின் - வேதாந்தியாயும் பண்டிதனுயும் இருப்பான், நரம்புகளால் சூழப்பட்டிருந்தால் - கொரேன், அந்தநரம்புகள் தெளிவாயும் முக்கோணமாயும் இருந்தால் - தனவந்தனுவான், நெத்திபள்ளமானுல்-கெட்டகாரியங்களைச் செய்வான், குறுகியிருந்தால்-மூடனுயும் தரித்திரனுயும் இருப்பான், அர்த்தசந்திரனைப்போலானுல்-தனவான்.

## கா தின் ப ல ன்.

62-வது. காதுமாமிசம் இல்லாமல்இலைபோல்இருந்தால்-கஷ்டமான மரணமுண்டாகும், சதைபிடித்து தொங்கிக்கொண்டிருந்தால் - தீர்க்காயுசாயிருப்பான், நரம்புகள் தெரியுமாயின்-துராத்துமா, கிண்ணிபோலானுல் - சுகஜீவனமுண்டாகும், சங்கைபோல் துனியிருந்தால்-ராஜனுவான், சின்னதாயின்-லோபி, விசாலமானுல்-தனவான், மயிர் நிறைந்திருந்தால் - ஆரோக்கியமும் தீர்க்காயுசுமுடையவன், கீழ்காது விசாலமாய் இருப்பவன்-தனிகன்.

## கன்னங்களின் பலன்.

63-வது. புருஷாளுக்குபார்க்க கன்னப்பொறிகள் எடுப்பாயும் அகலமாயுமிருந்தால்-தனவானுவான், பள்ளமாயிருந்தால்-சந்தானமும் திரவியமும் கிடைக்கும்.

## தாடையின் பலன்.

64-வது. புருஷாளுடைய தாடைகள் சொட்டையில்லையா ஞல்-போகி, புஷ்டியாய் பருத்திருந்தால்-மந்திரியாவான், சிவப் பாஞல்-தனவந்தனுவான், கண்ணுடிப்போல் பளபளப் புள்ளவ ன்-தனமும் சந்தானமும் அடைவான், தாடைநீண்டிருந்தால்-சுகியும் தனவானுமாவான்.

## சிரசின் பலன்.

65-வது. புருஷாளுடைய சிரசு வட்டமாயின் - பசுவிருத்தி யுண்டு, கொடைபோல் விசாலமாயின்-ராஜதசை, தட்டையா ஞல் - பால்யத்திலேயே தாய்தந்தையர்கள் மரணம்அடைவார் கள், உயர்ந்திருந்தால்-தீர்க்காயுசு, பானைபோலாஞல்-தீர்க்க ஆ லோசனையுடையவன், இரண்டுதலை சேர்ந்தாப்போ லிருந்தால்-குரூரனுயும் ஏழையாயும் இருப்பான், அனேகநரம்புகளும் வீ க்கங்களும் இருந்தால்-தரித்திரன்.

## தலைமயிரின் பலன்.

66-வது. புருஷாளுடைய தலைமயிர் துவாரத்திற்கு ஒன்றுயி ருந்து பிரகாசமாயும் கருப்பாயும் நுனி வெடிக்காமலும் அதிக மாயில்லாமலும் மிருதுவாயுமிருந்தால் - ராஜனுய் எப்போதும் சுகமாயிருப்பான், துவாரம் ஒன்றுக்குஅனேகம் முளைத்து யெ ல்லாம் சமானமாயில்லாமல் ஏத்தக்குறைச்சலாயாவது கோது மை நிரமாயாவது தடித்தாவது நுனி பிளந்தாவது காந்தியில் லாமலாவது மிகுதியாய்ச் சுருட்டிக்கொண்டாவது யிருந்தாலு ம் விசேஷமயிரிருந்தாலும்-தரித்திரனுவான், துவாரம் ஒன்றுக் கு இரண்டுமயிர் விழுக்காடு யிருந்தால்-தனிகன், மூன்ருனுல்-தரித்திரன், நான்காஞல்-துக்கம் அடைவான்.

## சரீரபலன்.

67-வது. புருஷாளுடைய சரீரம் பளபளப்பாயின் - தனவா ன், மிருதுவாயின்-சுகியாய் அபிவிருத்தியடைவான், மெல்லிய தாயிருந்தால் - தெளிவு உள்ளவனுயும் பலசாலியாயும் இருப் பான்.

## தேகசாயையின்பலன்.

68-வது, புருஷாளின் திரேகசாயை பளபளப்பாயிருந்தால்-சுகியும் தனவானுமாவான், வெளுத்து பிரகாசமாயாவது பசுமையாய் ரம்மியமாயாவது இருந்தால் - சுகமும் காரியசித்தியுமுடையவனுவான், கண்சிதரும்படியாய் பொன்சாயை யாவது நெருப்புசாயைபாவது தாமரைப்பூ சாயையாவது இருந்தால்-பலவந்தனுயும் திருடகாத்திரனுயும் தயிரியசாலியாயும் இருப்பான், அழுக்காயும் கருப்பாயும் அசங்கியமாயும் அசுப்பாயுமிருந்தால் - அல்பாயுசுள்ளவன் தரித்திரன் ரோகிநிர்ப்பாக்கியன் ஆவான், கண்ணுடிபோல் தேகமுடையவன் - கௌரவமடைவான்.

## புருஷாள் ரேகையின் பொதுபலன்.

69-வது. புருஷாளுக்கு சிறுவிரல் உயர்ந்தும் நேத்தியாயும் சிறுத்தும் பெறுத்தும் இருந்தால்-அப்புருஷன் அருதலியைச் சேர்குவன் அவன் தனக்கு ஆயுசு 32 - ஆகும், சிறுவிரலானது அகன்று யிருக்கில் - தன்னுடையகுலத்தில் வெறுப்புண்டாகி வேற்ருேர்களுடைய ஸ்திரீயை சிறை எடுப்பான், சிறுவிரலினிடமாக தோன்றிய ரேகையானது ஒன்று வில்லானது வளைத்தாப்போலும் இடைகளை விட்டும் வழிவிடாமல் யிருந்தால்-பெண்டை நீசர்பால்விடுவான்.

70-வது. புருஷாளுடைய வலதுபுரங்கையில் பிறைபோல்ரேகை ஒன்றுயிருந்தால் - அப்புருஷன் தான்பெற்ற மகளைச்சேர்வான்.

71 - வது. உடுக்கையைப்போல் ரேகை ஒன்று இடது பக்கமாக துடையில்யிருந்தால் - குறிகள்சொல்வான் மருளாடுவான் துர்நடக்கை புரிவான்.

72-வது. வலதுபக்கத்தில் பிணச்சலாக ரேகை இரண்டு கச்சையைப்போல் சுற்றிக்கொண்டு யிடையினிடமாகஇருந்தால்-அப்புருஷன் தன்னுடைய மனையாள் செய்யும் துர்நடக்கையினுல் தூவில்போய் விழுந்து மரணம் அடைவான், அந்தரேகை யிடுப்பைவிட்டு மையமாக யிருந்தால் - தனவந்தனுப் இருப்பான்.

73 - வது. புருஷாளுக்கு கழுத்தில் நான்கு வரையும் பிடரியில்பொன்வர்ணம்போலும் யானையின்கண்ணைப்போலும் முதுகின்கீழ் யிருந்தால்-செல்வனாயும் வயது நாற்பத்திமூன்று பெற்றுவாழ்வான்.

74 - வது. புருஷாளுடைய வலதுகையில் கொடியைப் போலும் யானை கண்கள்போலும் வேலைப்போலும் விமானத்தைப் போலும் வில்லைப்போலும் புஷ்பத்தைப்போலும் தேவர்கள் போலும் தோரணங்கள் போலும் தடாகம்போலும் தாமரை கமலம்போலும் ரேகைகள் யிருந்தால்-ராஜனுவான்.

75-வது. கொடியைப்போல் நெடியதாக வெட்டில்லாமல் ரேகை கையிலிருந்தால்-அப்புருஷன் திருமாலின் அருள்பெற்று பூபாலனுகவாழ்வான், அன்றியும் யிந்தரேகை வலதுகையில் யிருக்கவேண்டும்.

76-வது. நேத்திரத்தினிடமாக ஒரு ரேகைதோன்றி மணித்துவாரம்போலும் யானையின் தமர் விழுந்தாப்போலும் யிருந்தால்-அப்புருஷன் சேனையும் தளங்களும் உண்டாயி யாவரும் தன்னைச் சேவிக்கும்படியாகவும் எஜமானுகவும் இருந்து வாழ்வான்.

77-வது. கையில் பையைப்போல் இரண்டு ரேகை தோன்றி ஒன்றுக்கொன்று எராமல்படிக்குயிருந்தால்-அப்புருஷன் ஒரு லட்சங்கோடி பொன்தேட வல்லவனுகி சதமாக வாழ்ந்து இருப்பான்.

78-வது. மேனியென்னும் ரேகை இரண்டு உண்டாகி பிணைச்சலரக சுத்திக்கொண்டு யிருந்தால் - அப்புருஷன் மானியாயும் பொய் சொல்லாதவனுயும் ஞானியாகவும் அரசர்கள் போற்ற வாழ்குவான்.

79-வது. அரவரேகை கையிலிருந்தால் - அப்புருஷன் கருட பஞ்சாட்சரத்தினுலும் மந்திரங்களினுலும் சகலசர்ப்ப விஷங்களும் தீரும்படியாக உச்சரிக்க வல்லமை யுள்ளவனுயும் இருப்பான்.

80-வது. குறிசில் ரேகை கையில் இருந்தால் - அப்புருஷன் அன்னிய நீசமதத்திற் போய்சேர்வான், அந்தரேகை நிறம் பசுமையாகயிருந்தால்-அவர்களிடபோஜனம் பொசிப்பான்.

81-வது. புருஷனுடைய வலதுகையில் வேல் ரேகை யிருந்தால்-வாலேயினுடைய வரபிரசாதங்கள் பெற்று உலகமுழுதுங் கொண்டாடும்படியாக நல்லநடக்கை உள்ளவனாக யிருந்து வாழ்வான்.

82-வது. புருஷனுடைய இடது உள்ளங்கையில் கோபுரம் போல் ரேகை அஸ்திவாரமாக ஸ்தாபித்திருக்கில் - சகலநூற்களையும் பார்க்க வல்லமையுள்ளவனாகியும் சிவசொத்தை அபகரிப்பவனுமாவான்,

83 - வது. புருஷனுடைய வலதுகையில் தனுசுரேகை யிருந்தால்-வாக்குசுத்தமுடையவனும் அரசர்கள் புகழ தக்கவனும் இலாவாதேவி உடையவனாகவும் பலவிதமான வியாபாரங்கள்செய்ய தீரமுடையவனும் யிருப்பான்.

84-வது. தோடென்னும்ரேகை ஒன்று சுழித்து வட்டம்போலும் குறைச்சலில்லாமல் உள்ளங்கையில் இருந்தால் அப்புருஷன் வேஷதாரியாகி முகத்தினில் மஞ்சள்பூசி ஸ்திரீகள் மயங்கும்படியாக நடிப்பான் கற்புடைய மாதர்களை யிச்சித்தணைவான் மாதர்களும்இவன்பின்சென்று ஆடையாபரணமும் அன்னமும்படைத்து அணைவார்கள்.

85-வது. புருஷனுடைய உள்ளங்கையில் புஷ்பரேகைஒன்று விரிவில்லாமலும் அகன்றிடாமலும் குமிழ்போல் இருக்கில்-பந்துக்கள் யாவற்றுளுக்கும் நன்மையுடையவனாகவும் அரசர்கள் போற்றிவணங்க செல்வமுடையவனாகி யாவருக்கும் உதவி புரிவான்.

86-வது. புருஷாளுடைய வலதுகையில் நேமியென்னும் ரேகை ஒன்றிருந்தால்-காமியாகவும் உலகெங்கும்திரிந்தலைந்து காசிமுதலானதும் கேட்டுவாங்கி மதுபானஞ்செய்து தள்ளாடி பூமியின்மீது விழுந்து யாவரும்யிகழ பேர்கொள்வான்.

87-வது. புருஷானுடைய இடதுஉள்ளங்கையில் ஒருரேகை யானது கம்பம்போல்விரலினூடுபாய்ந்து கயர்போல் ஆதியந்தமும் தம்பம்போலிருந்தால்-பூமியின்மீது அன்னசத்திரங்கட்டி யாவருக்கும் தானதருமங்கள் செய்குவான்.

88-வது. புருஷானுடைய வலதுகையில் கயர்போல்ஐந்துரேகையிருந்தால் - உலகத்தில் தன்னைபலரும் போற்றும்படியாக வயிராக்கிய முடையவனாகியும் சித்துபுருஷனாகவு மிருப்பான், அதற்குமலர்ரேகை யென்றுபெயர்.

89-வது. புருஷானுடைய உள்ளங்கையில் மலர்ரேகை முக்கோணம்போலிருந்தால் - சாம்பிராஜிய யோகமுண்டாம், மனையாள்மேல் ஆசையுடையவனாகவும் அரசர்கள்போற்றவும் இருந்துவாழ்வான்.

90-வது. புருஷானுடைய கையில் சங்குரேகை வலதுபக்கமாக பற்றி யிருந்தால் - சந்திரன் சூரியன் சூழும் உலகத்தில் சகலசம்பன்னனா யிருந்து அரசாளுவான், அந்தரேகை இடதுபக்கமாக இருந்தால் - அரசர்கள் இடத்தில் மந்திரியாக யிருப்பான்.

91-வது. புருஷானுடைய வலது உள்ளங்கையில் சக்கரம் போலும் சதரம்போலும் ரேகை யிருந்தால்-இராஜனுப் சிரசில் மகுடமானது சூட்டி உலகாளுவான், அந்தரேகை இடதுகையில்இருந்தால்-யூகையுடைய மந்திரியாகவிருப்பன், கையிலும் பாதத்திலு மிருந்தால்-மிகுந்தாகிய செல்வமுடையவனாக வாழ்வான்.

92-வது. புருஷானுடைய வலது உள்ளங்கையில் தோரண ரேகையானது கலந்துயிருந்தால்-அன்பத்தாறுதேசமும் ஆளுமரசனாகவும் வல்லவனாய் கப்பம்வாங்கி வாழ்குவான்.

93-வது. புருஷானுடைய வலதுள்ளங்கையில் கமலம்போல் ஒருரேகையிருந்தால்-ராஜனாவான் வயதுபன்னிரண்டு மேலுமாம், அந்தரேகை இடதுகையில் இருந்தால்-அரசனுடைய மந்திரியாக இருப்பான்.

94-வது. புருஷானுடைய வலதுஉள்ளங்கையில் நடுவாகமடுவென்னும் ரேகையானது பாய்ந்து நான்குக் கயர்போல் யிருந்

தால்-வேந்தனுகி அரசனைமோசங்கள்செய்து வெற்றியடைந்து அந்த உலகத்தை இன்னேன் அரசாளுவான்.

95-வது. புருஷாளுடைய இடது உள்ளங்கையில் மச்சரேகை ஒன்றுயிருந்தால் - ராஜராஜாக்கள் போற்றயிருந்து வாழ்குவான்.

96-வது. புருஷாளுடைய உள்ளங்கையில் சங்குசக்கரம் தாரை கொடி கவரி குடைபொன் மழுவாயுதம் தணர் அங்குசம் குடை இவ்விதமான ரேகைகள் யிருந்தால் - உலகமுழுதும் அரசாளுவான்.

97-வது. புருஷாளுடைய கையின் பெருவிரலின் அடியில் பிணங்கி சங்கிலியைப்போல் யாவும் ஒன்றுபோல் இருந்தால். அரசர்கள் யாவரும் புகழவாழ்வான்.

98-வது. புருஷாளுடைய வலது மணிக்கட்டின் யிடமாகயிருந்து ஓர்வரையானது சுட்டிவிரலின்மீது ஏறியிருந்தால்-அவன் பூமியின்மீது செல்வனுகவும் வேந்தனுகவும் இருந்துவாழ்குவான்.

99-வது. மணிக்கட்டினிடமாக தோன்றிய வரையானது ஒன்று நடுவிரலின்மீது ஏறி இருந்தால்-பெண்களை அதிகமாகப் பிறப்பான் பூமியானது தேடுவான் கல்வியில் சாமர்த்தியனுகவிருப்பான்.

100-வது. காக்கையின் கண்ணைப்போல் உள்ளவன் - கல்வியில் வல்லவனுகுவான், கல்வியிருந்தும் அடிமைத்தொழில்புரிகுவான் வாக்கு அதிகமாக கொடான் மதனமாக விருப்பான் கெருவியுமாகும்.

101-வது. புருஷாளுடைய சிரசின்மேலும் மீசை முதலாக உள்ள மயிர்சிவந்து உடம்புநொந்தும் வழிநடையானது குறைந்தும் குயில்போல் மொழிபேசும் செய்கையுள்ள இவன் சீரும் செல்வமில்லாத தரித்திரனுவான்.

102-வது. கழுத்தின் சந்தில் வாள்போல் ரேகைஒன்று யிருந்தால்-அப்புருஷன் ஒருவர்க்கொருவர் சூதுவாதுகள் செய்து தேடியபொருளுக்கு நாதனில்லாமற்போக அதற்கு இவனுடையவனுவான்.

103 - வது. தாடியினிடமாக சுழியானது ஒன்று மோதிரம் போல் நடுவாகயிருந்தால்-அப்புருஷன் பெட்டியோடு பொருள் தேடிவந்து ஒருவருக்குந் தெரியாமல் கொடுத்துவைத்து ஏமாந்துப்போவான்.

104-வது. நெற்றியில் வரையாவது ஐந்தயிருக்கில்-அப்புருஷனுக்கு வயது நூறுகும், சகலசாஸ்திரங்களும் பார்ப்பான் புத்தியினுல் யாவும் அறிவான்.

105-வது. பிடரியினில் ரேகைவொன்று தேளைப்போல் தேகமுடையதாகி தெரியும்படியாயிருந்தால்-அப்புருஷன்சுத்தமும் அச்சமும் ஆணவமுமுடையவன்.

106-வது. அந்ததேள் ரேகைபிடரியைவிட்டு எங்கையேனும் மேற்கூறிய மார்க்கமாக யிருந்தால்-அப்புருஷன் பொல்லாதவனுகியும் கோள்சொல்பவனுகியும் பொய்சத்தியம் செய்பவனுகியும் இருப்பான்.

107-வது. இடதுகையில் ரேகை ஒன்று கோடாலிபோ லிருந்தால் - அப்புருஷன் தேசத்திலுள்ள ஸ்ரீசாதிகளுக்கு மஞ்சள் அறைத்துக் கொடுத்தும் வெந்நீர்காய்ச்சி யிருந்தும் பிழைப்பான்.

108. வது. கண்டத்தினிடமாக சுழி ஒன்று வெட்டறுவாள் போலும் துண்டித்துப்போகாமல் இருக்குமாகின்-அப்புருஷன் ஸ்ரீகளைப்போல் பேசவல்லமையுடையவனுவான், பிண்டத்திற்கு கெதியில்லாதவனுய் பிரட்டும் உருட்டும் பேசுவான், அந்த சுழியானது கழுத்தைவிட்டு யிறங்கி எங்கையேனும் இருந்தால்-அவனைப்பார்த்து ஸ்ரீகள் இச்சை கொள்வார்கள் வேசியர்களை கைவசம்கொள்வான்.

109-வது. கண்களினிடமாக சுழிஒன்றுஇடத்திலிருந்து வலமாகப் பற்றியிருந்தால்-அப்புருஷன் அரசனுகி பெற்றதாயை சேரும் சண்டாளனுவான்.

ஆண்பால் அவயவ ரேகை சாஸ்திரம்

முற்றுப்பெற்றது.

உ

தேவிசகாயம்.

# ஸ்ரீ அவயவங்களின்
# இரேகை சாஸ்திரம்.

## ஸ்ரீ உள்ளங்கால்பலன்.

1-வது. உள்ளங்கால் தாமரை யிதழைப்போன்ற நிறத்தையுடையவள்-இராஜாத்தியாவாள், வெளுத்தாவது பொன்னிறமாவது இருந்தால்-செல்வமுடையவள், பச்சிலைபோன்ற நிறமுடையவள் - குரூரமாயிருப்பாள், கருத்திருந்தால் - துக்கத்தை அனுபவிப்பாள், மிருதுவானால்-போகியாய் லோகபூஜியதை அடைவாள்.

2 - வது. உள்ளங்காலில் அடிக்கடி வேர்வையுடையவள் தரித்திரியாயும் சம்போகத்தில்ஆசையுடையவளுமாக யிருப்பாள், தடித்திருந்தாலும் தேய்ந்திருந்தாலும் - தரித்திரி, பள்ளமாயிருந்தால் - வியபசாரி, உள்ளங்கால் உலர்ந்திருந்தாலும் பசிய ரேகை யிருந்தாலும் தாமரைப்பூரேகை யிருந்தாலும்-சம்பத்து அடைவாள்.

## ஸ்ரீகால்களின் விரல்பலன்.

3 - வது. கால்விரல்கள் கோணலாய் இருந்தால் - மலடியும் விதவையும் ஆவாள், எடம்விடாமல் நெருங்கி ஒன்றோடொன்று சேர்ந்திருந்தால் - சுகமுண்டாம், கட்டைவிரலைக் காட்டிலும் பக்கத்துவிரல் நீண்டிருந்தால் - குரூரமுடையவளாயும் வியபசாரியாயும் இருப்பாள், இந்த இரண்டும் சமமாயிருந்தால்-தீர்க்க சுமங்கலியாயிருப்பாள், சுண்டுவிரல்கள் நடக்கும்போது பூமியில் படாமலிருந்தால்-விதவையாயும் பேதையாயுமிருப்பாள்.

## ஸ்ரீகால்நகங்களின் பலன்.

4-வது. கால்நகங்கள் ஒரே தீர்மானமாயும் அழகாயுமிருந்தால்-இராஜாத்தியாக யிருப்பாள், செவ்வைபாய்ப் பிரகாசித்திருந்தால்-சம்பத்துண்டாகும், சொத்தையாயிருந்தால்- தரித்திரியாயும் லோபியாயும் இருப்பாள், நகநுனிகள் காந்தியாயும் மடியாமலும் எடுப்பாய்வளர்ந்து இலேசாயும் சிவப்பாயும் இருக்குமாயின்-இராஜாத்தியாவாள், பசுமைநிறமானல் - குரூரமாயும், கருப்பானல் - துக்கியாயும், வெளுத்திருந்தால் - சாமான்னிய ஜீவனமுடையவளாயும், வளைந்திருந்தால் - தரித்திரியாயுமிருப்பாள்.

## ஸ்ரீபாதங்களின்பலன்.

5-வது. பாதங்கள் சிரியவையானல் - தரித்திரியாவாள், புரங்கால் ஆமைமுதுகுபோல் இருந்தால்-தீர்த்தயாத்திரை கிடைக்கும், தடித்திருந்தால் - புருஷனுக்குகண்டம், நிற்கும்போது இடதுகால் பூமியில்ஊன்றியும் வலதுகால் ஒதுங்கியும் இருக்குமாயின்-சுமங்கலியாக மரணம் அடைவாள், வலதுகால் ஊன்றில்-விதவையாவாள்.

## ஸ்ரீகணுக்காலின் பலன்.

6-வது. கணுக்காலிரண்டும் சமமாயும் அழகாயும் குண்டாயுமிருந்தால்-தனவந்தியாயிருப்பாள்.

## ஸ்ரீகுதிக்காலின் பலன்.

7 - வது. குதிக்கால் பின்புரம் ஆலமரத்தின் பழம்போல் சிவப்பாயும் குண்டாயும் இருந்தால் - செல்வமுடையவளாவாள்.

## ஸ்ரீநடைசாயலின் பலன்.

8-வது. நடை மதம்பிடித்தயானை நடைபோலும் அம்சநடைபோலும் இருந்தால்-சம்பத்துண்டாகும், பூமியதிரும்படி நடந்தாலும் நடக்கும்போது உள்ளங்கால் பூமியின்மேல்தாங்காமல் இருந்தாலும் - தரித்திரியாவாள், நடக்கும்போது சுண்டுவிரல் அல்லது பக்கத்துவிரல் பூமியில்படாமல் இருந்தால்-வியபசாரியாவாள்.

## ஸ்ரீகண்டசதையின் பலன்.

9 - வது. கண்டசதை மயிரில்லாமலும் நரம்புகள் தெரியாமலும் குண்டாயுமிருந்தால்-சௌக்கியமும் செல்வமுடையவளாவாள், நரம்புகள்மேலே தெரிந்தாலும் மயிரிருந்தாலும் விசேஷமாய் சதைபிடித்திருந்தாலும் சதையேயில்லாம லிருந்தாலும்-துக்கத்தை யனுபவிப்பாள், மயிர் விசேஷமாயிருந்தால்-புருஷனுக்குகண்டம், குண்டாயில்லாமலிருந்தால்-விதவை, அதிகபெருத்திருந்தால்-துக்கமும் தரித்திரமும் அடைந்து இதருளுக்கு வேலைசெய்து ஜீவனம் பண்ணுவாள், குட்டையாயிருந்தால்-கவரவமடைவாள், நீண்டுயிருந்தால்-தீர்க்காயுசும் அயிஸ்வரியமும் புத்திரசம்பத்தும் அடைவாள், விசாலமாயிருந்தால்- மகா அயிஸ்வரியமும்அடைவாள், முழங்காலுக்குக்கீழ் தடித்திருந்தால்-புருஷனுக்குகண்டம்.

## ஸ்ரீதொடைகளின் பலன்.

10-வது. தொடைகள் யானை தொண்டலத்தைப்போல் இருந்து மயிர்கள் இல்லாமல் கெட்டியா யிருந்தால் - ராஜபத்தினியாவாள், இதில்சில லட்சணங்கள்மாத்திரம்இருந்தால்-தனசம்பத்துள்ளவளாவாள்.

11-வது. குண்டாயிருந்தால்-விதவையாவாள், மயிரிருந்தால்-தரித்திரமும் புருஷனுக்கு கண்டமும் உண்டாகும்.

12-வது. மயிரில் சுழியிருந்தால்-தரித்திரம் வைதவியம் துக்கம் அவிசாரிதனம் குலபிரஷ்டத்தனம் உண்டாகும், ஒன்றுக்கொன்று உரைந்திருந்தால்-புருஷனுக்கும் அத்தை மாமன்மார்களுக்கும் மச்சினருக்கும் கண்டம்.

13-வது. தொடை சன்னமாயிருந்தால்-தரித்திரமுள்ளவளாவாள், சன்னமாயும் குண்டாயும் இருந்தால்-குலத்தையும் தனத்தையும் கெடுப்பாள்.

14-வது. தொடை நீளமாயிருந்தால் - எல்லா அவலட்சணங்களுக்கும் குடியிருப்பாள், இடதுதொடையில் எள்முனை யவ்வளவு கருப்பு மச்சங்கள் இரண்டிருந்தால் - குடிசெட்டியாய் வீட்டைவிட்டு போவாள்.

## ஸ்ரீபுட்டத்தின்பலன்.

15-வது. புட்டங்கள் விசாலமாயிருந்து பெரியனவாய் சதையோடு கூடிக்கொண்டிருந்தால்-தனமுள்ளவளாய் சுகப்படுவாள், அல்லது புட்டங்கள் இடத்தைக்காட்டிலும் சிறியதாயிருந்தால்-போகபாக்கியங்களையும் பெறுவாள்.

16-வது. புட்டங்கள் பெரியதாயிருந்தால்- கஷ்டதரித்திரங்களையும் அனுபவிப்பாள்.

17-வது. புட்டங்கள் இரண்டும் சமமாயிருந்தால்-சாமானிய ஸ்திதியுள்ளவளாவாள், மேலே சுழியிருந்தால் - இதருளுக்கு ஊழியம்செய்வாள், தட்டையாயிருந்தால்-புருஷனுக்கும்அவன் கூடப்பிறந்தவர்களுக்கும் மாமியார் மாமனுருக்கும் கண்டம், தொங்கிக்கொண்டு யிருக்கிறமாதிரியாகக் காணப்பட்டால்-புருஷனுக்கு கண்டம்.

## ஸ்ரீஇடுப்பின்பலன்.

18-வது. இடுப்பு சன்னமாயிருந்தால் - பூஜியதையடைந்து போகபாக்கியங்களை யனுபவிப்பாள், பெரியதாயிருந்தால்-தரித்திரியும் விதவையுமாவாள்.

## ஸ்ரீவயற்றின் பலன்.

19-வது. வயர் மயிர்களில்லாமல் மூன்றுமடிப்புகள் இருந்து வட்டமாக இருந்தால்-மஹாஐசுவரிய முள்ளவளாவாள், பானையைப்போலிருந்தால்-துக்கத்திற்குப் பாத்திரியாவாள், பெரியதாயிருந்தால்-அல்பாயுசு, தொங்கிக்கொண் டிருக்கிறதாக காணப்பட்டால் - மாமனுருக்கு கண்டம், மெல்லியதாயிருந்தால்-வெகுகாலம் சுமங்கலியாயிருந்து பிள்ளைபேரன்களை யெடுப்பாள், இளைத்திருந்தால்-சுபம், பள்ளம்பள்ளமாயிருந்தால்- தரித்திரம், உள்ளங்கைகள் சேர்ந்தாப்போல் ஒட்டிக்கொண் டிருந்தால்-ஐசுவரியவந்தியாவாள், தவளைவயரைப்போல்ஒட்டிக்கொண்டிருந்தால் - தனசம்பத்துகளும் சந்தானமும் உண்டாகும், வயிற்றின்பேரில் மயிர்களிருந்தால் - நிர்ப்பாக்கியும் விதவையும் அவிசாரியும் ஆவாள்.

## ஸ்ரீ நாபியின் பலன்.

20-வது. நாபி விசாலமாயும் பள்ளமாயும் இருந்து இடது பக்கத்திலிருந்து வலதுபக்கத்திற்கு சுழிதிரும்பியிருந்தால்-புத்திரவதியும் ஐசுவரியவந்தியுமா யிருப்பாள், சிரியதாயிருந்தால்-தனவந்தியாவாள், மேலே ரோமங்கள் இருந்தால் - சந்தானம் நிற்கமாட்டாது, உள்ளேசுழியிருந்தால்-அவிசாரியாவாள், உள்ளேரோமங்கள் யிருந்தால் - அவிசாரி தனத்தினால் பிள்ளைகள் உண்டாகும்.

## ஸ்ரீகளின் மார்பின் பலன்.

21-வது. வட்டமாய் கெட்டியாய் பெரிதாய் இரண்டும் சமமாய் அல்லது இடதுமார்பெருத்து வலதுபக்கம் சிருத்திருக்கினும்-தரித்திரமடைவாள், இரண்டும் சமமாயிருக்கில் - சந்தானமுடையவள், ரோமமிருக்கில் - வம்சத்திற்கு அபகீர்த்திகொண்டுவருவாள், வட்டமாயிருந்தால் - தனவந்தியாவாள், மேலே ரோமமிருக்கில்-விதவையாவாள், விசாலமாயிருக்கில்-சந்தானம் நிர்க்காது, உயரமாயிருந்தால் - சகல அவலக்ஷணங் களுக்கும் பாத்திரியாவள்.

22-வது. மார்புரோமங்களில்லாமல் மிருதுவாயிருந்தபட்சத்தில்-அதிகசௌக்கியமனுபவிப்பாள், விசாலமாயிருந்தால்-தனவந்தியாய் ஆபரணம்பேரில் பிரியமுள்ளவளா யிருப்பாள்.

## ஸ்ரீகக்ஷங்களின் பலன்.

23-வது. கக்ஷங்களில் எள்ளைப்போல் கருப்பு மச்சமிருந்தால்-புருஷன்வீட்டை பாழாக்குவாள், ரோமங்களிருந்தால்-எல்லா அவலக்ஷணங்களும் உண்டாம்.

## ஸ்ரீபுஜங்களின் பலன்.

24-வது. புஜங்கள் அதிகபெறியன்வா யிருந்தாலும் - காந்தியில்லாமலிருந்தாலும் துக்கத்துக்கு பாத்திரியாவாள், மயிர்கள் இல்லாமல்இருந்தால் - போகங்கள்உண்டாகும், சன்னமா இருந்தாலும் மயிர்களிருந்தாலும் - தரித்திரியும் விதவையும் ஆவாள்.

## ஸ்ரீகளின்தோள்பலன்.

25 - வது. தோள் உயரமாயிருந்தால் - கூடப்பிறந்தவர்களுக்குகண்டம், விசாலமாயிருந்தால்-சகோதர விருத்தியும், மயிர்களிருந்தால்-விதவையும் தரித்திரியும் அவிசாரியும் திருடியும் ஆவாள் சந்தானம் நிற்காது, மேலே சுழியிருந்தால் - விதவை ஆவாள்.

## ஸ்ரீமுதுகின் பலன்.

26-வது. முதுகு கறுப்பாயிருந்தால் - எல்லா அவலட்சணங்களும் உண்டாகும், ஏத்தக்குறைச்சயாயிருந்தாலும்கூனுயிருந்தாலும் - துஷ்டியாயும் தரித்திரியாயு மிருப்பாள், பக்கங்கள் சதையில்லாமல் இருந்தால் - புருஷனுக்குக் கண்டம், மயிர்கள் இருந்தால்-அவிசாரியோ விதவையோ ஆவாள்.

## ஸ்ரீகைகளின் பலன்.

27-வது. கைகள் சமமாயிருந்தால் - தனவந்தி யாவாள், சமமாய் இராமலிருந்தால் - குலசம்பத்துகளை கெடுத்துவிடுவாள், முழங்கை புஷ்டியாயிருந்தால் - விதவையாவாள், கோணையாயிருந்தால் - மலடியும்விதவையுமாவாள், சன்னமாய்இருந்தால்-தனவந்தியாவாள், தாமரைப்போல் மிருதுவாயிருந்தால் - மகா ஐயுசுவரியமுண்டாகும், உலர்ந்திருந்தாலும் நரம்புகள் மேலே தெரிந்துக்கொண்டிருந்தாலும் இரண்டும் ஒருமாதிரியாய் இல்லாமலிருந்தாலும் - தரித்திரத்திற்கும் துக்கத்திற்கும் பாத்திரியாவாள், மணிக்கட்டுகள் தெரியாமலிருந்தால்-சம்பத்து உண்டாகும்.

## ஸ்ரீஉள்ளங்கையின்பலன்.

28-வது. உள்ளங்கைகள் மிருதுவாய் இருந்தால் - தனவந்தியாய் உலகத்தாரால் புகழப்படுவாள், கொஞ்சம் பள்ளமாயிருந்தால் - பசுவிருத்தி, அதிகபள்ளமாயாவது மேடாயாவது இராமல் முக்கியமான ரேகைகள் மாத்திரமிருந்தால்-அனேக காலம் போகபாக்கியங்களோடு சுமங்கலியாயிருந்து பதிவிருதையாய் சம்போகசவுக்கியத்தையடைந்து அனேகசந்தானங்களை பெறுவாள்.

29 - வது. மணிக்கட்டினிடத்தில் ஒருரேகை உண்டாய் நடு விரல் வரையிலும் போனாலும் நீண்டரேகைகள் இருந்தாலும்-போகபாக்கியங்களை யனுபவிப்பான்.

30 - வது. சுண்டுவிரலின்கீழ் ஒருரேகை உண்டாய் மத்திய விரலுக்கும் இரண்டாவது விரலுக்கும் மத்தியபாகம் வரைக்கும் வியாபித்திருந்தால் - பூரணாயுசு, அந்தரேகை குறுகி இருந்தால் - அதின் அளவைப் பார்த்து ஆயுசு நிச்சிக்க வேண்டியது.

31 - வது. கட்டைவிரலில்கீழ் பெரிய ரேகைகள் புத்திரர்களுட எண்ணிக்கையும் சிரியரேகைகள் புத்திரிகளுடைய யெண்ணிக்கையும் தெரிவிக்கும் அந்தரேகைகள் பூரணமாயும் தெளிவாயுமிருந்தால்-அந்தக்குழந்தைகள் தீர்க்காயுசா யிருப்பார்களென்றும் மறைந்திருந்தாலும் கத்திரிரேகை களிருந்தாலும் அல்பாயுசுகாரர்களென்றும் அறியவேண்டியது மற்றரேகைகளும் அவைகளின் பலன்களும் புருஷலட்சணத்தைப்போலவேயென்று அறிந்துக் கொள்ள வேண்டியது.

## ஸ்ரீகைவிரல்களின் பலன்.

32-வது. கைவிரல்கள் மிருதுவாயிருந்தால்- தனவந்தியாயும் லோகபூஜியதை யுள்ளவளாயுமிருப்பாள், விசாலமாயிருந்தால்-ஊழியம்செய்து ஜீவனம்செய்வாள், சேர்ந்திருந்தால் - தரித்திரியாவாள், பெருத்தனவாயிருந்தால் - விதவையாவாள், நகங்கள் புழுத்திருந்தால்-தரித்திரியாவாள்.

## ஸ்ரீகழுத்தின் பலன்.

33-வது. கழுத்து குறுகியிருந்தால்-தரித்திரியாவாள், உயரமாயிருந்தால்-வெக்கங்கெட்டவளாவாள், ஒட்டையைப்போல் மிகவும் உயரமாயிருந்தால்-வமிசத்தை நாசம்செய்வாள், பெருத்துயிருந்தால்-கோபகாரியாவாள், விசாலமா யிருந்தால்-குலத்தை விருத்திசெய்வாள், மிகவுங் குண்டாயும் பெருத்தும் இருந்தால்-தரித்திரியாவாள், சன்னமாயிருந்தால் - ஆயுராரோக்கிய ஐசுவரியத்தை யுடைத்தாயிருப்பாள், மிகவும் சன்னமா யிருந்தால்-மைதன பிரியமுள்ளவளாய் சந்தானமில்லாம லிருப்பாள்,

சங்கத்தைப்போலிருந்தால் - பிரந்தவீட்டுக்கும் மாமியார்வீட்டுக்கும் கீர்த்திகொண்டு வருவாள், தாமரைப்போல்இருந்தால்-புருஷனைவிட்டுவிட்டு இஷ்டபிரகாரம் சஞ்சரிப்பாள், பக்கத்தில் எள்ளைப்போல் கருப்புமச்சமிருந்தால்-முதலில் பிள்ளையைப்பெருவாள், மேலேசுழியிருந்தால் - மலடியாவாள், மூன்றுரேகைகளிருந்தால்-பாக்கியவதியாவாள்.

## ஸ்ரீமோவாய்கட்டையின் பலன்.

34-வது. மோவாய்கட்டைகருப்பாயிருந்தால் - மிகவும்கெட்டவளாயிருப்பாள், மோவாய்கட்டையின்பேரில் மயிர் இருந்தால்-புருஷனோடு சண்டைபிடித்துக்கொண்டிருப்பாள்.

## ஸ்ரீஉதடுகளின் பலன்.

35-வது. உதடுகள் கருப்பாயிருந்தால் - துஷ்டவதியாவாள், பவழத்தைப்போல் இருந்து மிருதுவாயும் சன்னமாயும் இருந்தால்-பதிவிரதையாய் கீர்த்தியடைவாள், பக்கங்களிலாவது மேலேயாவது மயிர்களிருந்தால் - தரித்திரியாயாவது போகியாயாவது இருப்பாள், மேல் உதடின்பேரில் மீசையைப்போல் மயிர்களிருந்தால்-துக்கத்திற்கு பாத்திரியாவாள், அல்லதுபுருஷனோடு சண்டை பிடித்துக்கொண்டிருப்பாள் - அல்லது விதவையாவாள், மேல்உதடு உயரமாயிருந்தால் - சண்டைக்காரியாவாள், பெரியதாயிருந்தால் அவிசாரியாய்க் குலத்தைக் கெடுப்பாள், கீழ் உதடுமிகவும் பெரியதாய் தொங்கிக்கொண் டிருந்தால்-தரித்திரியும் துஷ்டியுமாவாள், கீழ்வுதடை கொஞ்சம்திரந்தால் தாமரையைப்போல் அல்லது வேப்பம் தழைபோல் வர்ணத்தை உடைத்தாயிருந்தால்-ராஜபத்தினியாவாள்.

## ஸ்ரீவாயின் பலன்.

36-வது. வாய்மிகவும் பெரியதாயிருந்தால் - புருஷனைவிட்டுவிடுவாள், வெண்மையாயிருந்தால்-தளூரியாயிருப்பாள்.

## ஸ்ரீபற்களின் பலன்.

37-வது. பற்கள் சமமாயிருந்தால் - ஆயுராரோக்கிய ஐசுவரியங்க ளுண்டாகும், கோணல் மாணலாயும் மேலும் கீழுமாயும்

இருந்தால் - வமிசத்திற்கு அபகீர்த்தியைக் கொண்டுவருவாள் திருடியாவாள்.

38-வது. பற்கள்சந்துவிட்டாவது கனமாயாவது இருந்தால்-விசேஷதுக்கம், பள்ளமாய் இருந்தால் - அதிக துர்மார்க்கியா வாள்.

39 - வது. பற்கள் உயரமாயிருந்தாலும் வரிசைதப்பி யிருந்தாலும் பார்க்கிரதற்கு அசங்கியமாயிருந்தாலும் கருப்பாய்பாச்சிப்பிடித்திருந்தாலும்-துக்கத்திற்கு பாத்திரியாவாள், மல்லிகைமொக்கைப்போ லிருந்தால்-புருஷன் தனிகனுவான், மிருதுவாயிருந்தால்-சுகவதியாவாள், வெந்தயத்தைப்போலிருந்தால்-புருஷனைவிட்டு பரபுருஷனைச்சேறுவாள்.

## ஸ்ரீ நாக்கின் பலன்.

40 - வது. நாக்கு பெரிதாயாவது தடித்தாவது யிருந்தால்-தரித்திரியும் பாபியுமாவாள், பச்சையாயிருந்தால்-துராத்துமாயாவாள்.

## ஸ்ரீகண்டதொனியின் பலன்.

41-வது. கண்டத்தொனி நன்றாயிருந்தால்- ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாயிருக்கும், கோகிலசுரத்தைப்போலாவது கிளிகொஞ்சுவதைப்போலாவது அமிசசுரத்தைப் போலாவதிருந்தால்-சுபலட்சணங்களை உடைத்தாயிருப்பாள்.

## ஸ்ரீகாக்கைதொனியின் பலன்.

42-வது. காக்கைத் தொனியைப்போ லிருந்தால்-விதவையாவாள், பெண்பூனைத் தொனியைப்போலிருந்தால் - முன்கோபியும் திருடியும் ஆவாள் பிள்ளைகளைக் கொல்லுவாள், எருதுசப்தத்தைப்போ லிருந்தால்-தரித்திரியாய் குலத்திற்குஅபகீர்த்தி கொண்டுவருவாள்.

## ஸ்ரீ மூக்கின் பலன்.

43-வது. மூக்கு நீண்டிருந்தால் - ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாகும்.

44-வது. தொண்ணை மூக்குள்ளவள் - தரித்திரியும் பாபியும் ஆவாள்.

45-வது. மூக்கு பள்ளமாயிருந்தால் - புருஷனைப் பாழாக்கு வாள், மிருதுவாயிருந்து சிறியசிறிய துவாரங்கள் சமமாய்காண ப்பட்டால்-சம்பத்துள்ளவளாவாள்.

46-வது. இடதுமூக்கின்பேரில் எள்ளைப்போல் கருப்பு மச்ச ங்களிருந்தால்-தனதான்னிய முள்ளவளாயிருப்பாள்.

47-வது. மூக்கில் ரோமங்களிருந்தால்-சண்டியும் குரூரமுள் ளவளுமாவாள், துவாரங்களில் மயிர்சுழிதிரும்பியிருந்தால்-எல் லா அவலட்சணங்களு முண்டாயிருக்கும்.

## ஸ்ரீகண்களின்பலன்.

48-வது. கண்கள் தாமரை இதழைப்போல் அழகாய்விசால மாயிருந்தால் - ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாயிரு க்கும்.

49 - வது. கண்ணில் எறும்பைப்போல் சன்னமாயிருந்தால்- தரித்திரியும் விசேஷ சம்போகத்தை விரும்புகிறவளுமா யிருப் பாள்.

50-வது. கண் கோணையாயிருந்தால் - பாபியா இருப்பாள், குண்டாயிருந்தால் - புருஷனைப்பாழாக்குவாள், குமுகத்தைப் போலிருந்தால்-சம்பத்து உண்டாகும்.

51-வது. கண்பச்சையாக யிருந்தாலும் கோதுமை வர்ணமா யிருந்தாலும்-அவிசாரியாவாள்.

52-வது. கண் கபிலைநிறமாக யிருந்தால்-குலத்தையும் தனத் தையும் நாசமாக்குவாள்.

53-வது. பூனைக்கண்ணை யுடையவள் - துஷ்டையாயும் அவி சாரியாயு மிருப்பாள்.

54-வது. தேன்நிறக் கண்களுடையவள் அதிருஷ்டவதியாய் இருப்பாள்.

55-வது. வாக்குக்கண்ணுயிருந்தால்- தனவந்தியாவாள்.

56-வது. கண்கள் வாடினமாதரியாக இருந்தால்-குலத்திற்கு அபகீர்த்தி கொண்டுவருவாள் தரித்திரியாவாள்.

57-வது. முட்டைக் கண்களாவது தாங்குமூஞ்சிபார்வையா வது மந்ததிருஷ்டியாவது இருந்தால் - துஷ்டியும் தரித்திரியும் ஆவாள்.

58-வது. ஒரேதிருஷ்டியுள்ளவள் - தீர்த்தயாத்திரைசெய்வாள், ஓரப்பார்வையானல்-தரித்திரம், கோணைப்பார்வை யுள்ளவள்-துர்மார்க்கியாய் குலத்தைக் கெடுப்பாள், சஞ்சலபார்வையுள்ளவள் - விதவையாய் அவிசாரிதனம் செய்வாள், கண் இரப்பைகள் சிவப்பாயிருந்தாலும் கோணல்மாணலா யிருந்தாலும்-பரமதரித்திரியாவாள்.

## ஸ்ரீகண்புருவத்தின் பலன்.

59-வது. கண் புருவம் விசேஷ அகலமா யில்லாமல் பாலசந்திரனைப்போல் வளைந்து இரண்டும் சேராமலிருந்தால் - சம்பத்துண்டாயிருக்கும், புருவங்கள் இரண்டும்சேர்ந்திருந்தால்-துர்மார்க்கியும் தரித்திரியும் ஆவாள், புருவத்தில் சுழியிருந்தால்-குலத்தைக்கெடுக்கும்.

## ஸ்ரீமுகக்குறியின் பலன்.

60-வது. முகம் பூரணசந்திரனைப்போலிருந்தால் - பூஜியதையுடையவளாவாள்.

61-வது. தாமரைமலரைப்போ லிருந்தால்-சுகமனுபவிப்பாள்

62-வது. கருப்பாயிருந்தால்-துர்மார்க்கியாவாள்.

63-வது. முகம் உப்பியிருந்தாலும் வாடியிருந்தாலும் - புருஷனுக்கு கண்டம்.

64-வது. முகம் சன்னமாயிருந்தால்-புத்திரன் பேரன்களைப் பெற்று சுகமனுபவிப்பாள்.

65-வது புருஷமுகத்தைப்போல் இருந்தால்-பாபியும்குரூரவதியும் தரித்திரியும் ஆவாள்.

## ஸ்ரீநெற்றியின் பலன்.

66-வது. நெற்றி விசாலமா யிருந்தால் - புருஷனுக்கும் மாமனுருக்கும் கண்டம்.

67-வது. பள்ளமாயிருந்தால்-மச்சினனுக்குக் கண்டம்.

68-வது. எள்ளைப்போல் கருப்பு மச்சமிருந்தால் - முதலில் பிள்ளையைப் பெறுவாள்.

69-வது. நெற்றியில் சுழியிருந்தால்-அவிசாரியும் விதவையுமாவாள்.

70-வது. நெற்றியின்மத்தியில் ரோமங்களோடு சுழியிருந்தால்-நாகவல்லிக்குள்ளாகவே புருஷன் இறந்துபோவான்.

71-வது. நெற்றியின் பக்கத்தில்சுழியிருந்தால் - அவிசாரியாவாள்.

72-வது. நெற்றி அர்த்தசந்திரனைப்போலிருந்தால்-சம்பத்து உண்டாகும்.

## ஸ்ரீ தாடையின் பலன்.

73-வது. தாடைகள் கருப்பா யிருந்தால் - தரித்திரியும் துர்மார்க்கியும் ஆவாள்.

74-வது. தாடையில் ரோமங்க ளில்லாம லிருந்தால் - போகியாவாள்.

75-வது. தாடைபக்கத்தில் ஜில்பாக்கள் யிருந்தால் - எல்லா அவலட்சணங்களுக்கும் இருப்பிடமாவாள்.

76-வது. தாடைமேலே சுழிகள் விழுந்திருந்தால் - பாபியும் தரித்திரியுமாவாள்.

77-வது. சிரிக்கும்போது தாடையில் குழிவிழுந்தால் - அவிசாரியாவாள்.

## ஸ்ரீகாதுகளின் பலன்.

78-வது. காதுகள் அதிக நீளமில்லாமல் சதைபிடித்திருந்தால்-தனவந்தியாவாள்.

79-வது. காதுகள் மிருதுவாயிருந்தால்- ரத்தினுபரணங்களைத்தரிப்பாள்.

80-வது. காதுகள் கெட்டியாயிருந்தால் - தங்கஆபரணங்களைத்தரிப்பாள்.

81-வது. காதுகளிரண்டும் சமானமாயில்லாதிருந்தால்-துக்கத்திற்கு பாத்திரியாவாள்.

82-வது. காதுகளில் ரோமங்க ளில்லாதிருந்தால் - போகியாவாள்.

83-வது. காதுகளில் ரோமங்களிருந்தால் - தரித்திரியும் புருஷனேடு சண்டைபிடிக்கின்றவளுமா யிருப்பாள்.

## ஸ்ரீ கன்னங்களின் பலன்.

84 - வது. கன்னங்களில் மயிர்கள் சுழிதிரும்பி இருந்தால்-சகல அவலட்சணங்களும் உண்டாகும்.

## ஸ்ரீ தலையின் பலன்.

85-வது. தலைபெருதாயிருந்தால் - துர்மார்க்கியாவாள், பின்பக்கம் எடுப்பாயிருந்தால்-புருஷனுக்குகண்டம்; விசாலமாயிருந்தால்-அல்பாயுசுள்ளவளாவாள்.

## ஸ்ரீ தலைமயிர்களின்பலன்.

86-வது. தலைமயிர்கள் சுருள் சுருளா யிருந்தால் - ஐசுவரிய வதியாவாள்.

87-வது. நீண்டுயிருந்தால்-பாபியாவாள்.

88-வது. குட்டையாயிருந்தால்-தனவந்தியாவாள்.

89-வது. கொஞ்சம் நீலவர்ணத்துடன் குருகியிருந்தால்-புருஷனை தனவந்தனுக்குவாள், அதிகநீளமா யிருந்தால் - வேசியாவாள்.

90-வது. இந்திரநீலமா யிருந்தால் - தனசம்பத்துகளை அனுபவிப்பாள்.

91-வது. மழமழவென் றிருந்தாலும் கருப்பாயிருந்தாலும்-பதிவிரதையும் தனவதியும் ஆவாள்.

92-வது. சிவப்பாயிருந்தால்-அதிகதரித்திரியாவாள்.

93-வது. கபிலவர்ணமாயிருந்தால்-சுகவதியாவாள்.

94 - வது. கபிலைவர்ணமாயிருந்தா விசேஷமா யிருந்தாலும் முனைகள்தெரியாமல் முகத்தில் பட்டுக்கொண் டிருந்தாலும் முரட்டுமயிர்களா யிருந்தாலும் - துராத்துமாவும் தரித்திரியும் விதவையுமாவாள்.

95-வது. குதிரைவாலைப்போல் பிகுவாயிருந்தால்- புருஷனோடு சண்டைபிடித்துக்கொண் டிருப்பாள்.

96-வது. முன்மயிர் கோணலாயிருந்து முகத்தில்பட்டால்-போகபாக்கியங்கள் உண்டாயிருக்கும், தலையில் ரோமங்கள் சுழிபட்டிருந்தால்-விதவையாவாள்.

## ஸ்ரீதேகவர்ணபலன்.

97-வது. தேகம் ரத்தவர்ணமா யிருந்தால் - லோகபூஜியதையுள்ளவளாவாள்.

98-வது. மிருதுவாயிருந்தால் - ஆயுராரோக்கிய ஐசுவரியங்கள் உண்டாயிருக்கும்.

99-வது. மிகவும் உயரமாயிருந்தாலும் மிகவும்குட்டையாய் இருந்தாலும் மிகவும் தடித்திருந்தாலும் அதிக சன்னமாயிருந்தாலும்-மோசக்காரியும் தரித்திரியுமாவாள்.

100-வது. கெட்டியாயிருந்தாலும் கிழதேகமா யிருந்தாலும்-துராத்மா ஆவாள், இளைத்திருந்தால்-வேசியாவாள்.

101-வது. எந்த அவயவத்திலாவது வெட்டுமோதிரி யிருந்தால்-தரித்திரியாவாள்.

102-வது. வலதுபக்கத்திலிருக்கும் அங்கம் ஏதாவது இடது பக்கம் அங்கத்தைக்காட்டிலும் சிரியதாயிருந்தால்-போகபாக்கியங்களை யனுபவிப்பாள்.

103-வது. தாமரைமலரைப்போல் வர்ணமுடையமாது - நஞ்சுக்குச் சமானவளுமாய் வேண்டியுமாவாள்.

## ஸ்ரீகளின் ரேகையின் பொதுபலன்.

104-வது, வேம்புபோலும் கத்தாழைப்போலும் நாற்றம் நாறுமாயினும் புலால்நாற்றம்வீசினும் அம்மாதை விவாகம் செய்யில்-அம்மனை பாழாகும்.

105-வது உச்சியில் சுழி ஒன்று தோன்றி இடமாக சுற்றிக்கொண்டியிருந்தால்-அம்மாது யாவரையும் பகைவடித்துவிட்டு நீசப்பறையனை யணைவாள்.

106-வது. கண்கள் பார்வையானது ஒருபாலாக நோக்கில்-அம்மாது தன்கணவனைவிட்டு பிரிந்துபோவாள்.

107-வது. மருவானது தோள்மேலும் மூக்கின்மேலும் முகத்தின்மேலும் இருந்தாலும் கண்களினிடமாக கூடியிருந்தாலும்-இக்குறி இடதுபக்கமிருந்தால்-செல்வமுடையவள், வலதுபக்கமிருந்தால்-அவள்போரவிடம் நாசமாகும்.

108-வது. வில்லைப்போலும் வளையலைப்போலும் கரிநாயின் வாலைப்போலும் புருவமானது ஒன்றோடொன்று ஒவ்வாமறப்படிக்குயிருந்தால்-அம்மாதுக்கு புத்திரவிருத்தி யில்லாமல் மனது வெறுத்து வேறோரிடத்தில்போய்ச்சேர்ந்து வாழ்வாள்.

109-வது. கூந்தலானது தோகையைப்போலும் விழியானது கருப்பாகியும் தேகம்பொன்னிறமாயும் உடையவள்-அரசனுக்குப் பாரியாவாள்.

110-வது. கழுத்துஒருவிரலுக்குள்ளாகவும் மார்பானதுஒட்டியும் ஒன்றாகயிருந்தால்-அவளிருக்குமிடம் நாசமாகும்.

111-வது. பேசும்போது மூக்கானது குரட்டி சுழித்துவாங்குமாகில்-அம்மாதை அணையப்படாது.

112-வது. கழுத்தில் தோன்றியரேகையானது ஆச்சரியமுள்ளதாயும் யானைப்போல் இரண்டுமூன்றுரேகை வீச்சாக கருத்திருக்கினும் தேகமீது வசம்புநாற்றம் வீசினும்-அம்மாதை சேரப்படாது.

113 - வது. கமுகதுபோல் கழுத்தும் சுகமுடைய பாதமும் சுகுந்தபரிமளாதிகள் வீசும்தேகமும் உடையமாது - அரசனுடைய பாரியாவாள்.

114 - வது. கைவிரல்கள் ஒன்றுக்கொன்று அளவானது குறைந்தும் கணைக்கால் முத்தியும் உயிரானது வெளுத்துமிருந்தால் - அம்மாது போகமானது தவர்ந்து நன்மையானது ஒழிந்து செல்வமானது மாறி விதவையாவாள்.

115-வது. சிறுவிரலானது பூமியில் படியாமல் யிருக்குமாகில்-செல்வமானதுபோய் விதவையாவாள், மற்றைய நான்கு விரல்களும் பூமியின்மீதுப்பொருந்தாமலிருந்தால் - அம்மாதுவிதவையாகியும் பின்பு வேரொருமணம்புரிவாள்.

116-வது. சிரசின்மீது சுழியானது இரண்டுந்தவரி நெற்றி புருவம்முதல் இவைகளின்மேல் இருந்தாலும் ஸ்தனக்காம்பில் இல்லாதிருந்தால்-அம்மாது தன்வயற்றில் தோன்றிய கெற்பத்தை அழிப்பாள் நிந்தனையுடையவளாவாள்.

117-வது. சர்ப்பப்படமானது புடைத்துவிம்மிஸ்தனத்தின் வலமாகப்பற்றியிருந்தால் - தன்னுடையகணவன் மொழியைத் தள்ளி நடக்கமாட்டாள், இடதுபக்கமாக யிருந்தால்-வேசியாகத்திரிவாள்.

118-வது. அங்குசம் குடை பூமாலை குண்டலம் கடகம் சங்கு தாமரைப்பூரேகைகள் கையிலிருந்தால் - அரசனையிழந்தும் வைகமாண்டுவருவாள்.

119-வது. மேற்கூறிய ரேகைகள் ஒன்றாகிலும் இருக்குமாகில்-உலகாளும் ராணியாவாள், அரசனுடைய தொழில் யாவும் நடத்துவள், அந்தரேகை இடதுபக்கமாக தோன்றி குருக்கேபாய்ந்து இருந்தால்-அகுதியாகுவாள்.

120-வது. நெற்றியில் வரைகள் ஐந்தும் இடைவிடாமல் பற்றியிருந்தால்-தீர்க்காயுசுட னிருப்பாள்.

121-வது. வயற்றில் சுழியானது ஒன்றுவலமாகவும் மையமாகவுங் கூடியிருந்தால் - மூன்றாவது தாரமாய் இருந்துவாழ்குவாள்.

122-வது. கையின் பெருவிரலின் அடியில்நின்று குருக்காக ப்பாய்ந்து இருக்குமாகில்-தன்னுடையகணவனேறும்படியான குதிரையை ஓட்டும் குதிரைக்காரனை பிரியமோடு அணைந்து சேர்வாள்.

123-வது. கழுத்தில் சுழி ஒன்றுதோன்றி இடது பக்கமாக சுற்றிக்கொண்டு யிருந்தால் - விவாகமாவதற்குமுன்னமே வேசி யாகப்போவாள்.

124-வது. நாக்கில்மருவுஒன்று நுனியிலும்மத்தியிலும் இட துபக்கமாக யிருந்தால்-வாழ்வானது குறைந்து புருஷனையுமிழ ந்து இருப்பதோடு சேருமிடம் நாசமாகும்.

125-வது. நேருநெற்றி யுடையவள் எடுப்பானவார்த்தைகள் பேசி-எங்கும் பொசிப்பு பொசிப்பாள்.

126-வது. உதட்டில் ரேகைவொன்று ஊடுருகித்தாங்கி நிற் கில்-தணவனையதட்டி அகமாகப்பேசிடும் வல்லமையுடையவளு மாகயிருந்து பாலுஞ்சோறுமாக கப்பங்கட்டி காட்டினிடமாக ச்சென்று கள்ளபுருஷனுடன் கூடுவாள்.

127-வது. கண்களும் யிடையும் சிறுத்து ஸ்தனமானது பெ றுத்து ஆகாயத்தை பார்க்காமல் மேலாகப்பரந்து அகன்றுயி ருந்தால்-மருத்துவத்தொழிலினால் நன்மையாகிய பெயரெடுத் துவாழ்வாள்.

128-வது. விழி இரண்டும் மச்சத்தின் விழிபோல்இருந்தால் மன்மதன்போல் அழகுடைய புருஷனை நாள்தோரும் ஆசை யோடு கூடியணைவாள் கெருவமுடையவளாவாள்.

129 - வது. மங்கையர்களுக்கிந்த ரேகையின்குறிகள் கண்டு றைப்பது யாதெனில் மரணம் மகவு ஆயுசு தீக்கம் சங்கைகள் இவைகளை நன்றாக உரைக்கும்படி ரேகைகளையறிந்து பலாபல ன் சரஸ்வதியும் லட்சுமியும் மனதுகூர்ந்தருள ஈஸ்வரன் கடா ட்சத்தால் கூறினோம்.

ஸ்ரீ அவயவ இரேகை சாஸ்திரம்

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

## ஆண் - பெண்

# அஸ்தரேகைகளின் விபரங்கள்.

### சங்குசக்கர ரேகையின் பலன்.

புருஷானுடைய வலது உள்ளங்கையில் சங்கைப்போலாவது அல்லது சக்கரத்தைப் போலாவது ஒருரேகைஉள்ளவனுக்குப் - பொருள்வருத்தும் சிலவுமாகயிருக்கும், இரண்டு ரேகையும் இருக்குமாகில் - அதிகதனந்தேடி நல்விஷயங்களுக்குச் சிலவிட்டு கீர்த்தியடைகுவான்.

### மச்ச ரேகையின் பலன்.

சேர்க்கண்டையைப்போல் உள்ளங்கையின் மத்தியபாகத்தில் இருக்குமாயின் - அவன்யோகமுடையவனாய் தனதான்னிய முதலானதும் தேடவல்லவன் பிறருக்கு உபகாரமுள்ளவன்.

### யவதான்னியரேகையின் பலன்.

யவதான்னியரேகை உள்ளங்கையில் எவ்விடத்திலேனுமிருக்கினும் - அவன் சிவபக்தியுடையவன் செல்வமுடையவன்,நவதானிய பலிதமுடையவனாகும்.

### குடரேகையின் பலன்.

தண்ணீர்குடம்போல்உள்ளங்கையின் மத்தியில்இருக்கில்- அவன் தரித்திரனாகியும் யாவரும் நிந்திக்கும்படியான பெயருடையவனாகியும் வருமையடைகுவான்.

### கும்ப ரேகையின் பலன்.

கும்பகலசம்போல் உள்ளங்கையி லிருக்குமாகின் - அவன் பொருமையுடையவனாய் தனவானாய் யாவருக்கும்நல்லவனாய் பெயரெடுப்பான்.

## சூரியசந்திர ரேகையின் பலன்.

சூரியனைப்போலாவது அல்லது சந்திரனைப்போலாவது ஒருரேகை உள்ளங்கையுள்ளவன் - சகலநூற்களையும் வாசிக்கும்படியான வல்லமையுள்ளப் புலவனாகுவன், இரண்டுரேகையுமிருக்குமாகில் - வித்தையோடு செல்வமும் சுகமுமுள்ளவனாகயிருப்பான்.

## தாமரைப்பூரேகையின் பலன்.

தாமரை புஷ்பத்தைப்போல் உள்ளங்கையின் மத்தியில் இருக்குமாகின் - அவன் அஷ்ட அயிஸ்வரியமுடன் லட்சுமி கடாட்சமுள்ளவனாகி யாவரும்தன்னைப் புகழ்ந்தேத்தும்படியான புகழுடைய சீமானாகவிருப்பான்.

## மாதளம்பூரேகையின் பலன்.

மாதளம் புஷ்பத்தைப்போல் ஒருரேகை உள்ளங் கையில் யெங்கையேனு மிருக்குமாகின்-அவன் அதிகக்காமியாகி ஸ்திரீகள்மீது பட்சமுடையவனாய் பெண்ணுளும்போகத்தில் வாழ்ந்து யிருப்பான்.

## வேல்ரேகையின் பலன்.

வேலாயுதத்தைப்போல் ஒருரேகை உள்ளங்கையின் நடுவிரலுக்கு நேராகவிருக்குமாகின் - அவன் சகலகாரியங் களினும் சாமார்த்திய முடையவனாகியும் சூரனாகியும் உத்தத்தில் வெற்றியடைகுவான்.

## சிங்க ரேகையின் பலன்.

சிங்கத்தின் தலைபோல் ஒருரேகை உள்ளங்கையி லிருக்குமாகின் - அவன் புண்ணியவானாகியும் யோகவானாகியும், தேவதா பக்தியில் சிறந்தவனாகியும் இருப்பதோடு உபகார முடையவனாகி யிருப்பான்.

## ரிஷபரேகையின் பலன்.

ரிஷபத்தைப்போல் உருவுடைய ஒருரேகை உள்ளங்கையி லிருக்குமாகின் - அவனுக்கு வாகனாதிகள் கிடைக்கும் பால்பசு விருத்தியாகும் செல்வமுடையவனாக யிருப்பான்.

## யவரேகையின் பலன்.

பெருவிரலின் அடியில் கீற்றுகளுண்டாகி சுழித்திருந்தால்-அப்புருஷன் வெகுபுத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று சுகித்திருப்பான், அன்றியும்உள்ளங்கையில் அழகுள்ளவையாயும் வெகுவிசித்திரமாயும் கீற்றுகளுள்ள ரேகைகள்நிறைந்திருக்கில்-தனவந்தனுகவிருப்பான்.

## ரேகைகளின் பொதுபலன்.

உள்ளங்கையில் தேவாலயம் போலும் தெப்பம்போலும் வஜ்ஜிராயுதம்போலும் ரேகைகள் தோற்றப்படுமாகில்-அவன் துஷ்டனுகியும் துர்நடக்கை யுடையவனுகியும் கோபியாகியும் இருப்பான், மீன்வாலைப்போல் ஒருரேகையிருந்தால்-அவன் அதிக வித்தையும் புத்தியும் புகழுமுடையவனுக விருப்பான்.

யானை குதிரை குடை பல்லக்கு இவ்வித உருவமுள்ளரேகைகள் உள்ளங்கையில்தோன்றுமாகிலும் அல்லதுமணிக்கட்டினிடமாகவிருந்து மூன்றுரேகைகள் உண்டாகி உள்ளங்கையில் ஏறியிருக்குமாகில்-அவன் சகலரும்புகழ அரசனுகவிருப்பான், தாமரை தண்டுபோல ரேகையாகினும் அங்குசரேகை யாகினுமுள்ளவன் - மிகுத்தாகிய செல்வமுடையவனுய் குபேரனைப் போல் வாழ்குவான்.

உள்ளங்கையில் ஈட்டி வில் அம்பு கோடாலி கத்தி இவைகளைப்போன்ற ரேகைகள்யிருக்கில் - அவன் அரசர்களிடத்தில் சேனுதிபதியாக அமர்ந்து வாழ்குவான், உரல் கலப்பை உலக்கை இவ்விதரேகையிருந்தால்-அவன்யாகாதிகள் செய்குவான், முதலையைப்போலும் முக்கோணம்போலும் ரேகையிருக்கில்-அவன் புத்திர மித்திர களத்திராதிகளும் பந்துவர்க்கங்களுமுடைத்தாய் அதிகசெல்வமுடையவனுக விருப்பான், உள்ளங்கையின் மத்தியில்திருகோணம்போலும் என்கோணம்போலும் நவகோணம்போலும் ரேகையிருந்தால்-அவன் தீர்த்தப்பிரதிஷ்டையும் தேவாலய பிரதிஷ்டையும் செய்வான் செல்வமுடைய சுகவானுயிருப்பான்.

உள்ளங்கையில் உப்பிரிகைபோலும் கயறுபோலும்ரேகைகள்யிருக்கில்-அவன் செல்வவானுமாய் பசுவிருத்தியுடையவனுமாயிருப்பான், பூநூல்போல் ரேகையுள்ளவன் யாவரும் புகழ ராஜரீகம் பண்ணுவான்.

உள்ளங்கையினுள்ள கோடுகள் இடையில் பிரகாசமன்றி கத்திரித்தாப்போல் அருந்திருந்தால்-அவன் திரவியநாசமடைகுவன், திராசைப்போல் ரேகை யிருக்குமாகின் - அவன்வியாபாரவிருத்தியுள்ளவனக விருப்பான், சூலம்போல் ரேகையிருக்கில்-அவன் தானதருமஞ்செய்குவன், எக்கியம் வளர்ப்பன்-தேவதாபத்தியுள்ளவன், மலையைப்போலும்மனிதன் தலையைப்போலும் கடகம்போலும் ரேகைகள் காணப்பட வுள்ளவன் - யாவரும் இவனைக்கண்டுப் பயங்கொள்ளும்படியான மாந்திரீகவாதியாகவிருப்பான்.

## வலதுகை பெருவிரலின் ரேகையின் பலன்.

வலதுகையின் பெருவிரலினடியில் ஒருகீற்றுரேகை சங்கிலிபோல்கான யிருக்குமாகில் - அவன்பாவமுடையவனுகும், விரலின் நடுவே இரண்டு கீற்றிருந்தால்-அவன் தான்னிய முடையவனுக விருப்பான், அன்றியும் கபடன் அலச்சலுடையவன், வலதுபெருவிரலின்மேல் வலச்சுழியிருந்தால் - அதிகசெல்வமுடையவனுக விருப்பான், இடச்சுழியாகவிருக்கில் - அவனுக்கு ஆயுசு அர்ப்பமாவதோடு அலச்சல் படுகுவன்.

வலதுபெருவிரலின் அடித்துடங்கி யெந்தயிடத்திலாவது உட்புறமாவது மேல்புறமாவது மருவானதுயிருந்தால் - அவன் சகலவல்லமையும் பொருந்திய ஞானயோக முடையவனுகவிருப்பான்.

இடதுகையின் பெருவிரலில் மருவிருந்தால் - அவன்பாவமுடையவனுகி யாவரும் யிகழும்படியான துர்ச்செய்கையை நடப்பான்.

வலதுபெருவிரலின் அடியில் கனத்த ரேகையானது ஒன்றிருக்கில்-அவன் அதிகமாகப் பெண்களையேபெருகுவான்.

வலதுகையின்பெருவிரலின் நடுக்கணுவில் ஒருகீற்றிருந்தால் தரித்திரனகுவன், இரண்டுகீற்றுகவிருக்கில் - செல்வமுடையவ

ஞக விருப்பான் ஆபரணதிகள் அணிகுவான், பெருவிரலினடியில் மூன்றுகீற்ருகவும் மூன்றுசுற்ருகவும் சுற்றிக்கொண்டிருக்குமாகில்-அரசுசெய்குவான் அல்லது பண்டிதனுக விருப்பான் அல்லதுதனவானுகுவன்; இரட்டைசுழியாக விருந்தால்-அதிக செல்வமுடையவனுக விருப்பான் பூசிக்கப்படுகுவன், ஒத்தை சுழியாயிருந்தால்-செல்வமுடையவனுகும், பெருவிரலின் கீழ்புரத்தில் காக்கை கால்போல் ரேகைஒன்று யிருக்குமாகில் -அவன்பலவிதமான பிணியும்பட்டு கடைசியில் சூலைரோகத்தினுல் மரணமடைகுவான்.

வலதுகையின் பெருவிரலின்மேல் யிருக்கும் ரேகையானது மடிப்பாயிருந்தால்-அவன் மிகவும் வருமையுடையவனுக விருப்பான், பெருவிரலின் அடியிலுள்ள ரேகைகள் கனத்திருக்குமாகில்-பிள்ளைகளைப் பெருகுவன், சிருத்திருக்குமாகில் - பெண்களைப் பெருகுவன்.

## ஆள்காட்டிவிரலின்பலன்.

வலது கையின் பெருவிரலுக்கு அடுத்தவிரலாகிய ஆள்காட்டிவிரலின் அடியில்தோன்றிய கீற்றுஒன்ருகவிருக்கில் - அவன் வருமையுந் தரித்திரமு முடையவனுகவிருப்பான், இரண்டு மூன்று நாலாகவிருக்கில்-தீரவானும் வெற்றியுடையவனுமாக விருப்பான், நடுகணுவில் ஒரு கீற்றிருந்தால்-அவன் சிக்கினமுடையவனுகும், இரண்டுமூன்று பலவாகவிருந்தால்- புத்திசாலியாக விருப்பான், மேல்கணுவில் ஒருகீற்றிருந்தால்-வித்தையில்வல்லவனுகவிருப்பான், பலவாகயிருந்தால்-வஞ்சகனுகும்.

வலதுகையின் ஆள்காட்டின் விரலின்மேல் வலச்சுழியாக யிருக்குமாகின்-அரசனுக்குச் சமானமாகவிருப்பான், இடச்சுழியாகவிருக்கில் - புத்திவுடைய மந்திரிக்குச் சமானமாக விருப்பான், ஆள்காட்டிவிரலின் இடதுபக்கம் மருவிருக்கில் - மந்தபுத்தி யுடையவனுகவிருப்பான்.

## நடுவிரலின் ரேகையின்பலன்.

இடதுகை நடுவிரலில் யெங்கையேனும் மருவு ஒன்றிருக்குமாகின்-அவன் தனக்கு தீர்க்காயுசாகும், வலதுகையின் நடுவிர

லின் அடியில் கீற்றுஒன்றுதோன்றி அதில்மருவானது யிருக்கினும் விரலின் நடுகணுவு கீற்று ஒன்றின்கீழ் மருவிருக்கினும்-அவன் வித்தையில் வல்லவனுக விருப்பான், விரலின்மேல் கணுவின்கீற்று வொன்றில் மருவிருக்கினும் - அவன்காமியாகவிருப்பான், விரலின் மேல்வரைக்கு மேலிருக்குஞ்சுழியில் மருவிருக்கினும் இடச்சுழியிருக்கினும்-குறைவில்லாத போஜனமுண்டாகிப் பிழைத்திருப்பான்.

வலதுகையின் நடுவிரலின் மடிப்பில்மருவானது யிருக்குமாகின் - அவன்தேடும்பொருள்களை வீண்சிலவிடுவான், நடுவிரலிலுள்ள ரேகைகளில் விசேஷமருவுகளிருந்தாலும் நடுவிரல் அடியினும் மேற்சொன்னப்படியிருக்கினும்-அவன் செல்வமுடையவனுகி போகபாக்கியங்களை அனுபவிப்பான், நடுவிரலின் மேல்வரையில் மருவிருக்கில்-சுகபோகமுடையவனுகும்.

## பௌத்திரவிரலின் ரேகையின்பலன்.

பௌத்திரவிரலினிடமாக ஒரு மருவிருக்கினும்-அவ்விரலின் மேல்கீற்றில் மருவிருக்கினும் அவன்தான் பிறந்தவூரை விட்டு பரதேசசஞ்சாரியாக விருப்பான், மேற்கூறிய அவ்விடங்களில் விசேஷமாக மருவுகளிருக்கில்-செல்வனுமாய் பூஷணுதிகளணிகுவான் யினங்களை ரட்சிப்பான், மேல்வரையாகியக் கீற்றின் மேல் வலச்சுழியிருந்தால்-நன்மையுடையவனுகி யாவரையுமுபசரிப்பான், இடச்சுழியாக விருந்து அதில்மருவிருந்தால் -நன்மையாகிய வார்த்தையுடையவனுகவிருப்பான், இடதுகை பவுத்திரவிரலின் மடிப்பில் மருவிருக்கில் துக்காந்தகாரனுக விருப்பான்.

## சிருவிரலின் ரேகையின் பலன்.

பௌத்திர விரலுக்கடுத்த சிருவிரலின் அடியின் கீழ்பக்கமாக ஒருகீற்றிருந்தால் - ஒருவிவாகமாகும், இரண்டு கீற்றிருந்தால் - இரண்டு விவாகமாகும், மூன்றுகீற்றிருந்தால் - மூன்று விவாகமாகும், பலகீற்றுகளிருந்தாலும் - எப்படியும் விவாகமாகும், அன்றியும் நீண்டிருக்குங் கீற்றுகளெல்லாம் - விவாகமென்றும், சின்னதாகவிருக்கும் கீத்றுகள்-கூத்தியார்களென்றும் கண்டு சொல்கவேண்டும், இடதுகை சிருவிரலில்மருவிருந்தால் மலடனுகுவன்.

சிருவிரலானது அதற்கடுத்த பௌத்திரவிரலின் கணுக்களை க்கடந்து அதிகமாக நீண்டிருந்தால் - அவன் செல்வமுடையவனுகவிருப்பான், சிருவிரலானது பௌத்திரவிரல் நுனிமட்டும் நீண்டு வளர்ந்திருந்தால்-அவன்தனக்கு வயது நூறுகும், பௌத்திரவிரலின்மேல் கீற்றிற்கு கொஞ்சம் மேலாகவளர்ந்திருந்தால்-அவனுக்குவயது தொண்ணூறுகும், பௌத்திரவிரலின்மேல் கீற்றிற்குச் சரியாகவளர்ந்திருந்தால்-எண்பதுவயதாகும், பௌத்திரவிரலின்மேல் கீற்றிற்கு கொஞ்சம் கீழாகத் தாழ்ந்திருந்தால்-அவன் தனக்கு எழுபத்தைந்து வயதாகும், பௌத்திரவிரல் நடுகீற்றுக்கும் மேல்கீற்றுக்கும் சிருவிரல் மத்தியபாகமாக வளர்ந்து நிற்கில்-அவனுக்கு அறுபதுவயதாகும், அதற்கு கொஞ்சம் கீழாகவிருந்தால்-அவன் தனக்கு ஐம்பது வயதாகும், அதற்குகொஞ்சம் கீழ்படிந்திருக்கில் - முப்பதுவயதாகும், இவ்விதமாக முறையே குறைவைகண்டு வயதுசொல்கவேண்டுமெனக் கொள்க.

## யவமாலை ரேகையின் பலன்.

வலது மணிக்கட்டினிடமாக தோன்றி மூன்றுசுற்று சுற்றிக் கொண்டிருப்பதற்கு அவமலை ரேகையென்றுபெயர் அவ்வித ரேகையிருந்தால்-அவன்தனவந்தனுகியும் அரசனுகியும் யாவரும்புகழ வாழ்குவான், அந்த ரேகை இரண்டுசுற்று உடையதாகவிருந்தால் - நல்லபுத்திமானுக விருப்பான், ஒருசுற்றுகவிருந்தால்-தனதானியம் முதலியதும் படைத்துவாழ்குவான், மேற்கூறிய மூன்றுரேகைகளும் மணிக்கட்டின் பின்புறத்தை சுற்றிக்கொண்டு யிருக்குமாகின்-அரசனுகியும் மிகுத்தாகிய தனமும் படைத்து புத்திமானுயிருப்பான்.

## ஸ்திரீகளின் உள்ளங்கையின் ரேகைபலாபலன்.

ஸ்திரீகளின் இடதுகையின் உள்ளங்கையில்கூஜாவைப்போலும் சிங்காசனத்தைப்போலும் குண்டலத்தைப்போலும்தோரணம்போலும் மாலையைப்போலும் தேர்போலும் குதிரையைப்போலும் யானையைப்போலும் கர்ப்பகவிருக்ஷம்போலும் நன்றுகக்காணத் தோன்றுமாகில்-அம்மாது அஷ்ட அயிஸ்வரியமுமுள்ள இராஜபத்தினியாகி யாவரும்புகழமேலாகவாழ்ந்திருப்

பாள், சென்னுப் கழுகு கோட்டான் சர்ப்பம் இவ்விதரேகைகள் காணப்படில்-அம்மாது சஞ்சலசித்தமுடைய தரித்திரியாவாள், சங்குசக்கரம்போல் ரேகை நன்ருகக்காணப்படில் - அம்மாது அதிக தனவந்தியாகி சுகமுடன்வாழ்குவள், மச்சத்தைப்போல் ரேகை காணப்படில் - அவுசாரிதன முடையவளாகியும் யாவருமிகழ விருப்பாள்.

ஸ்திரீகளின் இடது வுள்ளங்கையில் வெண்சா மரையைப்போன்ற ரேகையானது ஒன்று நன்ருகக் காணப்படில் - அம்மாது வெகுபேருடன் கூடிவாழ்குவாள், தாமரைப் பூப்போல் ரேகையொன்று நன்ருகக் காணப்படில் - அம்மாதினிடத்தில் இலட்சுமி வாசமாக யிருப்பாள், ஸ்திரீகளின் உருவத்தைப் போல் ரேகையானதுதோன்றில் - அம்மாதுபோகத்தில் அதிக யிச்சையுடையவளாகவிருப்பாள், ரிஷபத்தைப்போன்றரேகை ஒன்றுக்காணப்படில் - அம்மாது வாகனுதிகளுடையவளாயிருப்பாள்.

ஸ்திரீகளின் இடதுஉள்ளங்கையின் நடுவேதோன்றியகோடு போன்ற ரேகையானது மணிக்கட்டிலிருந்து நடுவிரலின் நுனி மட்டும் போயிருக்குமாகின் - அம்மாதுக்கு அதிகசெல்வமோடு அயிஸ்வரியமுண்டாகும் பதிவிரதையாக விருப்பாள், நடுவிரலின் அடிவரைக்கும் போய்நிற்கின் - திரவியவந்தியாக விருப்பாள், அல்லது சிருவிரலின் அடிவரையினும் போய்நிற்கில்- அம்மாது அதிகசெல்வ வதியாய் வாழ்ந்திருப்பாள், சிருவிரலின் நடுமெட்டும் போயிருக்கின்- ஆடையாபரண முடையவளாகியும் மனக்கிலேசமாக விருப்பாள், பௌத்திரவிரலின் அடிமட்டுமிருக்கில் - காமியாகியும் சொல் சிரேஷ்டமுடையவளாக விருப்பாள், பெருவிரல் மட்டும் நின்று யிருக்குமாகின் - அம்மாது செல்வ முடையவளாகிப் பிள்ளைகளைப் பெருகுவாள், மேற்கூறிய ரேகை உள்ளங்கையில் இல்லாமல் இருந்தால்-முடமாகுவள், ரேகைகள் பருத்தும் புகைநிறமாகவும் யிருக்குமாகின் - பாபமுடையவள் ஆகுவள், சுலபமா யிருக்குமாகின்-சுகமடைகுவள்.

## பெருவிரலின் ரேகையின் பலன்.

ஸ்திரீகளின் இடதுகைப் பெருவிரலானது சிவந்தும் திரண்டும் நீண்டும் இருக்குமாகின் - அம்மாது அழகும் செல்வமும் உடையவளாகவிருப்பாள், பருத்தும் குரிகியு மிருக்குமாகின்- அம்மாது உழப்பாளியாக யிருப்பாள்.

ஸ்திரீகளின் இடதுகையின் பெருவிரலின் அடியிலுள்ளகீற்றுனது ஒன்ருகில் - செல்வமுடையவளாக விருப்பாள், ஒன்றுக்குமேல் அதிகமாகவிருக்கில் - துன்பங்களை அனுபவிப்பாள், பெருவிரலின் நடுவிலிருக்குங் கீற்றுனது ஒன்ருனல்-தனதான்னியம் உடமை முதலானதும் பெற்று சுகமாகவாழ்குவள், பெருவிரலின்மேல் கீற்றுனது ஒன்ருகில் - அம்மாது அலச்சல்பட்டுத் திரிகுவள், ஒன்றுக்குமேல் அதிகமாகவிருக்கில் - அம்மாது அழகும் யீகையும் பூஷணுதிகளும் உடையவளாக விருப்பாள், பெருவிரலின் மேல்கீற்றுக்கு மேல்வலச்சுழி யிருந்தால்-செல்வமுடையவளாக விருப்பாள், இடச்சுழியாகவிருந்தால்-விபசாரியாகுவள், ஆயுசு அற்பமுடையவளாகுவள், அன்றியும் இடதுகைபெருவிரலில் மருவிருந்தால் - போகபாக்கியவதி யாவாள், வலதுபெருவிரலில் மருவிருந்தால்-அம்மாது செய்யத்தகாதப் பாபங்களைச் செய்குவாள்.

## சுண்டுவிரலின் ரேகையின்பலன்.

ஸ்திரீகளின் இடதுகையின் சுண்டுவிரலானதுசிவந்தும் நீண்டுமிருக்கில்-அழகுடையவளாகவிருப்பாள், சுண்டுவிரலின் அடியிலுள்ளக் கீற்றுனது ஒன்ருகத்தோன்றில் - கற்புடையவளாக விருப்பாள், ஒன்றுக்குமேல் அதிகமாகத் தோன்றில் - விபசாரியாவாள், நடுகீற்றுனது ஒன்ருகத்தோன்றில் - அம்மாது மனக்கிலேசி விபசாரத்தில் மிகுத்தவளாகும், ஒன்றுக்குமேல் அதிகமாகவிருக்கில் - யாவருக்கும் உபசாரமான வார்த்தை யுடையவளாகவிருப்பாள், சுண்டுவிரலின்மேல் கீற்றுனது ஒன்ருகில்- அர்ப்பசுகமும் கர்ப்புடையவளாகவிருப்பாள், ஒன்றுக்குமேல் அதிகமாகவிருக்கில்-அம்மாது செய்யும் விபசாரம் உடனேவெ

ளியாகி விடும், சுண்டு விரலின் மேல்கீற்றுக்கு மேல்வலச்சுழி யிருக்குமாகில் - செல்வமும் தெய்வபக்தியும் உடையவள் ஆவாள். மேல் கீற்று மடிந்திருக்கில் - அதிக சிலவுடையவளாக விருப்பாள், சுண்டுவிரலில் மருவிருக்கில் - மந்தபுத்தியுடையவளாகுவாள்.

## நடுவிரலின் ரேகையின் பலன்.

ஸ்திரீகளின் இடதுகையின் நடுவிரலானது சிவந்தும் நீண்டும் இருக்கில் - அம்மாது வெகுலட்சணமுடையவளாகி பூஷணுதிகளேயும் அணிகுவாள், நடுவிரலின் அடியிலுள்ளக் கீற்றுனது ஒன்ருகில் - அம்மாது சலிப்புடையவளாகும், ஒன்றுக்கு மேல் அதிகமாக விருந்தால் - அர்ப்பாயுசும் அர்ப்பசுகமும் உண்டாகும், நடுவிரலின் நடுகீற்று ஒன்ருகில் - தீர்க்காயுசும் சுகமும் உண்டாகும், ஒன்றுக்குமேல் அதிகமாக விருந்தால்-பூஷணுதிகள் அணிகுவாள், நடுவிரலில் மேல்கீற்ருனது ஒன்ருனல்-போகவதியாவாள், ஒன்றுக்குமேல் அதிகமாக விருக்கில்-செல்வம் அதிகமாகப்பெற்று வாழ்குவள், நடுவிரலில் மேல்கீற்றுக்குமேல் வலச்சுழியிருந்தால் - யாவருக்கும் நல்லவளாக விருப்பாள், இடச்சுழி யிருந்தால் - போகியாவாள், மேல்கீற்றுமடிப்பா யிருந்தால் - அமங்கிலியாவள், மருவிருந்தால் - தீர்க்காயுசுள்ளவள்.

## பௌத்திரவிரலின் ரேகையின் பலன்.

ஸ்திரீகளின் இடதுகையின் பௌத்திரவிரலின் அடியிலுள்ள கீற்று ஒன்ருகில்-நல்லவஸ்திரா பரணங்களேத் தரிப்பாள், ஒன்றுக்குமேல் அதிகமாக விருந்தால் - சிலவு அதிகமாகச்செய்குவள், பௌத்திரவிரலின் நடுவிற் ரேன்றியக் கீற்ருனது ஒன்ருகில் - தரித்திரியாவள், ஒன்றுக்குமேல் அதிகமாக விருக்கில் - சிருதுநாள் செல்வமும் சிருதுநாள் வருமையும் படுகுவாள், பௌத்திரவிரலின் மேல்கீற்ருனது ஒன்ருகில் - தேசசஞ்சாரியாவள், ஒன்றுக்குமேல் அதிகமாகவிருக்கில் - அதிக

காமியாக விருப்பாள், பௌத்திரவிரலின் மேல் கீற்றுக்குமேல் வலச்சுழி யிருக்கில்-சகலருக்கும் உபகார முடையவ ளாவாள், இடைச்சுழி யிருக்கில்-கோபியாயும் ஆங்காரியாயும் இருப்பாள், பௌத்திரவிரலில் மருவிருந்தால் - அதிகசெல்வமுடையவ ளாகுவள்.

## சிருவிரலின் ரேகையின் பலன்.

ஸ்திரீகளின் இடதுகையிலுள்ள சிருவிரலின் அடியிலுள்ளக் கீற்று ஒன்ருகில்-ஒருவிவாகம், இரண்டாகில்-இரண்டுவிவாகம், மூன்ருகில்-செல்வவிவாகம், அல்லது மூன்றுக்குமேல் அதிகமா யிருந்தாலும் - நன்மையாகும், சிருவிரலில் மருவிருந்தால்-மலடியாகுவாள்.

ஸ்திரீகளின் சுண்டுவிரல் அடியில் நின்று உண்டான ரேகை யானது சுண்டுவிரலுக்கும் நடுவிரலுக்கும் நடுவிரல் நின்ருல்-அம்மாது தீர்க்காயுசாகவிருப்பாள், கூறிய யிந்தரேகை முறை யேகுறைந்தால்-ஆயுசுமுறையே குரையுமெனகண்டுணர்க்கவும் அன்றியும் ஆறுவிரலிருக்கில்-சம்பத்துண்டாம்.

## அஸ்தரேகையின் பலன்

முற்றிற்று.

உ

தேவிசகாயம்.

# புருஷ ஸாமுத்திரிகம்.

## இராஜநாவதரிய.

வேர்வையற்றவைகளும், மெதுவாகிய உள்ளங்காலை யுடைய வைகளும், தாமரைமலரி னுட்புறம்போன்றவையும், சேர்ந்தவிர ல்களையுடையவையும், அழகுள்ளவாகிச் சிவந்தநகங்களையுடை யவையும், அழகிய குதிகால்களையும், மேல்தெரியாமல் அமிழ் ந்து மறைந்திருக்கிற கணுக்கால்களை உடையவையும், மேல்தெ ரிகிற நரம்புகளில்லாதவையும், ஆமைபோலுயர்ந்த வையுமான பாதங்கள் மஹாராஜனுக்கு ஆகுமெனவறிக.

## புணரத்தகாதவர்களை புணர்தல்.

முறம்போன்ற ஆகாரத்துடன் முரடாகிக் கோணியும், அழ கின்றி வெண்ணிற முடைய நகங்களை யுடையவையும், மிகவும் கோணியிருப்பவையும், வெளியில் காணப்படுகிற நரம்புகளால் நிறைந்தவையும், சதையின்றி நன்ருக உலர்ந்தவையும் நெருங் காதபடி விலகியிருக்கிற விரல்களை யுடையவைகளுமாகிய பாத ங்கள், தரித்திரிய துக்கத்தைத் தருகின்றவைகளாம் பெரிதா கிய பாதங்கள் வழிநடைக்காகவும், அழுக்குச் சிவப்பு நிறமு டைய பாதங்கள் வம்ச நாசத்தைத் தருகின்றவையும் சுட்டம ண்ணிறமுடைய பாதங்கள் பிர்மஹத்தியில் மூட்டுகின்றவை யும் மஞ்சள் நிறமுடைய பாதங்கள் புணரத்தகாத மாதரிடத் தில் ஆசையை விளைவிக்கின்றவையு மாகின்றன.

## வேறுபலன்.

நெருக்கமின்றி மெல்லிதால் முளைத்தெழுந்த மயிர்களையும் உடையவையும் உருண்டிருப்பவைகளுமாகிய முழங்தாளின்கீழ் ப்புறத்தை யுடையார்களும், யானைத் துதிக்கைப்போன்ற சிற ந்த துடைகளோடு கூடினவர்களும், பருத்து ஒன்ருேடொ ன்று சரியான முழங்தாள்களை யுடையார்களும், அரசர்களா

கின்றனர். நாய், குள்ளநரி, ஆகிய இவைகளின் ஜங்கைப் போன்ற முழங்கால்கீழ்ப்புறத்தின் ஜங்கையுடையார்கள் தனமின்றி தரித்திரராகின்றன ரெனவறிக.

## உரோமசங்கை யறிய.

சரீரத்திலுள்ள ரோமகூபங்களென்னு மயிர்க்கால்களில் அரசர்களுக்கு ஒவ்வொருமயிரும், பண்டிதர்களுக்கு இரண்டு இரண்டு மயிர்களாகவும், உண்டாகின்றன. மூன்றுமுதலாக ஒரு ரோமகூபத்தில் நான்கு ஐந்து எவ்விதமாக உண்டாகில் அம்மனிதர் வறுமை யுடையார்களாகிப் பெருந் துன்பத்தையே அடைவார்கள். இதுபோலவே தலையிலுண்டாகும் மயிர்விஷயத்திலும், நிந்திக்கப்பட்டமயிர்களும், சிறந்தமயிர்களும் காணத் தக்கவையா மெனவறிக.

## பரதேசமரணமறிய.

மாம்ஸமில்லாமல் உலர்ந்திருக்கிற முழந்தாள்களை யுடையான் தேசாந்தர யாத்திரையில் மரிக்கிறான். சிறியமுழந்தாள்களால் பாக்கியமும் அல்லது பலருக்கு நல்லவனு யிருக்கையும், அகன்றிருப்பவைகளால் தாரித்திரியமும், பள்ளமாயிருக்கில்-ஸ்ரீகளுக்கு வசனாகி, அவர்கள் சொற்படி நடக்குந்தன்மையும், மாம்ஸங்க ளுள்ளவைகளால் ராஜ்ஜியமும் பருத்துயர்ந்தவைகளால் ஆயுளுமுண்டாகுமென வறிக.

## ஆண்குறியின்பலாபலன்.

சிறிதான ஆண்குறியை யுடையபுருஷன் தனவானும்பருத்த ஆண்குறியையுடையவன் புத்திரனில்லாதவனுமாகிறான் இடது பக்கத்தில் வணங்கியிருக்கில் (சாய்ந்திருக்கில்) தனமில்லாதவனும், கோணியிருக்கில், புத்திரன், செல்வம், இவைகளையொழிந்தவனும், கோணியிராத பட்சத்தில் புத்திரனை யுடையவனும், அதோமுகமாக வணங்கியிருக்கில் வறுமையுடையவனும், நரம்புகளால் நிரம்பியிருக்கில் அல்பபுத்திரனும் லிங்கத்தின் நுனியின் முடியானது ஸ்தூலமாயிருக்கில் மிகுந்த சுகத்தை யுடையவனுமாகிறான். லிங்கம் மெதுவாயிருக்கில், நீரிழிவு,ரோகமுதலிய வியாதிகளால் புருஷனுக்கு நாசம்சம்பவிக்கும்.

## இதுவுமது.

கத்தியுரைபோன்ற மேல்தோலி லடங்கிமறைந்த லிங்கத்தை யுடைய புருஷர்கள் அரசர்களாகவும், நீண்டும் வணங்கியு மிருப்பவைகளால் தரித்திரர்களாகவும், ருஜுவாகி உருண்டைவடிவாக யிருப்பதும் அல்லது சிறியதாக நரம்புகளையுடையதுமான லிங்கத்தை யுடையார்கள் மஹாதனிகர்களாகவும் ஆகுமெனவறிக.

## பீஜக்குறியின் பலன்.

ஒரு பீஜத்தையுடைய புருஷன் ஜலத்தில் மரிப்பவனாகவும் ஒன்றுக்கொன்று சரியாகாத விஷம்பீஜங்களால் ஸ்ரீசபலனாகவும், ஏற்றக்குறைவுகளின்றி ஸமபீஜனானவன் அரசனாகவும், மேலிழுத்துக் கொண்டதுபோன்ற பீஜத்தையுடையவன் அல்பாயுசாகவும், தொங்குகிற விருஷணத்தையுடையவன் சதாயுஸ்ஸையுடையவனு மாகுவரெனவறிக.

## மூத்திரக்குறியின் பலன்.

சிவந்தமணிகளோடு கூடினவர் தனிகர்களாகவும் வெளுத்த மணிகளாலும், கறுத்தமணிகளாலும், தரித்திரர்களாகவும், சப்தத்தோடுகூடி விழுகிற மூத்திரதாரையுடையார்கள் சுகிகளாகவும், சப்தமின்றி மூத்திரத்தை விடுகிறவர்கள் தரித்திரர்களும் ஆகின்றனரெனவறிக.

## இதுவுமது.

ஜல விஸர்ஜனம் செய்கையில் ஒரேதாரையாகிவிழாமல் இரண்டு மூன்று அல்லது நான்கு தாரைகளாகப் பிரிந்தும் பிரதக்ஷிணமாகச் சுழன்று வருகிறதுமான மூத்திரத்தோடு கூடியவர்கள் அரசர்களாகவும், சிதறியும், இடையில்நின்று, நின்று, விழுகிற மூத்திரத்தை யுடையார்கள் தரித்திரருமாகவும் அறியத்தக்கவர்கள்.

## இதுவுமது.

ஜலவிசர்ஜனம் செய்கையில் சுழன்றுவருகிற ஒரு மூத்திர தாரையானது ரூபத்தில் சிறந்த மைந்தனைத் தருவதாகும், அழகியதும், நிகநிகப் புள்ளது உயர்ந்ததும், ஸமமாகியும்,

இருக்கிற மணியையுடைய புருஷர்கள்செல்வம், உத்தமஸ்திரீகள், இரத்தினங்களாகிய இவைகளையனுபவித்து வாழ்வார்கள் எனவறிக.

## இதுவுமது.

மாம்ஸமின்றியே உலர்ந்திருக்கிற மூத்திரத் துவாரத்தையுடைய புருஷர்கள் செல்வம் இல்லாதவர்களும் குரூபிகளுமாக அறியத்தக்கவர்கள். புஷ்பம்போல் மிகுந்த பரிமளத்தைப்பெற்ற சுக்கிலமுடைய புருஷர்கள் அரசர்களாக அறியத்தக்கவர்கள் அறிக.

## சுக்கிலபரிமள பலன்.

சுக்கிலத்தில் தேன் மணமிருக்கில் புருஷன் மிகுந்த செல்வம் உடையவன். சுக்கிலத்தில் மத்ஸ்யமண முண்டாகில் அவன் வெகு புத்திரரைப் பெறுவான். சுக்கிலம் அல்பமா யிருக்கில் அல்லது தடிப்பில்லாததா யிருக்கில் பெண்களே பெருவான், மாம்ஸமணம் வீசுகிற சுக்கில முடையவன் மஹா போகியாவதறிக.

## சுக்கிலமச்சபலன்.

சுக்கிலத்தில் மச்சியத்தின் மணம் வீசினுல் அந்தப் புருஷன் விதிப்படியாகம் செய்கிறவனுகிருன். உப்பு மணமுண்டாகில் தரித்திரனுகிருன். சீக்கிரமாக மைதுனத்தைச் செய்கிறவன் (விரைவில் சுக்கிலத்தை யிடுகிறவன்) தீர்க்காயுசை யுடையவனுகவும் அப்படிக்கில்லாமல் நெடுங்காலம் புணர்ந்து சுக்கிலத்தை விடுகிறவன் அல்பாயுசுள்ளவனெனவறிக.

## பிருஷ்டபலன்.

மிகவும் பருத்து ஸ்தூலமாகிய ஸ்பிக்கென்னும் பிருஷ்டத்தை அல்லதுமுதுகெலும்பின் முனையை யுடையவன் தரித்திரனுகவும், சதைபருத்த பிருஷ்டத்தை யுடையபுருஷன் சுகத்தோடு கூடினவனுகவும், பாதி அளவுடைய பிருஷ்டத்தையுடையவன் வியாதியினுல் பீடிக்கப்படுகிறவனுகவும், தவளையின் பிருஷ்டம்போன்ற பிருஷ்டத்தை யுடையவன் அரசனுகவுமெனவறிக.

## இ து வு ம து.

சிம்மத்தின் இடுப்பைப்போன்ற சிறுத்த இடுப்பை யுடைய புருஷன் அரசனும் குரங்கு அல்லது ஒட்டகம் இவைகளுடைய இடுப்பைப்போன்ற இடுப்பையுடைய புருஷன் தரித்திரனுமாகிறான். மேடுபள்ளமின்றி சமமான வயிற்றை யுடையார்கள் சுகத்தோடுகூடினவர்களும், பெரியகுடம்போலும், சிறிய யானைப்போலும், வயிற்றை யுடையார்கள் தரித்திரரு மாகுவரெனவறிக.

## பா ரி ச ப ல ன்.

குறைவில்லாமல்பரிபூரணமான பாரிசங்களையுடைய புருஷர் அதிசயித்த செல்வமுடையார்களும், பள்ளமுடையவையும், கோணியுமிருக்கின்ற பாரிசங்களைப் பெற்றவர்கள் சுகஈனர்கள் ஆகவும் ஆகின்றனர். மேடுபள்ளமின்றி சமமாகிய வயிற்றையுடையார்கள் போகத்தினால் நிறைந்தவர்களாகவும் ஆழ்ந்த வயிற்றை யுடையவர்கள் போக ஈனருமாகுமெனவறிக.

## உயர்ந்த வயற்றின் பலன்.

உயர்ந்த வயிற்றை யுடையார்கள் அரசர்களாகவும், விஷமமாகி மேடுபள்ளமுடைய வயிற்றையுடையமனிதர் வக்கிரமான சுபாவமுள்ளவரும், பாம்பின்வயிறுபோன்ற வயிற்றையுடையார்கள் தரித்திரரும் அதிகமாகபுசிப்பவருமெனவறிக.

## உருண்ட வடிவின் பலன்.

உருண்டவடிவாகியும், உயர்ந்ததும், அகன்றுமிருக்கிற தொப்புள் பிரதேசத்தோடுகூடியபுருஷர்கள் சுகிகளாகின்றனர் மிகச்சிறியதும் காணத்தகாத ஆழத்தையுடையதுமான நாபியானது மிகவும் கிலேசத்தைத் தருவதெனவறிக.

## வயற்றின்மடிப்பின் பலன்.

வயிற்று மேல்சதை மடிப்பின் நடுவே யிருந்ததும், அந்தமடிப்பினால் விஷமமாகியும் இருக்கிறநாபியானது புருஷனை சூலைரோகத்தினால் வருந்தச் செய்தும், வறுமையும் தரவல்லது,

நாபியானது அப்பிரதக்ஷிணமான சுழியை யுடையதாகில்-மோசத்தன்மையையும், பிரதக்ஷிணச்சுழியைப்பெற்றிருக்கில்-புத்தியையும் தருவதாகுவ ரெனவறிக.

## நாபிபலன்.

பக்கங்களில் அகன்றிருக்கிற நாபியானது புருஷனை தீர்க்காயுசை யுடையவனுகவும், மேல்புறத்தில்அகன்றிருக்கில்-அரசனுகவும், கீழ்ப்புறத்தில் அகன்றிருக்கில் - பசுக்களால் நிறைந்தவனுகவும், தாமரைக்காய் போன்றதாகில் - மஹாராஜனுமாவரெனவறிக.

## வயர்மடிப்பின் பலன்.

புருஷனுக்கு வயிற்றில் சதை மடிப்பு ஒன்றிருக்கும் ஆகில்-அவன் ஆயுதத்தினுல் மரிக்கிறவனுகிருன், இரண்டிருக்குமாகில்-ஸ்திரீபோகத்தையுடையவனுகிருன், மூன்றுகில்-குருவாகிருன், நான்குமடிப்புக ளிருக்கில்-அநேகமாக பிள்ளைகளைப் பெறுவானென்றும், வலி என்னும் மடிப்புள்ளசதை இல்லாத மனிதன்-அரசனுகின்றுனென்றும் அறிக.

## புணரத்தகாதமாதரை சேருதலறிய.

விஷமங்களாகி கோணியிருக்கின்ற சதை மடிப்பை யுடையார்கள் புணரத்தகாதமாதரை சேரும் பாபிகளாகின்றனர். நேரான சதைமடிப்பை யுடையார்கள் சுகிகளும், அயல்மாதரை துவேஷிப்பவர்களு மாவரெனவறிக. மேலிழுத்துக் கொள்ளப் பட்டவைபோ லுயர்ந்த முகங்களாகாத சூசுகமென்னும் முலைநுனிகளோடு கூடினவர்கள் பாக்கியவான்களும், ஒன்றோடொன்று சரியாகாமல் கோணியும் நீண்டுமிருக்கிற முலைநுனிகளைப் பெற்றவர்கள் தரித்திரர்களாகவும், பருத்துயர்ந்து அமிழ்ந்திருக்கிற முலைநுனிகளை யுடையார்கள் அரசர்களாகி சுகத்தைப் பெறுகிறவர்களாகவும் ஆகின்றன ரெனவறிக.

## மார்பின்பலன்.

மஹாராஜர்களுடைய மார்பானது உயர்ந்தகன்று பருத்து அசைவற்றிருக்கும். அதமர்களுடைய மார்பானது குரூரங்களான மயிர்களால் நிறைந்ததும் நரம்புகளால் வியாபித்தது

மாகக் காணப்படுமெனவறிக. மேடுபள்ள மில்லாத சமமாகிய மார்பை யுடையவர்களும் அதிசயித்த மார்பைப் பெற்றவர்களும் சூரர்களாகவும், குறுகியமார்போடு கூடியவர்கள் தரித்திரர்களுமாகின்றனர். எவர்களுடைய மார்பானது விஷமமாகி மேடுபள்ளங்களைப் பெற்றிருக்கிறதோ அவர்கள் ஆயுதத்தினால் மரணமடைகிறவர்களு மாவரெனவறிக.

## தோள்கழுத்துபலன்.

ஜத்துருவென்னும் தோள்கழுத்துகளின் சந்தியானது விஷமமாகி ஒன்றோடொன்று சரியாகாதிருக்கில் - புருஷன் விஷமமான சுபாவமுடையவனாகவும், யெலும்புகளின் சந்தியில் விசாலமா யிருக்கில் - செல்வமில்லாதவனும், உயர்ந்திருக்கில்-சுகியாகவும், ஆழ்ந்திருக்கில் - தரித்திரனாகவும், பருத்திருக்கில்-செல்வத்தை யுடையவனாகவுமெனவறிக. தட்டையான கழுத்தையுடையவனும், யெவனுடைய கழுத்தானது சதையின்றி உலர்ந்தும் நரம்புகளோடுகூடியிருக்கிறதோ அவனும்தரித்திரன் எருமைக்கிடாவின் கழுத்தைப்போன்ற கழுத்தையுடையவன் ஆயுதத்தினால் மரிக்கிறவனாவதறிக. சங்குபோன்ற கழுத்தையுடையவன் அரசனாகவும், தொங்குகிற கழுத்தை யுடையவன் நன்றாக புசிக்கிறவனாகவும் ஆகிறான். தனிகர்கள் உடையமுதுகானது வணங்காததும், மயிர்கள் அற்றதுமாக ஆகிறது. இதனினும் வேறுவிதமான முதுகானது அசுபத்தைத் தருவதாகுமெனவறிக.

## கக்ஷங்களின் பலன்.

மஹாதனிகர்களுடைய கக்ஷங்கள் என்னும் தோளின் அடிப்புறங்கள் வேர்வைபற்று பருத்துலர்ந்து நன்மணம் பெற்று மேடு பள்ளங்களின்றியே மயிர்களா லடர்ந்திருப் பவைகளாம் இவ்விதமாக இராமல் வேறுலக்ஷணங்களுடையகக்ஷங்கள் தரித்திரருக்கு உண்டாகுமெனவறிக. மாம்ஸமின்றியேஉலர்ந்தும், மயிர்களால் அடர்ந்தவையும்வணங்கி சிறுத்திருப்பவையுமான தோள்கள் தரித்திரருக்கு ஆகின்றன. விசாலமாகி கழுத்தின் சந்தியினின்று வேறுபட்டவையோல் இராதவைகளாகிநன்றாக சேர்ந்திருப்பவையுமான தோள்கள்சௌக்கியம், வீரியம்இவை

களையுடையவர் அரசர்களாவரெனவறிக. மஹாமத கஜத்தின் துதிக்கை போன்றவையும், ஒன்றோடொன்று சமமாகிப் பருத்துருண்டு முழந்தாள்வரையில்தொங்குகிறவையுமான புஜங்கள் அரசர்களுக்கும், குறுகி மயிர்களால் நிறைந்த புஜங்கள் அதமர்களுக்கும், ஆகின்றன.

## கையின் லட்சணம்.

நீண்டிருப்பவையான கைவிரல்கள் தீர்க்காயுசை யுடையார்களுக்கும், கோணிவணங்கி யிராமல் நிமிர்ந்தவிரல்கள் பாக்கியசாலிகளுக்கும், குறுகியவிரல்கள் அயலாருக்கு அடிமைத்தொழில் செய்வார்களுக்கு முண்டாகின்றன. மிகவும் பருத்திருக்கிற விரல்களோடு கூடியவர்கள் செல்வமில்லாதவர்க ளாகவும், வெளிப்புறத்தில் வணங்கி யிருக்கிற விரல்களைப் பெற்றவர்கள் ஆயுதங்களால் மரிப்பவர்களாகவும், குரங்கின்கையோடு சரியான கையையுடையவர்கள் மிகுந்தசெல்வத்தைப் பெற்றவர்களாகவும், புலியின் கைபோன்ற கைகளைப்பெற்றிருக்கில் பாபிஷ்டருமாகின்றனர். கையில் எலும்பு சந்திகள் தெரியாமல் மறைந்து கெட்டியாயிருப்பவையும், நன்றாகச்சேர்ந்திருக்கிற சந்தியை யுடையவையுமான மணிபந்தமென்னும் மணிக்கட்டுகளோடுகூடியபுருஷர்கள் அரசராகின்றனர். அப்படியின்றி குறைந்த அளவுடைய மணிபந்தங்களைவுடையார் கைசேதத்தைப்பெறுவார்கள். தளர்ந்து ஓசைபடுகிற மணிக்கட்டுகளைப் பெற்றவர்கள் தரித்திராகின்றனர். ஆழ்ந்ததாகிய உள்ளங்கையைப்பெற்ற புருஷர்கள் பிதிர்த்தனமில்லாதவர்களாகவும், பள்ளந் தெரியாமல் சமனாகி மறைந்திருக்கிற உள்ளங்கையை யுடையவர்கள் தனிகர்களும், நன்றாக மேடாகவிருக்கிற உள்ளங்கையையுடையவர்கள் தானம்செய்கிற வருமாகின்றனர். மேடு பள்ளங்களோடு கூடிய உள்ளங்கையை யுடையார்கள் மிகக்கொடியரும், தரித்திரருமாகின்றனர். செம்பஞ்சுக் குழம்புபோன்ற நிறமுடைய உள்ளங்கைகளால் அரசர்களாகவும், பொன்னிறமுடையவை யாகில் புணரத்தகாதமாதரைப் புணருகிறவரும்,மெல்லியதாகி மழமழப்பில்லாத உள்ளங்கைகளைப் பெற்றவர் தரித்திருமாகின்றனர்.

## நகத்தின் லட்சணம்.

உமியோடு சரியான நகங்களைப் பெற்றவர்கள் நபும்ஸகராகவும், குறிகிச் சப்பட்டையாகிப் பிளந்திருக்கிற நகங்களைப்பெற்றவர்கள் தனத்தினால் விடப்பட்டவர்களாகவும், சொற்றைமுதலிய தோஷங்களைப் பெற்றும், கெட்டநிறைத்தைப்பெற்றதுமான நகங்களால் அயலாருக்கு நூல்வேலை செய்கிறவர்க ளாகவும், சிவந்த நகங்களோடு கூடியவர்கள் அரசர்களாகவும் ஆகின்றனர்.

## யவதான்னிய ரேகைபலன்.

பெருவிரலில் யவதான்னியம் போன்ற ரேகையைப் பெற்றவர்கள் தனிகர்களும், பெருவிரலி னடியில் யவரேகையைப் பெற்றவர்கள் புத்திரரைப் பெறுவார்களும், நீண்டிருப்பவையான விரல்களுக்களை யுடையார்கள் பாக்கிய சாலிகளும், தீர்க்காயுளைப் பெற்றவரு மாகின்றனர். அழகுள்ளவையாகி ஆழ்ந்து பிரகாசமான ரேகைகள் தனிகருக்கும், அப்படியல்லாத வேறு விதமான ரேகைகள் தரித்திரருக்கும் ஆகின்றன. நெருங்காத விரல்களையுடையார்கள் தரித்திரராகவும், நெருங்கியவிரல்களைப்பெற்றவர்கள் தனத்தினால்சிறந்தவரும் ஜயத்தைப்பெற்றவருமாகின்றனர்.

## மகாராஜனுவதற்குண்டாகும் ரேகையறிய.

மஹாராஜன்கையில் மூன்றுரேகைகள் மணிக்கட்டி லிருந்து உண்டாகி உள்ளங்கையை யடைகின்றன. மத்ஸியம்போன்ற இரண்டுரேகைகளைக் கையினுடைய புருஷன் யக்கியங்களைச் செய்து வெகுதானங்களைச் செய்கிறவனாகிறான்.

தனிகர்களுக்கு வஜ்ஜிர ரேகையும், வித்வான்களுக்கு மத்ஸியத்தின் வாலையொத்த ரேகைகளும், அரசர்களுக்கு சங்கம்-குடை-சிவிகை-யானை-குதிரை-பத்மம் இவைகள்போன்ற ரேகைகளும் உண்டாகின்றன.

## தனவந்தனுக்கும் ரேகையறிய.

உள்ளங்கையில் கலசம், தாமரைத்தண்டு, துவஜம், அங்குசம் ஆகிய இவைகளைப் போன்ற ரேகைகளை யுடையவர்கள்

குபேரன் போன்றவர்கள் ஆகின்றனர். மாலைபோன்ற ரேகைக ளால் தனிகர்களாகவும் ஸ்வஸ்திக மென்னும் ரேகையைப் பெ ற்றவர்கள் மகத்தான ஐசுவரியத்தையும் பெறுவார்கள். சக்கி ரம்-கத்தி-கோடாலி-தோமரம்-சக்தி-வில் - ஈட்டி - ஆகிய இவை கள்போன்ற ரேகைகள் புருஷனைச் சேனாதிபதியாகச் செய்கி ன்றன. உரல்போன்ற ரேகைகள் விதிப்படி யாகங்களைச் செய் கிறவனைகச் செய்கின்றன. முதலைபோன்ற மகரமீன்-துவஜம்-பொக்கிஷகிருகம் இவைபோன்ற ரேகைகளோடு கூடினவர்க ளும், அல்லாமல் மன்மதனுடைய பொக்கிஷகிருகமான யோனி போன்ற ரேகைகளுள்ளவர்களும், மஹாதனத்தோடு கூடினவர் கள். யாகவேதிகைபோன்ற ரேகையோடுகூடின பிர்ம்மதீர்த்த மென்னும் பெருவிரலினடியையுடைய புருஷர் அக்கினி ஹோ த்திரம் செய்கிறவர்களாகின்றனர்.

## திரிகோணரேகை பலன்.

கையில் திரிகோணரேகையோடு கூடிய புருஷர்கள் நடை பாவிமுதலிய தடாகப்பிரதிஷ்டை, தேவாலயப் பிரதிஷ்டை. இவைமுதலிய தருமங்களைச் செய்கின்றனர். பெருவிரலினடி யில் ஸ்தூலமாகக் காண்கின்ற ரேகைகள் பிள்ளைகளாகவும்,மெ ல்லியரேகைகள் பெண்களாகவும் ஆகின்றன.

## நூறுயுசும் தரித்திரனு மாவதறிய.

கையில் பெருவிரலுக்கு பக்கவிரலை யடைந்திருக்கின்ற ரே கைகள் நூறுயுசையுடையார்களுக்கு ஆகின்றன. அந்த ஆள் காட்டி விரலைபடையாதவைகளாகி நடுவில் அறுந்திருக்கிற ரே கைகளோடு கூடியவனுக்கு மரத்திலிருந்து விழுந்து மரித்தல் சொல்லத்தக்கது. கையில் அதிகரேகைகளை யுடையார்களும், ரேகையே இல்லாதவர்களும் தரித்திராகின்றனர்.

## மோவாய்க்கட்டை லட்சணம்.

மிகவும் சிறுத்து நீண்டிருக்கிற உதட்டின் கீழ்ப்புறத்தோடு (மோவாய்க் கட்டையோடு) கூடியவர்கள் தரித்திரர்களும், சதை பருத்தவையான சுபுகங்களோடு கூடியவர்கள் மஹா

தனிகர்களாகவும் ஆகின்றனர். கோவப்பழத்தையொத்து கோணுதகீழுதடுகளோடு கூடியவர்கள் அரசர்களாகவும், சிறுத்த உதடுகளையுடையார்கள் தரித்திரருமாகின்றனர்.

## உதட்டின் லட்சணம்.

வெடித்துப்பிளந்து விகாரவர்ணத்தையுடையவையாகி குரூரமாயிருப்பவையுமான உதடுகளோடு கூடினபுருஷர்கள் தரித்திரர்களாகின்றனர். அழகுள்ளனவாகி நெருங்கி மிகக்கூர்மையுள்ளவையுமான கோரைப்பற்களோடு கூடியிருப்பவையாற் பற்கள் சுபகரங்களாகின்றன.

## போகியாவதும் தனிகனுவதும் தரித்திரனுவதுமறிய.

மஹாபோகியான புருஷனுடைய நாவானது சிவந்து நீண்டு மெல்லியதாகிச் சமமாயிருப்பதாம். தரித்திரருடைய நாவானதுவெளுத்தும், கறுத்தும், குரூரமுமாகயிருக்கும், இதுபோலவே தனிகருடைய தவடையும், தரித்திரருடைய தவடையும் அறியத்தக்கதாம்.

## அரசர்களோடு மற்றவர்களின் முகலட்சணமறிய.

அரசர்களுடைய முகமானது மிகசுந்தரமாகி மூடப்பட்ட வாய்ப்புறத்தையுடையதும், அழுக்கற்றதும், சமமாய் (கோணியிராததும்) ஆகின்றது. துக்கத்தையநுபவிப்பவர்களுக்குமுன் சொன்ன லக்ஷணங்களுக்கு வேறுனலக்ஷணங்கள் கூடியதாகவும், பாக்கியசனர்களுக்குப் பரந்தமுகமுமாகிறது, பிள்ளையில்லாதவர்களுக்கு ஸ்திரீமுகமும், கபடமுள்ளவர்களுக்குஉருண்டைமுகமும், தனமில்லாதவர்களுக்கு நீண்டமுகமும் அறியத்தக்கது. ஸ்திரீமுக முடையார்கள் பாபத்தொழிலைச் செய்வார்கள். முகமானது மோசம்செய்கிறவர்களுக்கு நாற்சதுரமாகவும், பிள்ளையில்லாதவர்களுக்குப் பள்ளமாகவும், தனமில்லாதவர்களுக்கும் லோபகுணமுடையவர்களுக்கும் மிகக் குறிகினதாகவும், போகத்தை யுடையவர்களுக்கு நிறைந்து அழகியதுமாகவும் ஆகின்றது.

## மீசையின் பலன்.

நுனிமயிர்களில் பிளவாவதும், மழமழப் புடையதுமாகி மெதுவானதும், வணங்கியதுமான மீசையானது சுபகரமாகின்றது சிவந்து கொடியவையாகியும், கொஞ்சமாயுள்ள மீசைகளோடு கூடியவர்கள் திருடராக அறியத்தக்கவர்கள். மாம்ஸமின்றியே உலர்ந்திருக்கிற காதுகளோடுகூடியவர்கள் பாபத்தினுல் மரணத்தை யடைகிறவர்களும். சப்பட்டைகாதுகளைப் பெற்றவர்கள் வெகுபோகங்களை அனுபவிக்கிறவர்களும், குறுங்காதராயிருப்பவர்கள் தரித்திரர்களாகவும், இரும்புமூளைபோன்ற காதைப் பெற்றவர்கள் அரசர்களாகவும் ஆகின்றனர்.

## காதின் லட்சணமறிய.

மயிர்கள் அடர்ந்த காதுகளைப் பெற்றவர்கள் தீர்க்காயுளையுடையார்களும், விசாலமான காதுகளைப் பெற்றவர்கள் செல்வமுடையார்களாகவும், நரம்புகளால் வியாபித்த காதுகளால் கொடியர்களாகவும், தொங்குகிறவையும் சதை பருத்தவையுமான காதுள்ளவர்கள் அதிசயித்த தனமுடையார்களாகவும் ஆகின்றனர்.

## கன்னம் மூக்கு இவைகளின் லட்சணமறிய.

பள்ளமின்றி உயர்ந்த கன்னங்களை யுடைய புருஷன் நித்ய போகத்தை யனுபவிப்பவனும், மாம்ஸங்களால் நிறைந்து பருத்த கபோலமென்னும் கன்னங்களை யுடைய புருஷன் மந்திரியாகவும், கிளிமூக்குபோன்ற மூக்கையுடையவன் சுகியாகவும் உலர்ந்த மூக்கைப் பெற்றவன் சிரஞ்சீவி யாகவும் ஆகிறுன் அறுந்த நாசிபோன்ற மூக்கையுடைய புருஷன் புணரத்த காதமாதரை புணர்பவனுகிறுன். நீண்ட மூக்கை யுடையவன் செல்வத்தைப் பெறுகிறுன். நன்குவணங்கிய மூக்கையுடையவன் திருடனுகவும், சப்பட்டை மூக்கையுடையவன் ஸ்திரீகளால் மரணத்தை அடைகிறவனுகவும் ஆகிறுன். நுனியில் கோணியிருக்கிற மூக்கை யுடைய புருஷர்கள் மஹா தனிகர்களாகவும், வலதுபக்கத்தில் கோணியிருக்கிற மூக்கைப்பெற்ற

வர்கள் அதிகமாக பட்சிப்பவரும், கொடியரும் ஆகின்றனர் சிறிய துவாரங்களை யுடையதும், நேராயுள்ளதும் அழகுள்ள துமான நாசிகையானது பாக்கியத்தோடு கூடியவர் களுக்கு ஆகிறது.

## தும்பலின் பலன்.

தனிகருக்கு ஒருதடவை யுண்டாகும் தும்மலானது உடனு க்குடனே இரண்டு மூன்று தும்மல்களோடு சேர்ந்து மிகுந்த சப்தத்துடன் உண்டாகிப் பின்னும் துடர் சப்தத்தையும் பெ ற்றிருக்கும். தீர்க்காயுஸை யுடையார்களுடைய தும்மலானது ஒன்றோடொன்று சேராமலே கெட்டியாகச் சப்தத்துட னுண் டாகும்.

## கண்களின் லட்சணமறிய.

அலர்ந்தழகிய தாமரைமலரி நிதழ்போன்ற கண்களையுடை யார்கள் தனிகராகவும், நுனியில் சிவந்த கண்களைப் பெற்றவர் கள் சம்பத்தைப் பெற்றவர்களாகவும், தேன்நிறம்போன்ற பிங் கள வர்ணத்தையுடைய கண்களோடு கூடியவர்கள் அதிக தன முடையார்களாகவும், பூனைக்கண்போன்ற கண்களைப் பெற்ற வர்கள் மகாபாபிஷ்டர்களும் ஆகின்றனர். பச்சை, வெண்மை, நிறங்கலந்த கண்களை யுடையார்களும் உருண்டை வடிவாகிய கண்களைப் பெற்றவர்களும், பாபிஷ்டர்களாகவும், கோணியிரு க்கிற கண்களைப் பெற்றவர்கள் திருடர்களாகவும், சாய்ந்திருக் கிற அல்லது (காப்புண்ட) கண்களை யுடையார்கள் மிகக் கொடியரும், யானைக் கண்கள் போன்ற கண்களை யுடையார் கள் அரசர்களாகவும் ஆகின்றனர். ஆழ்ந்தகண்களை யுடையா ர்கள் ஐஸ்வர்யத்தைப் பெறுகிறார்கள். கருநெய்தல் புஷ்பத் தின் காந்திபோன்ற காந்தியையுடைய கண்களைப் பெற்றவர் கள் வித்வான்களாகின்றனர். மிகவும் கறுத்தவிழிகளை யுடைய கண்களுக்கு பிடுங்குதலாகிய அழிவானது உண்டாகிறது. பரு த்தகண்களை யுடைய புருஷர்களுக்கு மந்திரித் தன்மையும், பொன்னிறமான கண்களைப் பெற்றவர்களுக்கு மிகுந்த பாக் கியமும் உண்டாகின்றன. ஏழைகளுடைய கண்ணானது ஈன

தசையைப் பெற்றதாகவும், அதிகமான தனபோகத்தை யுடையார்களுக்கு மழமழப்புண்டாகி அழகுமுள்ளவையான கண்களுமுண்டாகின்றன.

## புருஷ லக்ஷணமறிய.

மிகவும் உயர்ந்த புருவங்களைப் பெற்றவர்கள் அல்பாயுளையுடையார்களும், அகன்றும் உயர்ந்து மிருக்கிற புருவங்களைப் பெற்றவர்கள் மிகுந்த சுகிகளாகவும், ஒன்றோடொன்று சரியாயிராத புருவங்களை யுடையார்கள் தரித்திரர்களாகவும், மூன்றாம்பிறைச் சந்திரன்போல் வணங்கிய புருவங்களைப் பெற்றவர்கள் மஹா தனிகர்களு மாகின்றனர்.

## நெற்றியின் லட்சணமறிய.

நீண்டிருப்பவையும், நன்றாகச் சேர்ந்தவையுமான புருவங்களோடு கூடிய புருஷர்கள் மஹா தனிகர்களாகின்றனர். ஒன்றோடொன்று சேராத புருவங்களைப் பெற்றவர்கள் தரித்திரர்கள். எவர்களின் புருவங்கள் நடுவில் வணக்கமுற்று யிருக்கின்றனவோ அந்த புருஷர்கள் புணரத்தகாத மாதரிடத்தில் ஆசைக்கி யுடையார்க ளாகின்றனர்.

## நெற்றியிலுள்ள ரேகைபலன்.

உயர்ந்தும் அகன்றுமிருக்கிற நெற்றியையுடைய புருஷர்கள் புண்ணியவான்களும், செல்வத்தை யுடையவரு மாகின்றனர். பள்ளமான நெற்றியைப்பெற்றவர்கள் பிள்ளைகளும், பொருளுமில்லாத தரித்திரர்களாம். மேடுபள்ளமுடைய நெற்றியைப்பெற்றவர்கள் மஹா தனிகராவார். பாதிசந்த்ர பிம்பம்போன்ற நெற்றியோடு உடயவர்கள் மிக்கசெல்வராவார்கள். முத்துச்சிப்பிபோல் அகன்றிருக்கிற நெற்றியையுடைய புருஷர்களுக்கு குருவாயிருக்கையானது உண்டாகிறது. நரம்புகளால் வியாபித்த நெற்றிகளால் அதர்மத்தில் இச்சையை அடைகின்றனர். ஸ்வஸ்திகமென்னும் ஒருவிதரேகைபோல அமைந்துநெற்றியில் காணப்படுகிற உயர்ந்தநரம்புகளால் தனிகராகின்றனர். ஆழ்ந்ததாகிய நெற்றியையுடையார்கள் கொலைநிமித்தமான சிறையில் அடைக்கப் படுவார்கள். கொடிதாகிய தொழிலில் இச்சை

யுடையார்களுமாகின்றனர். உயர்ந்த நெற்றிகளோடு கூடியவர்கள் அரசர்களாகவும், நெருங்கிய நெற்றியை யுடைய புருஷர்கள் தரித்திரர்களாகவும் ஆகின்றனர்.

## அழுகையின் பலன்.

தீனதசையை யடையாததும் கண்ணீரில்லாததும் அழகியதுமான அழுகையானதுமனிதர்களுக்கு சுபத்தைத்தருவதாம். குரூரமாகி தீனதசையையடைந்ததும் அதிகமான கண்ணீரை யுடையதுமான அழுகையானது புருஷர்களுக்கு சுபத்தைத்தருகிறதில்லை. நடுக்கமற்ற சிரிப்பானது சுபத்தைத்தருவதாகும். பாஷ்டனுடைய சிரிப்பானது மூடியகண்களோடு கூடியதாக உண்டாகும். சந்தோஷித்தவனுக்கும் பயித்தியக் காரனுக்கும் அடிக்கடி சிரிப்பு உண்டாகின்றது.

## சிரிப்பின்பலன்.

நெற்றியில் நீண்டிருப்பவையான மூன்றுரேகைகள் இருந்தனவாகில் அந்தரேகைகள் நூறுண்டு பிழைத்திருப்பவர்களுக்கு உண்டாகின்றன. அவ்விதமான நான்கு ரேகைகளால் தொண்ணூற்றைந்து ஆயுஸ்ஸானது ஆகிறது. நெற்றியில் இடையில் அறுந்துபோன ரேகைகளால் புணரத்தகாதமாதரை அடைகிறவர்களாகின்றனர். ரேகைகளின்றியிருக்கிற நெற்றியினுல்தொண்ணூராயுஸ்ஸை யுடையவனுகவும், மயிர்வரையில்வளர்ந்திருக்கிற ரேகைகளால் எண்பது வருஷகாலம் ஆயுஸ்ஸை யுடையவனுகிறுன்.

## நெற்றியின் ரேகைபலன்.

நெற்றியில் ஐந்து ரேகைகளால் எழுபது ஆயுஸ்ஸ-ம், ஆறு ரேகைகளால் அறுபது ஆயுஸ்ஸ-ம், அதிகரேகைகளால் ஐம்பது ஆயுஸ்ஸ-ம், கோணியிருக்கிற நெற்றியில் ரேகைகளால் நாற்பது ஆயுஸ்ஸ-ம், ஆகிறது.

நெற்றியில் நடுவிலிராமல் புருவங்களைப் பற்றி யிருக்கும் ரேகைகளால் முப்பதுவயதும், இடதுபக்கத்தில்கோணியிருக்கும் ரேகைகளால் இருபதாயுசும், மெல்லிய ரேகைகளால் அல்பாயுசும், குறிகியிருக்கிற ரேகைகளால் அல்பாயுசிலும் மத்தியாயுஸ்ஸாகவும் ஊஹித்து கற்பிக்கத்தகும்.

## சென்னியின்பலன்.

உருண்டை வடிவையுடைய தலைகளோடு கூடியவர்கள் பசுக்களால் நிறைந்தவர்களாகவும் குடைபோன்ற தலையுடையார்கள் அரசர்களாகவும் சப்பட்டைத் தலைகளைப்பெற்றவர்கள் தந்தை தாய்களைக் கொல்லுகிறவர்களு மாகின்றனர். எலும்பு பருத்த தலையுடையார்களுக்கு நெடுங்காலங் கழித்தபின் மரணம் உண்டாகும்.

பானைபோன்ற தலையுடையவன் தியானத்தில் ருசியையுடையவன். இரட்டைத் தலையையுடையவன் பாபத்தைச் செய்கிறவனும் தரித்திரனுமாகிறான். பெரியோர்களுடைய தலையானது பள்ளமுடையதாகவும், வெகுபள்ளமுடைய தலையானது மிகவும் அனர்த்தத்தைத் தருகிறதாகிறது.

தலையில் ஒவ்வொன்றாக உண்டானவைகளும் மழமழப் புள்ளவையும், கறுத்தும், வணங்கியும், பிளவாத நுனியை யுடையவையும், மெதுவாகி அதிகமாகாதவையுமான தலைமயிர்களோடு கூடியவன் சுகத்தை அடைந்தவனாகவாகிலும், அரசனாக வாகிலும் ஆகிறான்.

## புருஷலக்ஷண பொதுப்பல னறிய.

அதிகமாக ஆழ்ந்த வேரையுடையவையாகி ஒன்றோடொன்று சரியான அளவைப்பெற்றிராமலும், பருத்தும், பிளந்துமிருக்கிற நுனியைப்பெற்றவையும், மிகக்குரூரங்களாகி நிகளமேயிராமல் குறுகினவையும், மிகக்கோணிநெருங்கியு மிருக்கிற தலைமயிர்கள் தரித்திரனுக்கு உண்டாகின்றன.

மாம்சமின்றி உலர்ந்து அநேகம் நரம்புக ளுயர்ந்து தெரிகிற குரூரமானசரீரம் எது எது உண்டோ அந்தந்தசரீரம் அநிஷ்டபலனைத் தருவதாம். இவ்விதமாகாமல் வேறுவிதமான சகலசரீரமும் சுபபலனைத் தருவதாகச் சொல்லப்படுகிறது.

மூன்றவயவங்களில் விசாலமானவனும், மூன்றிடங்களில் ஆழ்ந்தவனும், ஆறு அவயவங்களில் உயர்ந்தவனும், நான்கு அவயவங்களில் குறுகினவனும், ஏழு இடங்களில் சிவந்தவனும் அரசனாகிறான். ஐந்திடங்களில் நீண்டிருப்பவன் பூஜிக்கத் தக்கவனாகிறான்.

புருஷர்களுக்கு நாபி, குரல், ஸ்வபாவம், இவைமூன்றும் ஆழ்ந்திருக்கில் சிறந்தவையாம், மார்பு, நெற்றி, முகம்ஆகிய இம்மூன்றும் அகன்றதாகிய சிறந்தவையாம், மார்பு, கக்ஷங்கள்,நகங்கள், மூக்கு, முகம், பிடரிஆகிய ஆறும் உயர்ந்திருக்கில் சிறந்தவையாகின்றன. ஆண்குறி, முதுகுகழுத்து, முழங்காலின் கீழ்ப்புறங்கள் இந்நான்கும் குறுகினவையாகிச் சிறந்தவை யாகின்றன. இவைகள் இவ்விதமாயிருக்கில் இஷ்டபலனைத்தருவனவாம்.

கடைக்கண்கள், கால்கைகள், தவடை, மேலுதடு, கீழுதடு, நாவு, நகங்கள் என்ற இந்த ஏழுஸ்தானங்கள் சிவந்தவை யாகில் சிறந்தவைகளாம். பற்கள், விரற்கணுக்கள், மயிர்கள்,நகங்கள், தோல் இவ்வைந்தும் சூக்ஷமங்களாயின் சுகத்தைத்தருகின்றனவாம். இவ்வித அவயவங்கள் துக்கமுடைய புருஷர்களுக்கு உண்டாகிறதில்லை.

புருஷர்களுக்கு தவடைகள், கண்கள், கைகள், மூக்கு, ஸ்தனங்களின் நடு ஆகிய இவ்வைந்தும் நீண்டிருக்கில் அரசர்களாகின்றனர். அரசர்களில்லாத மற்றவர்களுக்கு இப்படி ஆகிறதில்லை.

**புருஷ ஸாமுத்திரிகம்**

*முற்றிற்று.*

---

## மலையாளக்குறிசாஸ்திரம்.

மனிதர்களில் பெரும்பாலகர் எக்ஷணிவசியம் செய்துக்கொண்டு குறிசொல்லுவது வழக்கமா யிருந்திடினும் அதற்குகை ஆதாரமானநூல் ஒன்றிருக்கவேண்டு மென்பதற்காகவே இந்த எக்ஷணி ஆரூடமென்னும் மலையாளக்குறிசாஸ்திரம் வாங்கிவைத்திருப்பாரானல் இன்னின்ன கிழமையில் இன்னின்ன ஜாமத்தில் இன்னின்னதிக்கிலிருந்து சொன்னல் உத்தமம், மத்திபம் அதமமெனும் மூன்றுகாலங்களின் விபரப்படியே கேட்போருக்குச் சொல்வதற்காகும். இதன்விலையோ அணா-1.

உ

கடவுள் துணை.

# ஸ்த்ரீஸாமுத்திரிகம்.

## பாதலக்ஷணமும் கணுக்கால் முழங்கால்பலன்.

எந்தபெண்ணினுடைய பாதங்கள் மழமழப்புடையவையும் உயர்ந்த நுனியைப் பெற்றவையும், சூக்ஷமமும் சிவந்தவையுமாகிய நகங்களை யுடையவையும், சரிபாக மேடுபள்ள மில்லாமல் சதைபெருத்தவையும், அழகுள்ளவையும், மறைந்திருக்கிற கணுக்காலின் கறடுகளை யுடையவையும், சேர்ந்திருக்கிற விரல்களைப்பெற்றவையும், தாமரைமலரின் காந்திபோன்ற காந்தியைப்பெற்ற உள்ளங்கால்களை யுடையவையுமாக இருக்கின்றனவோ, அவளை விவாகஞ்செய்தவன் பூமியை அதிபதியாக ஆள இச்சிக்கிறவன் (அவளை விவாகம்செய்தால் இராஜாவாகிறான் என்பதுகருத்து.)

மத்ஸியம், அங்குசம், கமலம், யவதான்னியம், வச்ராயுதம் கலப்பை, கத்தி ஆகிய இவைகளின் ரேகைகளைப்பெற்று, வேர்வையற்று, மெதுவாகிய உள்ளங்கால்களை யுடைய பாதங்கள் சிறந்தவையாம், மயிர்களின்றி நரம்புக ளில்லாதவையான முழங்கால் கீழ்ப்புறமாகிய ஜங்கைசிறந்ததாம். ஒன்றோடொன்று சரியானதாகிச் சந்தியில் பருத்திராமல் ஒரேவிதமாய்இருக்கிற முழந்தாள்கள் சிறந்தவையாம்.

## தொடையின் லக்ஷணமும் இடையொடு நாபிபலனறிய.

ஒன்றோடொன்று நெருக்கமுற்று யானை துதிக்கையோடொத்தவையும், மயிரற்றவையுமான தொடைகளும், ஆகிய இவைகள் சிறந்தவையாகி அதிகசெல்வத்தை அளிக்கின்றன.

அகன்றதாகி மாம்ஸத்தினால் பருத்துயர்ந்து பளுவுடையதுமான ஸ்திரீகளுடைய இடுப்பின் பின்புறமானது அரை

நூல் மாலே என்னும் ஆபரணத்தை அணியும். ஆழ்ந்ததும் அகன்றதும் பிரதக்ஷிணமான சுழியைப் பெற்றதுமாகிய நாபி சிறந்ததாகும்.

## இடை மார்பு கழுத்து இவைகளின் லக்ஷணபலனறிய.

திரிவலி என்னும் மூன்றுசதை மடிப்போடுகூடி மயிரில்லா இடையும், உருண்டு, நெருங்கி, ஒன்ருேடொன்று பேதமின் கடினங்களான ஸ்தனங்களும், மயிரின்றியே மெதுவான மா பும், சங்குபோன்றதாகி உயர்ந்திருக்கிற கழுத்தும், ஸ்திரீகளு க்கு தனசுகங்களேத் தருகின்றன.

## உதடோடு பற்களின் லக்ஷணபலன்.

செம்பருத்தி புஷ்பம் போன்றதும், அழகிய கோவப்பழ தோடொத்தும், சதை பருத்திருப்பதுமாகிய கீழ்உதடும், கு க்கத்தி மொக்குகளுக் கொக ஒன்ருேடொன்று சரியானவை ளுமான பற்களும், ஸ்ரீகளுக்கு பதியினுலுண்டாகும் சுகம், செ ல்வம் இவைகளேத் தருவனவாம்.

## ஸம்பாஷணை பலன்.

ஸ்திரீகளுடைய சம்பாஷணமானது நயத்தோடுகூடிய வ சனேயின்றி குயில், அன்னம் இவைகளின்குரலே நிகராகப்பெற் று, அழகியதாகி, தீனதசையை யடையாம விருப்பது அதிகசு கத்தைத் தருவதாகும். நேராகி ஒன்ருே டொன்று சரியான நுனியையுடையதும் அழகியதுமானநாசியையும், அலர்ந்தகரு நெய்தலி னிதழின் காந்தியை வெல்லுகிற காந்தியை யுடைய தான கண்ணும் சிறந்தவையாம்.

## புருவமுதலிய லக்ஷணம்.

ஒன்ருேடொன்று சேராமலும், அதிக விசாலங்கள் ஆகாமலும், தொங்காமலும், பாலசந்திரனுகிய மூன்ரும் பிறைபோல் கோணியிருப்பவையுமான புருவங்கள் சிறந்தவைகள். அர்த்தசந்திரன்போன்ற ரூபத்தை யுடையதும், மயிர்களின்றி வணங்காததும், உயர்ந்திராததுமான நெற்றி யானது மிகச் சிறந்தது.

## செவிசென்னிபலன்.

தருந்தபடி மாம்ஸத்தைப்பெற்றதும், மெதுவானதும், ஒன்ரேடொன்று சரியானதும், சப்தத்தைக்கேட்பதில் ஜாக்கிறதையுடையதுமான செவிகளிரண்டும் சிறந்ததாகும். மழமழப்புடையதாகி, கறுத்து, மெதுவாகிக், கோணி, வணங்கியும், இரட்டையாகவன்றி ஒவ்வொன்ருக முளைத்து மிருக்கிறதலைமயிர்களும், நீண்டு, கோணி, மேடுபள்ள மில்லாமல் சிறிதானதலையும் சிறந்தவையாம்.

## இராஜபத்தினியாவதறிய.

பொன்கிண்டியாகிய கூஜா, சிங்காஸனம், குதிரை, யானை, தேர், கற்பகவிருக்ஷம், யூபஸ்தம், பாணங்கள், மாலை, குண்டலம், சாமரம், அங்குசம், யவதான்னியம், மலை, டக்கயம், தோரணம், மத்ஸ்யம், ஸ்வஸ்திகம், வேதிகை இவைகளை யொத்த ரேகைகளை உள்ளங்கையி லாகிலும், காலிலாகிலும் கூடியிருக்கிற ஸ்திரீகள் ராஜபத்தினிகளாகின்றனர்.

## சுமங்கலியாக பிள்ளைகளைப்பெற்று வாழ்பவளெனவறிய.

ராஜமஹிஷியினுடைய கைகள் மறைந்த மணிக்கட்டையுடையவையும், அலர்ந்தழகிய தாமரைமலரின் உட்புறம்போன்றவையும், சூக்ஷ்மங்களாயும், நெருங்கியுமிராதபடி தூரத்திலிருக்கிற கணுக்களையுடையவையுமான விரல்களைப் பெற்றவையுமாகின்றன. பள்ளமுமாகாமல், உயர்ந்ததுமாகாமல், சமமானரேகைகளோடு கூடிய உள்ளங்கை யானது, ஸ்திரீயை நெடுங்காலம் சுமங்கலியாகவும், பிள்ளை, சுகம், தனம் ஆகிய இவைகளைப்பெற்று அனுபவிக்கிறவளாகவும் செய்கிறது.

## கணவ னரசனுவானென்ப தறிய.

ஸ்திரீயினுடைய உள்ளங்கையில்மணிக்கட்டினின்றும் உண்டானரேகையானது நடுவிரலையுடைந்தாலும் இல்லாவிடில் உள்ளங்காலில் நிகளமாக ஊர்த்துவரேகை யிருந்தாலும் புருஷனுக்கு இவ்விதமாயிருந்தபோதிலும், அந்தரேகை ராஜ்ஜிய சுகத்தைத்தரும் ஸ்திரீக்கு இவ்விதரேகையிருந்ததாகில் அவள் பதி அரசனுவான் என்பதுகருத்து.

## ஆயுசுரேகையறிய.

கனிஷ்டிகை என்னும் சுண்டுவிரலின் அடியினின்றுமுண்டான எந்தரேகையானது பிரதேசினீ என்னும் பெருவிரலுக்கும் நடுப்பாகத்தை அடைந்ததோ, அந்தரேகையானது முடிவான ஆயுசின் கணக்கில் பிரமாணமாகிறது. அது அவ்வளவுநிகளமாயிராமல் குறைந்திருக்கில் ஆயுசைக்குறைக்கிறது.

## அற்பாயுசும் தீர்க்காயுசும் பிள்ளைகளில்லையுண்டெனவறிக.

ஸ்திரீகளுக்குப் பெருவிரலடியில் பிரசவத்தைச் சொல்லுகிற ரேகைகள் உண்டாகின்றன. அவைகளில் பெரிதாகிய ரேகைகளால் பிள்ளைகளென்றும், சூக்ஷ்மரேகைகளால் ஸ்ரீபிரசவமென்றும், நடுவில் அராமல் நிகளமாய் இருக்கிற ரேகைகளால் தீர்க்காயுசையுடைய குழந்தைகளென்றும், நடுவில்அறுந்து நிகளமில்லாமலிருக்கிற ரேகைகளால் அற்பாயுசாகிய பிள்ளைகளென்றும் அறியத்தக்கது.

## லக்ஷணமறியும் விபரம்.

இவ்விதமாக ஸ்ரீகளுடைய சுபலக்ஷணமானது சொல்லப்பட்டது. இதைக்காட்டிலும் வேறான லக்ஷணங்கள் அசுபபலனைத்தருவதாகும். அவ்வனிஷ்டபலனைத்தரும் லக்ஷணங்கள்விசேஷித்திருப்பதை யான் இங்குசுருக்கமாகச் சொல்லுகிறேன்.

## பாபியும் விபசாரியுமறிய.

எந்த ஸ்திரீயினுடைய காலில் சுண்டுவிரலாகிலும், அதற்கடுத்தவிரலாகிலும் பூமியில்படுகிறதில்லையோ அந்தஸ்ரீயும், எவளுடைய காலில் பெருவிரலுக்கு அடுத்த விரலானது பெருவிரலைக்காட்டிலும் நீண்டிருக்கிறதோ அந்த ஸ்ரீயும் விபசரிப்பவளும் மஹாபாபத்தைச் செய்கிறவளுமாகிறாள்.

ஆண்பெண் அவயவங்களின்
இரேகைசாஸ்திரம்
முற்றுப்பெற்றது.